8-NOV 1944
MADRAS

வசந்தம்

விலை
8
அணா

தாரண - ஆவணி

1944 - ஆகஸ்ட்

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ்

லிமிடெட்.

ரிஜிஸ்டார்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஹ கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சி பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முருக்கு, காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்டிங்,
மல், சதர்,

தயாரிக்கிறோம்

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிள்ாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

8-NOV 1944
MADRAS

இரண்டு இலைகளும் ஒரு தளிரும்...

'இரண்டு இலைகளும் ஒரு தளிரும்' உள்ளபடி பார்த்துத் தேயிலை கொய்வதுதான் உயர் ரகத் தேயிலைக்கு அடையாளம். இந்த முறைப்படி, மிகவும் இளசான, தளிர் போன்ற மெல்லிய தேயிலைகளே சேகரிக்கப்படுகின்றன.

ப்ரூக் பாண்ட் கம்பெனியார் தங்கள் விற்பனை அதிகாரிகள் மூலம் எல்லா வியாபாரிகளுக்கும் அடிக்கடி புதிய சரக்குகள் சப்ளை செய்கிறார்கள். இந்த ஏற்பாட்டின் பயனாய் 'இரண்டு இலைகளும் ஒரு தளிரும்' உள்ள தேயிலை புது மணங் கமழ உங்களுக்குக் கிடைக்கிறது.

எங்கள் பாக்டரிகளிலிருந்து புத்தப் புதிய தேயிலை இந்தியாவில் எல்லா முக்கியமான ஊர்களிலும் உள்ள எங்கள் டிப்போக்களில் ஸ்டாக் செய்யப்படுகிறது. இந்த டிப்போக்களிலிருந்துதான் எங்கள் விற்பனை அதிகாரிகள் அவ்வப்பொழுது சரக்குகள் எடுத்து விநியோகிக்கிறார்கள்.

மணமும் சுவையும் மிகுந்த புத்தப் புதிய தேயிலை வேண்டுபவர்களுக்கு எங்கள் டார்ஜீலிங் பிளெண்ட் மிகவும் உகந்தது.

ப்ரூக் பாண்ட்

பறக்கும் குண்டுகளும், ஜப்பானியரின்
கொடுமைகளும் நிறைந்த இந்தப் போரில்

செஞ்சிலுவை

மனித சமுதாயத்திற்காக பாடுபடுகிறது. நோயாளிகளையும்
காயமடைந்தவர்களையும் காப்பாற்றுகிறது.
யுத்தக் கைதிகளுக்கு ஊக்கமளிக்கிறது.

எனவே

"செஞ்சிலுவைக்காக"

என்ற தலைப்பில்

மே. த. கவர்னர் யுத்தநிதிக்கு

பண உதவி செய்து

ஒரு சிறந்த காரியத்திற்கு உதவி புரியுங்கள்

★ எல்லா நேர்த்தியான
★ வாசனைகளுக்கும்
★ அடிப்படையானது.

மைசூர்

சந்தன எண்ணெய்

கவர்ன்மெண்ட் சேண்டல் வுட் ஆயில் பாக்டரி,
மைசூர்

அஜாக்ஸ்

உங்கள் தற்காப்புக்காக

வீட்டிலாகட்டும், ஆபீசிலாகட்டும் அஜாக்ஸ் இரும்புச் சாமான்கள் பாதுகாப்புடன், சோபையுமளிக்கின்றன. உறுதியான அமைப்பும், அழகான தோற்றமு முள்ளவை.

உங்கள் விலையுயர்ந்த பொருள்களைக் காக்க **அஜாக்ஸ்** இரும்பு அலமாரிகளையே தேர்ந்தெடுங்கள். திருடர்கள் முயற்சியை வீணாக்குவதிலும் நெருப்பு, கரையான் முதலிய நாசம் உண்டு பண்ணும் பூச்சிகள் இவைகளால் சேதமடைவதை தடுப்பதிலும் தலை சிறந்தவை



பெருந் தீயையும், பக்காத் திருடர்களையும் எதிர்த்து நிற்க, மிகச்சிறந்த பொருள்களைக்கொண்டு ஏற்ற வகையில் செய்யப் பட்டவை இந்த இரும்புப் பெட்டிகள்.



Ajax

PRODUCTS LTD.

106, ARMENIAN STREET, MADRAS.

AS-K.6

மானேஜிங் ஏஜண்ட்ஸ்: முருகப்பா & சன்ஸ்; கோயமுத்தூர்.

சகல பண்டங்களுக்கும் போக்குவரத்து சாதனங்கள்

கீழ்க் கண்ட ஊர்களிலிருந்து ஊர்களுக்கு லாரி மூலம் வியாபார, விவசாய பண்டங்களை வீட்டுக்கு வீடு கொண்டு போய்ச் சேர்க்க வசதிகள் இருக்கின்றன.

ஸ்ரீ ராம விலாஸ் சர்வீஸ் லிமிடெட்

202/203, மௌண்ட் ரோடு, மதராஸ்

போன்: மதராஸ் "8536" : : தந்தி: "ROAD HAUL" மதராஸ்

கிளை ஆபீஸ்கள்:

1 செரி ரோடு, சேலம்
2. ஈஸ்வரன் கோவில் தெரு, கோயமுத்தூர்
3 கண்டோன் மெண்ட், திருச்சினுப்பள்ளி
4 கிருஷ்ணராயர் தெப்பக்குளத் தெரு, மதுரை
5 ஸ்ரீ நரசிம்ம ராஜாரோடு, பெங்களூர்

மார்க்கங்கள்

1 மதராஸ் — சித்தூர் — பெங்களூர்
2 மதராஸ் — வேலூர் — சேலம் — கோயமுத்தூர்
3 மதராஸ் — திருச்சி — மதுரை — திருநெல்வேலி
4 கோயமுத்தூர் — கள்ளிக்கோட்டை
5 கோயமுத்தூர் — கரூர் — திருச்சினுப்பள்ளி
6 சேலம் — நாமக்கல்— திருச்சினுப்பள்ளி

உங்களது பணியைச் செய்ய எப்போதும்

காத்துள்ளோம்.

வசந்தம் வாசகர்களே!

உங்களுக்கு எது தேவை?

சுடர் மிகுந்த வைரங்கள்

தங்க நகைகள்

வெள்ளி சாமான்கள்

எனமல் மோதிரங்கள்

GOLD & SILVER WARES
K.R. & SONS
(PHONE No. 226) JEWELLERS, COIMBATORE.

முதன்மை ஸ்தானம்

வகிப்பது

சிறந்த
வேலைப்பாடுள்ளது

உத்திரவாத முள்ளது

K R

சீல்

எல்லோரும்
விரும்புவது

PHONE 226

தந்தி கிருஷ்ணு

கே. ஆர். & சன்ஸ்,

நகை வியாபாரம்

பெரிய கடை வீதி : : கோயமுத்தூர்

கட்டிட நிர்மாண கட்டுப் பாடுகளை எடுத்த பின் நமது நகர அமைப்பை திருப்பி அமைக்க ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அதற்கு வேண்டியே நாம் ஆவலாய் இருக்க வேண்டும்.

காங்க்ரீட், மிகவு முக்கியமான சாமான். நமக்கு புழுதியடையாத ரஸ்தாவையும், தண்ணீர் சப்ளை வசதிகளையும், சாக்கடை வசதிகளையும் தருகிறது மேலும் அது கட்டிடத்திற்கு ஒரு தனி அழகையும், எல்லா கார்யமும் நடத்த சௌகரியத்தையும் கொடுக்கிறது.

காங்க்ரீட், கட்டிடத்தில் அடிக்கடி மராமத்து செய்ய வேண்டிய சிலவையும் ஒழிக்கிறது.

புதிய முறைப்படி நகர நிர்மாணத்தில் ஈடுபட்டவர்களுக்கு காங்க்ரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா எப்பொழுதும் இனமாக சேவைசெய்யத் தயாராயிருக்கிறது. வேண்டுபவர்கள் கீழ்க்கண்ட விலாசத்துக்குஎழுதவும்:

டிபார்ட்மெண்ட் 122/C தி காங்க்ரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா 199 மௌன்ட் ரோட், மதருஸ்.

தி சிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா • லிமிடெட் •
ஸி.எம்.ஐ
டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்
ஆப்
சிமெண்ட்

வசந்தம்

மலர் 3] பொருளடக்கம் [இதழ் 4

தொழில் ...	'கதிரவன்' ...	1
வினையும் விளையாட்டும் ...	ரா. நா ...	2
சாபம் ...	"சுகி" ...	4
இராம சரிதம் ...	புரபஸர் A. சக்கரவர்த்தி ...	9
படைப்பு ...	சி. எஸ். ஆர் ...	12
கல்வெட்டுகள் ...	அ. கிருஷ்ண மூர்த்தி ...	13
துறவு ...	'அம்பலவாணன்' ...	17
சிலப்பதிகாரம் ...	சர். சண்முகம் செட்டியார் ...	18
புத்தக ஆராய்ச்சி ...	... ...	27
இருளும் ஒளியும் ...	எஸ். ஆர். வெங்கடேஸ்வரன் ...	28
உள்ளும் புறமும் ...	தி. நா. சு ...	33
நல்ல வேளை ...	எஸ். வி. எஸ் ...	39
ஞானோதயம் ...	'பாசரசு' ...	40
போகி, ஞானி ...	பாரதி ...	44
புதிர் ...	சிவஞானம் ...	45
சாவித்திரி ...	ஆர். ஷண்முகசுந்தரம் ...	49
நாடகமா ? ...	'சுவான்' ...	57
வளையல்க்காரி ...	கே. விஜயராகவன் ...	61
கலைக் கோயில் ...	சுத்தானந்த பாரதி ...	65
கப்பல் அலைகள் ...	வாசுதேவன் ...	70
வர்ண விசித்திரம் ...	ஊ. பா. குமாரசாமி ...	71
கதம்பம் ...	சரசுவதிபாசு ...	76
மலர் மணம் ...	... ...	79

8-NOV 1944
MADRAS

விளம்பர அட்டவணை

வசந்தா மில்ஸ் – அட்டை (முன் உள்) பக்கம்	
புரூக் பாண்டு	I
கவர்னர் யுத்தநிதி, மைசூர் சந்தண எண்ணெய் ...	II
அஜாக்ஸ்	III
ஸ்ரீ ராமவிலாஸ்	IV
கே. ஆர். & சன்ஸ்	V
சிமெண்ட்	VI
நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்	VIII
இண்டோ கமர்ஷியல் பாங்க்	IX, X
அரவிந்த் மில்ஸ்	XI
கந்தன் & கோ, வி. கே. வெள்ளையப்ப செட்டியார் ...	XII
உம்முடியார், ஓவர்ஸீஸ் ரெப்பிரசென்டேஷன் ...	XIII
பர்மாஷெல், கோயமுத்தூர்	XIV
ஜம்பு & கோ, ஏ. பி. ஆர்	XV
குப்பு ராஜ், பீமைய செட்டி, ஆர்ய வைத்தியர், வசந்தா டையிங் ஒர்க்ஸ், கே. பீ. ஆர். ...	XVI
ஆர். பத்மநாப நாயுடு	XVII
ராஜு செட்டி–அட்டை (பின் உள்) பக்கம்... ...	
சென்டிரல் ஸ்டுடியோஸ் அட்டை கடைசிப் பக்கம் ...	

எல்லா நலங்களும் பெற

● **எல்லா தேசங்களும் தங்கள் தலைவர்களையே** எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய எண்ணங்களெல்லாம் யுத்தத்திற்குப் பின் புனர் அமைப்புத் திட்டங்களிலும் எல்லா நலங்களும் பெற, என்ன செய்வது என்ற முக்கிய பிரச்சனையிலுமே சிந்தை லயித்திருக்கிறது.

● **குடும்பத் தலைவரும் பாதுகாப்பாளருமான உங்களுக்கு** உங்கள் மனைவி மக்கள் சந்தோஷமாகவும் சௌக்கியமாகவும் வாழ்வதெப்படி என்பதிலேயே கவனம் சென்றிருக்கிறது. நீங்கள் எப்போதாவது உங்களுடைய அன்புக்குகந்தவர்கள் எல்லா நலங்களும் பெற என்ன செய்வது என்பதைப் பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

● **வாழ்க்கை** எப்போதுமே உங்களுக்கு இன்பகரமாயிராது. உங்கள் உயிருக் குயிரானவர்களிட மிருந்து விதி திடீரென சதி செய்து பிரித்து விடலாம். அப்போது மரணத்திற்குப் பின் பிரச்சனை எழுகிறது. அப்போது யார் அவர்களைக் காப்பாற்றுவார்கள்? உங்களுடைய சந்ததியின் நல் வாழ்வுக்காகவும் கல்விக்காகவும் யார் நிதி சேகரித்து வைத்திருக்கிறார்கள்?

எங்களைக் கலந்து ஆலோசித்தால் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்து உதவத் தயாராயிருக்கிறோம்.

★

தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பனி

லிமிடெட்

தலைமை ஆபீஸ்: **பம்பாய்**

சென்னை கிளை: **4 & 5 முதல் லைன் பீச், சென்னை**



நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான்

— கம்பர்

அட்டைச் சித்திரம் :

தொழில்

வித்துக்கு விளைவுண்டு —
வேலைக்குக் கூலியுண்டு
சொத்தையெனச் சோம்பாது
சுறுசுறுப்பாய் வேலை செய்வோம்!

வயிற்றெக்கித் தள்ளாடும்
வறுமை தரும் சிறுமையில்லை
கயிறு முறுக்கியேனும்
கஞ்சி குடிப் போமடா!

உழைப்பவர்க்குச் சீதேவி
உட்கார்ந்தால் மூதேவி!
பிழைப் பதற்குக் கவலையில்லை
பிடி கலப்பை நல்லண்ணே!

பஞ்சிலே நூலிழுத்துப்
பாவாடை தைத்திடுவோம்
அஞ்சிலே வளைந்து ழைத்தால்
அறுபதுக்கும் பஞ்சமில்லை

— கதிரவன்

மனோ தத்துவம்:

வீணையும் விளையாட்டும்

ரா. நா.

அம்மா,

நான் உன்னை விட்டுப் பிரிந்து இரண்டு மாதங்களுக்கு மேலாகப் போகப் போகிறது. என்னிடமிருந்து கடிதமே வரவில்லை என்று நீ கவலைப்பட்டுக் கொண்டிருப்பாய். ஆனாலும் நான் என்ன செய்யட்டும். உன் மனம் குளிர எழுதுவதற்கு ஒன்றுமில்லை. அதனால்தான் அம்மா நான் எழுதவில்லை.

ஏராளமாக சீர் செலுத்தி எல்லாம் செய்து சந்தோஷமாகத்தான் அனுப்பினாய் என்னை. போன இடத்தில் சந்தோஷமாயிருப்பேன் என்றுதான் எண்ணிபிருப்பாய். ஆனால் நானும் கொடுத்து வைக்கவில்லை, நீயும் கொடுத்து வைக்கவில்லை.

என் கஷ்டத்தை யெல்லாம் எழுதி உன் மனதைக் கவலைக்கு ஆளாக்க நான் விரும்ப வில்லை என்றாலும் எத்தனை நாளைக்கு அம்மா தாங்கும் நான் படும் துயரம். யாரிடமாவது சொல்லிக் கொண்டால்தான் குறையும் போலிருக்கிறது அந்த துயரச் சுமை. நீயன்றி நான் யாரிடம் என் குறையைச் சொன்னால் தீரும்! சும்மா கதையை வளர்த்துவானேன். உன் மாப்பிள்ளைக்கு என்னைக் கண்டால் வேப்பங்காயா யிருக்கிறது. என் அப்படியிருக்கிறார் என்று கேட்கலாம் என்றால் நான் இருக்கிற பக்கம் அவர் வந்தால் தானே? அவர் அப்பா அம்மா மீது ஒன்றும் சொல்வதற்கில்லை. அவர்கள் பாவம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். புதிதாய் வந்த ஸ்ரீதேவியை அலட்சியம் செய்யலாகாதென்று. ஆனால் அதை யெல்லாம் அவர் லட்சியம் செய்தால்தானே.

வந்த கொஞ்ச நாளைக்கெல்லாம் யோசித்துப் பார்த்தேன் என் இவர் இப்படியிருக்கிறாரென்று. ஒருவேளை நான்தான் அவ்வளவு லட்சணமாயில்லை என்று நினைக்கிறாரோ என்று எண்ணினேன். நீ போட்ட நகைகளையெல்லாம் எடுத்து அலங்கரித்துக் கொண்டு அவர் வரும் வழியாகப் போவேன் அவர் முகத்தைத் திருப்பிக் கொண்டு போய் விடுவார்.

குடித்தன பெண்ணுக்கு அலங்காரம் என்ன வேண்டியிருக்கிறது என்று எண்ணுகிறாரோ என்று எவ்வித அலங்காரமுமின்றி சாதாரண புடவைகளைக் கட்டிக் கொண்டிருந்தேன். அப்பொழுதும் திரும்பிப் பார்க்கவில்லை.

அவர் அம்மாதான் சமையல் செய்வது. நான் சமையல் செய்கிறேன் என்று சொல்லி தினுசு தினுசாக பதார்த்தங்கள் செய்து அவர் அம்மாவையே பரிமாரச் சொன்னேன். நான் தயார் செய்தது என்றே என்னமோ போட்டது போட்டபடியே இருந்

தது. சரியாகச் சாப்பிடவே யில்லே.

என் விதியை நொந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லே போலிருக்கிறது அம்மா. இந்தப் புருஷர்கள் மனதுதான் என்ன கடினம். நம்ம மாதிரி அவர்கள் மனதிலிருப்பதை வெளியிலே சொல்ல மாட்டேனென்கிருர்கள்.

ஒருநாள் வீடடில் நான் மட்டும் தானிருந்தேன். அவர் அம்மாவும் அப்பாவும் யாரோ உறவினர் வீட்டில் விசேஷம் என்று போயிருந்தார்கள். அவர் ஆபீஸிலிருந்து வந்தார். உள்ளே போனுர். அம்மா இல்லே என்றவுடன் "எங்கே போயிருக்கிருள்" என்ருவது கேட்கலாமே. வாயை மூடிக்கொண்டு வெளியே போகப் புறப்பட்டார்.

என்னதான் ஆகிறது பார்க்கலாம் என்று வாசற்படியை மறைத்துக் கொண்டு எதிரே நின்றேன். அப்பொழுது அவர் முகத்தைப் பார்க்கணுமே. எள்ளும் கொள்ளும் வெடித்தது. எனக்குப் பேச வாயில்லே. துக்கம் நெஞ்சை அடைத்தது. தட்டுத் தடுமாறிக் கொண்டு "என் என்னே இப்படி வதைக்கிறீர்கள். பெண் பாவம் பொல்லாது" என்றேன்.

"பாவமாம் புண்ணியமாம். எது துணிச்சல் ஜாஸ்தியாகி விட்டது போலிருக்கிறது" என்று பல்லேக் கடித்தார்.

"இப்படி வாட்டுவதை விட உங்கள் கையாலேயே என்னேக் கொன்று விடுங்களேன். சந்தோஷமாய் செத்துப் போறேன்"

என்று சொல்வதற்குள் துக்கம் தாங்கவில்லே. அழுதுவிட்டேன்.

"ஏன் சாக வேண்டும். செத்துப்போனுல் உன் அத்தான் என்ன சொல்வான்" என்ருர்.

அம்பு பட்ட மான்போல் சாய்ந்தேன். தலே சுழன்றது. உலகமே சுழலுவது போலிருந்தது.

மூர்ச்சை தெளிந்து எழுந்திருந்தேன். என் இவர் இப்படிச் சொல்லுகிருர் என்று யோசித்தேன். என் கலியாணத்தின் போது பந்தலில் அத்தான் என்னே கேலி பண்ணிச் சிரித்தாரே இல்லேயோ. அது இவர் மனதில் விஷத்தைச் சேர்த்தி விட்டது போலிருக்கிறது. அம்மா! ஒரு பாவமும் நானறியேன். அத்தானும் கல்மிஷமில்லாதவன். இப்படி இவர் நினேக்கிறது நியாயமா? இவர் விளேயாடுவதில்லேயா? நான் என்னடியம்மா செய்வேன்? இவர் மனதைத் திருப்புவதற்கு?

உன்,

கமலா

★

சிந்தனைச் சித்திரம் :

சரபம்

"சுகி"

வால் நட்சத்திரத்திற்கும், ராஜ பரம்பரைக்கும் துன்பத்தொடர்பு இருக்கிறதாம். குறுக்கும் நெடுக்குமாக பிராணிகள் ஒரு சில வந்து விட்டால், நம் வாழ்வே கோணலும் மாணலுமாக ஆய்விடும் என்பது நம்பிக்கை. 'புகுந்த' வேளை சரியில்லாததால் சாவு நேர்ந்து விட்டதாகப் பெண்ணைத் திட்டும் நபர்களைப் பார்த்திருக்கிறேன். எங்கோ உள்ள கோளங்களும், கிரகங்களும் மனுஷ்ய வாழ்க்கையை நிர்ணயம் செய்துவிட முடியுமா?

முடியும் என்றுதான் நம்ப வேண்டியதாயிற்று. பந்துத்துவம், சொந்தம் எதுவும் இல்லாத ஒரு நபரின் வாழ்க்கை, ஒரு குழந்தையின் பிறந்த நேரத்தால் துன்பம் அடைய நேரிட்டால் அதை என்ன சொல்லுகிறது. பிறந்த நேரத்தின் பயன் அந்தக் குடும்ப நபர்களின் விதியோடு விளையாடினல் அதையாவது நியாயம் எனலாம். எங்கோ உள்ள வால் நட்சத்திரத்தின் பிறப்பு, ராஜபரம்பரைக்கு இடுக்கண் விளைவிப்பானேன்? அதே கதிதான் அநாதியாகத் திரிந்த பையனுக்கும் நேர வேண்டுமா?

எங்கோ, பசியின் கொடுமை தாங்காமல், பிளாட்பாரக் கல்லில் தூங்கிக்கிடந்த அந்த அநாதியை அவர் எழுப்புவானேன்? தனக்கு ஆண் குழந்தை பிறந்து விட்டது, 'தான்புத்' தென்ற நரகத்திலிருந்து தப்பிவிட்டோம் என்ற மனக்கிளர்ச்சி அப்படிச் செய்யச் சொன்னதா?

நடுநிசியில் திருச்சி ரயில்வே ஸ்டேஷனுக்குள் நுழைந்தால் நட்சத்திரக் கூட்டங்களுக்குள் நீந்திச் செல்வது போன்ற பிரமை ஏற்படும். துலாம்பரமாக கண்ணுக்கெட்டிய தூரம் வரை எலெக்டிரிக் கம்பங்கள் தார்ரோட்டின் மத்தியில் அந்த நிசிவேளையில், அநாதிபோல பசுக்களும், பிச்சைக்காரர்களும், பொறுக்கிப் பையன்களும் அங்கங்கே படுத்திருக்கப் பார்க்கலாம். பச்சை முண்டாசுடன் வாடியிருக்கும் கொக்குப் போன்ற போர்ட்டர்கள் குத்துக் கல்லுப்போல உட்கார்ந்திருப்பார்கள்.

இவர்களையெல்லாம் தாண்டி வந்தபோது, யாருக்காவது தர்மம் செய்ய வேண்டுமென அவருக்கு ஆசை துடிதுடித்தது. அந்தக் காலத்தில் ராஜாக்கள், குழந்தை பிறந்ததும் எடைக்கெடை தங்கம் வழங்கினர்கள்; பொற்காசுகளை வீதிவழியே அள்ளி வீசினர்கள் என்றெல்லாம் சொல்லக் கேட்டிருக்கிறேன். குழந்தை பிறந்து விட்டால்,

முரசதிரக் கொட்டிவிடும் ஓசையினும்
கோவேந்தர் கால்த்தளையை
வெட்டிவிடும் ஓசை மிகும்

என்று படித்திருக்கிறேன். சிறைப்பட்ட அரசர்கள் விடுதலையாகி ஓடுவார்களாம். ஆனல் ராஜாராமின் குழந்தையால் யாருக்கு விடுதலை கிடைத்தது?

அன்றுதான் சம்பளம் வாங்கியிருந்த தினம். அவருக்கு முதல் குழந்தை. அதுவும் ஆண் அரசு பிறந்து விட்டது! தர்மம் செய்ய பாத்திரம் தேடினர். தூங்கிக் கிடந்த அநாதியை எழுப்பி ஒரு காலணுக் கொடுக்க நினைத்தார். கையில் ஒரு ரூபாய் அகப்பட்டது.

"டேய்...டேய்" என்ருர்.

"மூட்டையா சாமி. கொண்டாங்க" என்று புரண்டு படுத்தான் சிறுவன். அவனுடைய ஒருகால், அருகில் தூங்கிக் கொண்டிருந்த பசு மாட்டின் மேல் படவே அது கொம்பால் முட்ட வந்தது.

அவனை அசைத்து எழுப்பி "உன்னிடம் சில்லரை இருக்கிறதா?" என்று கேட்டார். நிலாப் போன்ற வெளிச்சத்தில் கையில் வெள்ளி ரூபாயைக் கண்டதும் பையன் திடுக்கிட்டுப் போனன்.

"முக்கால் ரூபாய் கொடு" என்ருர். பையன், தூக்கக் கலக்கம், காசுகண்ட பிரமை, முதலில் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

"நீயே வெச்சுக்கோடா ரூபாயை" என்று பெருமிதம் மிதக்கச் சொல்லி விட்டு ஸ்டேஷனைப் பார்த்து நடந்தார். அவர் நடையில், 'தர்மம் செய்தோம் சரியான ஏழைக்குத் தர்மம் செய்தோம்' என்ற கம்பீரம் தெரிந்தது.

ஒரு நிமிஷம், பையன் பிரமை போல் நின்ருன். அவனுக்கு அதிர்ஷ்ட தேவதையே வந்து விட்டதாக நினைவு ஓடிற்று. ஒரு ரூபாயைக் கொண்டு உலகத்தையே விலைக்கு வாங்கி விடலாமெனக் கற்பனை பண்ணினன். மெதுவாக நடக்க ஆரம்பித்தான்.

நேற்றுத்தான் திருச்சி ரயில்வே ஸ்டேஷன் அவனுக்குச் சொந்தமாயிற்று. அதற்கு முன் எங்கோ ஓர் ஊர். ஊருக்குப் புதிசு. ஆகவே சாப்பாடு கிடைக்காமல் பகல் முழுவதும் அரையணு காலணுக் கேட்டு அலுத்துப்போய், குழாய்த் தண்ணீரைக் குடித்து விட்டுப் படுத்தான். பட்டினியானல் ஒரு நாளில் சாவது எவ்வளவோ மேல்; ஆனல் பட்டினியாகவே இருக்க நித்யத்துவம் பெற்றுவிட்டால் அது கொடிய துன்பம். அவனே, நித்யத்துவம் பெற்றவர்களில் ஒருவன்!

அவன் கையில் இப்போது ஒரு ரூபாய். முழு ரூபாய்க்கு அவன் ராஜா! சீட்டியடித்துக்கொண்டு தார் ரோட்டில் நடந்தான்.

குப்பைத் தொட்டியின் அருகே உடம்பைச் சுருட்டி மடக்கி சொர்க்க நித்திரையில் சொறி நாய் படுத்திருந்தது. அவனுக்கு தான் உயிருடன் இருப்பது அதனல்தான் என்ற நினைப்பு வரவே அதை எழுப்பிக் கொண்டான். முதலில் அவனைக் கண்டதும் கோபம்தான் அதற்கு வந்தது. தான் தின்று வந்த எச்சிலைகளுக்கும், நேற்று முதல் போட்டியாக வந்து விட்டானே என்று கோபம். ஆனலும் வாத்சல்யத்தோடு அதைக் கூப்பிடவே வாலைக் குழைத்துக் கொண்டு பின்னல் ஓடிவந்தது.

"நேத்து உன் வயித்துக் கில்லாமெ, நானும் ரெண்டு இலை எடுத்துட்டேன். வா நாலு இட்டலி வாங்கிப் போடறேன்."

அவனுடைய பேச்சையும் உபகாரசிந்தையையும் புரிந்து கொண்டதுபோல நாய்வாலை ஆட்டி, உடம்பை நெளித்து, சோம்பல் முறித்ததை, தனக்கு நமஸ்காரம் செய்

ததாக நினைத்துக் கொண்டான். கூடவந்த நாய், தண்ணீர் குடிக்க குழாய்ப்பக்கம் ஓடிப்போய், குண்டு குழிகளில் கிடந்த தண்ணீரை நக்கிற்று.

"இருடா ராசா! தண்ணியா வேணும்? இதோ வாரேன்" என்று தண்ணியைத் திறந்து விட்டான். நாய் குடித்துக்கொண்டிருந்தது.

"வெறுந் தண்ணியா குடிக்கே. ஏ மூதி இட்லி வேண்டாம். நானும் ஒரு அரைக்கப்பு காப்பி குடிக்கணும்" என்று விழுகிற தண்ணீரைக் கையால் அலக்ஷிய மாக அடித்து விளையாடி விட்டு நாயை இழுத்துக்கொண்டு வந்தான். அது திமிறி தண்ணீர் குடிக்க முயன்றது, அதட்டி இழுத்து வந்தான்.

சற்று தூரத்தில் காபி கிளப். இன்னும் மூடவில்லை. எங்கிருந்தோ "மது ஊ...ஊ" என்று அழுத்தமாகச் சொல்லி, பிறகு "ரைய்" என இறைத்துக்கொண்டிருந்தான் மோட்டார்க்காரன். "மதுஊ...ஊ...ரை...ய்...' என்ற ஒலி பையனுக்கு இன்பமாக இருந்தது. அங்கே அவனுக்கு சிநேகிதர்கள் உண்டு. நம்பி காலணா முதல் இரண்டணாவரை கொடுக்கிறவர்கள் நினைவெல்லாம் ஓடிற்று திருச்சியில், சுலபமாக வாழலாம் என்ற ஆசையால் வந்து பட்டினி கிடந்ததும், நாயுடன் பகிர்ந்து சாப்பிட்டதையும் நினைத்தபோது மதுஊ.........ரைய் எவ்வளவோ சொர்க்கமாக அவனுக்குப் பட்டது.

மோட்டாருக்காக கார்ஷெட்டில் தங்கியிருந்த கும்பலில் சிலர் கீழே கிடந்த புழுதியில் ஏதோ தேடிக் கொண்டிருந்தார்கள். சொறி நாய் அந்தப் பக்கம் ஓடவே அதைத் திட்டி தன் பக்கமாக இழுத்துக் கொண்டு நடந்தான்.

அவன் ஹோட்டலுக்குள் ஏறினதும் "டேய் என்ன முதுகுத் தோலை உறிக்கணுமா? வெளியே போடா" என்று மேஜை கிளீன் கத்திற்று. இவன் பயந்து விடவில்லை. கம்பீரமாக "காசு இருக்கு" என்றான். பகற்பொழுதில் தொட்டியில் இலைபோட வந்தபோது இவனைப் பார்த்த ஞாபகம் வரவே "சரிதாண்டா பொறுக்கிப் பயலே, வெளியே நின்னு என்ன வேணுமின்னு கேளுடா" என்று மேஜைகிளின் மீண்டும் கத்தினான்.

ஓரடி பின் வாங்கினான். முதலாளியும், சுட்டு விரலை மட்டும் ஆட்டி, 'வெளிப் பக்கம்' என சைகை காட்டினார். மேஜை கிளின் இவன் பக்கமாக வந்து "என்னடா வேணும்?" என்றான்.

"எனக்கு ரெண்டு இட்லி அரை கப் காப்பி. இந்த நாய்க்கு நாலு இட்லி"

"கெட்ட கேட்டுக்கு தர்மம் வேறயடா! கொண்ட அஞ்சணா"

கம்பீரமாக ஒரு ரூபாயை எடுத்து நீட்டினான். உள்ளே சாப்பிட்டுவிட்டு வந்த ஒருவர், பயலை மேலும் கீழுமாக நோட்டம் விட்டார். அவர் முகத்தில் கேள்விக் குறியின் சாயை படர்ந்தது. "இந்தாப்பா நாயர் அந்த ரூபாயைக் கொண்டா?" என்றார்.

நாயர் கொடுத்தான். தன் பில்லைக் கொடுத்து விட்டு பயலை நோக்கி "ஏண்டா திருட்டுப் பயலே! இதை எங்கே அபேஸ் செய்தே?" என்று கேட்டபடியே பையனிடம் நெருங்கினார்.

பையன் "என் ரூபாய்!" என்று கத்தினன். சொறி நாய் அந்தக் கனவானைப் பார்த்துக் குலைத்தது. மூதேவிக்கு அதற்குள்ளே எஜமான் விசுவாசம்!

"உன் ரூபாயா? படவாப் பயலே. இப்பதான் பஸ்ஸ்டாண்டிலே ரெண்டு ரூபாயைக்காணேம் என்று தேடினேம். எடுடா இன்னெரு ரூபாயை. மடியைக் காட்டு' என அவன் மடியை அவிழ்த்தார். அவன் மனசைப்போல அங்கேயும் ஒன்றுமில்லே. ஒரு அறை கன்னத்தில் அறைந்து, "திருட்டு நாயே. இன்னெரு ரூபாய் எங்கே?" என்ருர்.

நிந்திக்க ஆரம்பித்தால் அதுவும் வெறிபோல சும்மா இருக்காது. மேலே மேலே போகும்.

அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது. "எஜமான் இது என் ரூபாய். திருடலே?" என்று கதறினன்.

இதைக்கேட்டு, பஸ்காரர்களும், போலீஸ் பாராவும் அவ்விடம் வந்தார்கள். கனவான் பையனின் யோக்யதையை விளக்கினர். திடும் திடுமென நாலைந்து அறைகள் விழுந்தன. அவருடைய கையின் ஈரம் உலர்ந்து போயிற்று. நாக்கின் ஈரம் உலரவில்லே. பையன் பரதவித்தான். அழுதான்.

"சாமி எனக்கு ஒருத்தர் இனம் கொடுத்தாருங்க!"

"இனமோ! உனக்கா உங்கம்மாவுக்காடா?" என்ன நிந்தனே! ஏழையை எது வேண்டுமானலும் சொல்லலாம்.

"சரி சரி, பயலே விட்டுவிடுங்கள். ரூபாய்க்காரரிடம் ரூபாயைக் கொடுத்து விடுங்கள்" என ஒரு அனுதாபி வேண்டிக் கொண்டார்.

"இந்த மாதிரி பொறுக்கிப் பயல்கள்தான். நாளே நம் பொருளேத் திருடுகிருன். இன்றையப் பொறுக்கி நாளேயத் திருடன்'

'இவனே ஜெயிலில் போட வேண்டும்.' என்ருர் சமூக வாதி.

பையன் அழுதான். அடியும் உதையும் தாங்காமல் உண்மையைச் சொல்லியும் விட்டான். அவனே ரூபாயைத் தானே எடுத்ததாகச் சத்தியமாகச் சொன்னன். ஒரு முறையா? மூன்றுமுறை சொன்னன்.

போலிஸ் ஜவான் "வா, தம்பி நாளே முதல் திருட வேண்டாம். மைனர் ஜெயிலுக்குப் போகலாம். வா, வாடா ராசா' என்று இழுத்துச் சென்ருன்.

திருட்டைக் கண்டு பிடித்த கனவானே எல்லோரும் புகழ்ந்தார்கள்; போற்றினர்கள்; சிரித்தார்கள்.

பையன் சோர்ந்துபோய் நடக்கும் திக்கை நோக்கி பரிகாசச் சிரிப்பலேகள் மோதிச் சென்றன. பையனுடைய கண்ணீர் அலேகள் விழுந்து சென்றன.

கண்ணீரும் சிரிப்பும் நல்ல காரியத்திற்கே கடவுள் படைத்திருக்கின்ருர். சந்தோஷத்தை விளக்க சிரிப்பு வருகிறது. துக்கமானது பைத்தியமாக மாறிவிடாமல் கண்ணீரால் தடை செய்யப் படுகிறது. சிரித்ததே அந்தக் கும்பல், அது பைத்தியக்காரக் கூட்டமா? அழுதழுதுச் சொல்லுகிருனே அவன் பயித்தியமா?

போலீஸ்காரன் அரவணேப்பில், இமைபோல் பாதுகாப்புக்குள்

இணைந்து சென்று கொண்டிருந்தான். நித்யத்துவம் பெற்ற பட்டினி. அவன் பின்னல் சிறிது தூரம் வாலைக் குழைத்துக் கொண்டு ஓடிய சொறி நாய் நின்று விட்டது. திடீரென ஓடிப் போய் குழாயடியில் தேங்கிக் கிடந்த தண்ணீரைக் குடித்துக் கொண்டிருந்தது.

இதைத் திரும்பிப் பார்த்தான். தண்ணீராவது குடித்தோமில்லை என்ற எண்ணம் வந்து குடிக்க வேண்டுமென நினைத்தான். நினைக்கலாம்; செய்ய முடியுமா? அழுகையும் விக்கலுமாகப் போய்க் கொண்டிருந்த அவன், நாய் குடிக்கிறதைப் பார்த்துப் பொறுமைப் படலாம்.

ஆனால் அவன் வாழ்வுக்கு வால் நட்சத்திரம்போல் பிறந்த குழந்தையை அவன் எங்கே நினைக்கப் போகிருன்.?

அலைகள்

விதியை நோவர், தம் நண்பரைத் தூற்றுவர்,
வெகுளி பொங்கிப் பகைவரை நிந்திப்பர்,
சதிகள் செய்வர், பொய்ச் சாத்திரம் பேசுவர்,
சாதகங்கள் புரட்டுவர், பொய்மை சேர்

மதியினிற் புலை நாத்திகங் கூறுவர்,
மாய்ந்திடாத நிறைந்த விருப்பமே
கதிகள் யாவும் தருமென வோர்ந்திடார்;
கண்ணிலாதவர் போலத் திகைப்பர் காண்.

— பாரதி

இராம சரிதம்

* (இராவ் பகதூர் புரொபஸர் ஏ. சக்கரவர்த்தி எம். ஏ; ஐ. இ. எஸ்; அவர்கள் எழுதியதின் மொழிபெயர்ப்பு.)

ஸ்ரீராமனுடைய கதை வால்மீகியின் மகா காவியத்திலல்லாமல் பல்வேறு ரூபங்களாக காணப்படும் விஷயம் இந்து தேச சரித்திர மாணவர்கள் நன்கு அறிவார்கள். அக்கதை ஹிந்து சமய நூல்களில் பெரும்பாலும் எடுத்து ஆளப் படுவதோடு ஜைன பௌத்த நூல்களிலும் காணப்படுகின்றது. ஹிந்து சமயத்துள் ஒரு பிரிவினரால் மட்டும் பெரிதும் போற்றப்படுகின்ற ஸ்ரீ கிருஷ்ண சரிதத்தைப் போலல்லாமல், ஒப்புயர்வற்ற இளவரசனை இராமனது சரிதமானது இந்தியாவிலுள்ள எல்லாச் சமயத்தினராலும் பாராட்டப் பெற்று வருகின்றது. இராமனுடைய வாழ்க்கை இந்தியர்களின் மனோ நிலையையும் நூல்களையும் பெரும்பாலும் ஊக்கியிருக்கின்ற விஷயம், வால்மீகி, காளிதாஸர், பவபூதி ஆகியவர்கள் வடமொழியிலும் கம்பர் தமிழிலும், பம்பன் கன்னடத்திலும் எழுதியிருக்கும் நூல்களால் நன்கு விளங்குகிறது.

இங்கு பௌத்தர்களும் ஜைனர்களும் கூறும் இராமாயணக் கதைகளின் வேற்றுமைகளைக் கவனிப்போம். ஹோமருடைய "இல்லியத்"தைப் போன்று இராமாயணமும் ஒரு கட்டுக் கதையோ என்பதை நாம் ஆராய்தல் வேண்டாம். அது வெறுங்கதையல்லவென்றும் அதில் கூறப்படும் மனிதர்களும், சம்பவங்களும் நிலைமைகளும் சிறுபான்மையாவது சரித்திரச் சம்பந்தப்பட்டனவென்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. இராவணன் சீதையை அபகரித்துச் செல்வதும் இராமன் அவளை மீட்டலும் காவியத்தின் முக்கியமான கதாசாரம். சீதையை ரிக்வேத மந்திரங்களில் போற்றப்படும் கலப்பையின் உழு என்று சொல்லிவிட முடியாது.

வீபர் (Weber) சொல்லுவது போல அவளை ஆரியர்களின் குடித்தனத்தின் எடுத்துக்காட்டு என்று மட்டும் சொல்லிவிட முடியாது. இந்தியர்கள் கூற்றை சரித்திரச் சம்பந்தமானது என்று நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். அந்தக்கதை இக்ஷ்வாகு வம்சத்தைச் சேர்ந்த ஒரு பெரிய வீரனைப் பற்றியதானதால் சரித்திர சம்பந்தமானதென்று நாம் ஒத்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. இந்த வம்சத்தைச் சேர்ந்த பெரிய வீரர்களெல்லாம் இந்துக்கள், ஜைனர்கள், பௌத்தர்கள் ஆகியவர்களின் பழைய நூல்களில் அதிக பெருமையாகக் கொண்டாடப் படுகின்றார்கள். இந்த விஷயம் ஒன்றே, பௌத்தர்கள் பிரிவதற்கு நீண்டகாலத்திற்கு முன்னாலேயே இக்ஷ்வாகு வம்சத்தினர் இந்தியாவில் அறிவு ஒழுக்கங்களில் தலைவர்களாய் விளங்கின காலம் ஒன்று இருந்ததைக் காட்டுகின்றது. அந்த வம்சத்துள் ஒருவரான பகவான் ரிஷப தேவரிடமிருந்து ஜைனசமயம் உண்டானதாகக் கூறப்படுகிறது. ஜைன சமயத்தின் கர்த்தாவாகிய

---

* ஜைன கெஜட் 22-ம் தொகுதியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.

ரிஷபர் புருதேவரென்றும் புரு குலத் திலகர் என்றும் போற்றப் படுவதால் புரு வம்சத்தினரும் இக்ஷ்வாகு வம்சத்தினரும் ஒரே கூட்டத்தினர் என்பது ஒரு தலை. கௌதம புத்தர் பிறந்த சாக்கியர் களும் இக்ஷ்வாகு வம்சத்தி லிருந்தே வந்ததாகக் கூறுகின்ற னர். இது எவ்வளவு தூரம் உண்மை என்பதை நாம் ஆராய வேண்டியதில்லை. ஆதியிலிருந்த பௌத்த ஆசிரியர்கள் தங்கள் மதத்தலைவர் இந்த பிரசித்தி பெற்ற அரச வம்சத்தைச் சேர்ந்தவ ரென்று சொல்வது ஒரு பெருமை என்று கருதினர்கள். இவ்வித மாக இந்துக்களும் ஜைனர்களும் பௌத்தர்களும் ஸ்ரீ ராமன் அவ தரித்த இக்ஷ்வாகு வம்சத்திலேயே பிறந்தவர்கள் என்று பெருமை யோடு கூறுகின்ருர்கள்.

வால்மீகி இராமாயணத்தி லுள்ள கதை நம் சிறுவர்களுக் கும் சிறுமிகளுக்கும் நன்ருகத் தெரியுமாதலால் அதை மீண்டும் இங்கே சொல்ல வேண்டிய அவ சியமில்லை. நாம் மேலே கூறி யுள்ளபடி வேற்றுமைகளை மட்டும் குறிப்பிடுவோம். பௌத்த நூல் களில் இராம சரிதம் ஒரு ஜாதகக் கதையாக (புத்தருடைய முன் பிறப்புக் கதைகள்) காணப்படு கிறது.

தன் தகப்பனை இழந்த ஒரு குடி யானவனுடைய நன்மைக்காக புத்தரால் இராமனுடைய கதை சொல்லப்பட்டதாக தசரத ஜாத கம் தெரிவிக்கிறது. இந்தக் குடி யானவன் தன் தந்தை இறந்ததால் மிகவும் வருத்தம் கொண்டவனாய் தன் வேலைகளைக் கவனிக்கவே யில்லை. அதையறிந்த புத்தர் அவ னுடைய மனம் ஆறுதல் அடை யும் பொருட்டு, "முன்காலத்தில் தன் தந்தையின் மரணத்தால் சிறி தும் துக்கப்படாமலிருந்த ஒரு ஞானவானின் வரலாற்றைக் கேள்" என்று ராமகதையைக் கூறினர்.

முன்னொரு காலத்தில் காசியில் தசரதன் என்னும் ஓர் பெரிய அரசன் தீமைகள் சிறிதும் இல்லா மல் நீதியோடு செங்கோலோச்சி வந்தான். அவனுடைய பதினறு யிரம் மனைவிகளில் மூத்தவளான பட்டத்தரசிக்கு இரண்டு பிள்ளை களும் ஒரு பெண்ணும் பிறந்தார் கள். மூத்த குமாரனின் பெயர் ராம பண்டிதன் அல்லது ஞானி யாகிய ராமன். இரண்டாவது குமாரனின் பெயர் லக்ஷ்மணன் அல்லது அதிர்டமுள்ளவன் என்ப தாம். குமாரத்திக்கு சீதை என்று பெயரிடப்பட்டது. சிறிது காலத் திற்குப் பிறகு பட்டத்தரசி இற ந்து போகவே, தசரதன் வேருெ ருத்தியைப் பட்டத்தரசியாக்கி ஞன். அவளுக்கு பரதன் என்னும் ஓர் குமாரன் பிறந்தான். தசரத னுக்கு அக்குமாரனிடத்தும் பட்டத்தரசி இடத்தும் பேரன்பு மிகுந்திருந்தபடியால் "உனக்கு ஏதாவது வரம் வேண்டுமானல் கேள்" என்று பட்டத்தரசிக்குக் கூறினன். ஆனல் அவள் உடனே எதையும் கேட்கவில்லை. பரதனுக்கு ஏழுவயதானவுடன் அவனை இளவரசனக்கி பிறகு பட்டத்துக் குரியவனக்க வேண்டு மென மன்னனை வேண்டினள். இதைக் கேட்டவுடன் அரசன் திடுக்கிட்டு துக்கத்தில் ஆழ்ந்தான். இராமன், லக்ஷ்மணன், சீதை ஆகி யவர்களுக்கு இந்த ராணியால் யாதொரு தீங்கும் வராமலிருக்க வேண்டுமே என்று சிந்தனை செய் தான். தன் ராஜ்யத்திலுள்ள சோதிடர்களை அழைத்து தன்னு டைய ஆயுளைப்பற்றி வினவினன்.

அவர்கள், "நீ இன்னும் பன்னிரண்டு வருடங்கள் இருப்பாய்" என்று விடையிறுத்தனர். தசரதன் ராமனையும் லக்ஷ்மணனையும் அழைத்து, "நீங்கள் உடனே இந்த ராஜ்ஜியத்தை விட்டுப்போய் பன்னிரண்டு வருஷங்கள் கழித்து பிறகு வந்து ராஜ்யபாரத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று சொன்னான். இதனைக் கேட்ட இராம இலக்குமணர்கள் கானகத்திற்கு சென்றனர். சீதையும் உடன் சென்றாள். இவர்கள் மூவரும் இமாலய மலைவரைச் சென்று ஆங்குள்ளதோர் வனந்தனில் பர்ணசாலை யமைத்து அங்கே கிடைக்கும் காய்கனிகளைப் புசித்து வாழ்வாராயினர்.

தசரதன் புத்திரர்களின் பிரிவால் மிகவும் மனக்கிலேசமுற்று தேகம் மெலிந்து ஒன்பது வருடங்கள் கழிந்தபின் உயிர் துறந்தான். பட்டத்தரசி பரதனை அரசனாக்க விரும்பினாள். ஆனால் பரதன் அதற்கு சம்மதிக்கவில்லை. தன்னுடைய சகோதரர்களை அழைத்து வருவதற்காக காட்டிற்கேகினான். பர்ணசாலையில் இராம பண்டிதனைக் கண்டு தங்கள் தந்தை இறந்த துக்ககரமான செய்தியைத் தெரிவித்தான். ஆனால் இராமபண்டிதன் சிறிதும் மனம் கலங்கவே யில்லை. லக்ஷ்மணனும் சீதையும் சோர்ந்து மயங்கி வீழ்ந்து விட்டார்கள். இராமன் மனக்கலக்கமின்றி இருந்ததின் காரணம் பரதனுக்கு விளங்கவில்லை. ஆகையால் அதன் காரணம் என்ன என்று இராமனைக் கேட்டான். அதற்கு இராமன், "உலகத்தில் எதுவும் நித்யமானதல்ல; தத்துவத்தின் உண்மையை அறியாதவர்களுக்கு கிலேசமும் துக்கமும் தோன்றும். வந்தேதீர வேண்டியவைகளுக்கு ஞானிகள் வருந்தார்கள்" என்று விளக்கினார். நாட்டிற்குத் திரும்பி வந்து தன் தந்தையின் சிம்மாசனத்தை ஏற்றுக் கொள்ளுமாறு பரதன் இராமனை வேண்டினதற்கு இராமன், "நான் இப்பொழுது திரும்பி வந்தால் என் தந்தையின் ஆக்ஞையை மீறினவன் ஆவேன். ஆகையால் இன்னும் மூன்று வருடங்கள் கழித்து வருவேன்" என்று இயம்பி லக்ஷ்மணனையும் சீதையையும் பரதனோடு அனுப்பி இராஜ்ஜியத்தை நடத்தும்படி கட்டளையிட்டான். அவர்கள் இராமருடைய பாதுகைகளை எடுத்துக்கொண்டு காசிக்குத் திரும்பினர். பாதுகைகளை வைத்து அவர்கள் மூன்று வருஷங்கள் அரசாண்ட பிறகு ஞானியாகிய இராமனும் காட்டிலிருந்து திரும்பி வந்து காசி நகரத்திற்கு வெளிப்புறத்தே யுள்ளதொரு உத்தியானத்தில் தங்கினான். இதையறிந்த அவனுடைய சகோதரர்கள் அதிக சந்தோஷத்தோடு இராமனை வரவேற்று அவனுக்குச் சீதையை பட்டத்தரசி யாக்கினர். மகானான இராமன் பதினாறாயிரம் வருஷங்கள் நீதியோடு செங்கோல் நடத்திப் பிறகு சுவர்க்கம் அடைந்தான்.

அந்தக் காலத்தில் அரசனான சுத்தோதனன் தசரதனாகவும், மாகாமாயா தாயாராகவும், இராகுலனுடைய தாய் சீதையாகவும், ஆனந்தன் பரதனாகவும் நானே இராம பண்டிதனாகவும் இருந்தேன் என்று புத்தபிரான் கூறினர்.

இந்தக் கதையில் இராவணன் சீதையை அபகரித்துச் சென்ற வரலாறும் இராமன் இலங்கைக்குப் படை எடுத்துச் சென்ற வரலாறும் காணப்படவில்லை. ஆகையால் இராவணன்

எந்த வகுப்பைச் சேர்ந்தவனென்று அறிவதற்கிடமில்லை. மகாதுக்கத்திற்கு காரணமான சம்பவம் நேரிட்டிருந்தும் இராமன் மனக்கலக்கம் இல்லாமல் இருந்த பெரிய குணத்தை தெரிவிக்க வந்தபடியால் இந்தக்கதை அதை மட்டும் விளக்கி இருக்கின்றது. இராவணனைப் பற்றி ஒன்றும் கூறுமல் இருந்ததினுலேயே பௌத்த ஆசிரியர்களுக்கு தென்னுட்டிலிருந்த பல ஆரியர் அல்லாத கூட்டத்தினரைப் பற்றி ஒன்றும் தெரியாது என்று முடிவு கட்ட முடியாது. சீதையைப் பற்றி நாம் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அவள் இராமனுக்கு தங்கை என்றும் பிறகு இராமனுடைய பட்டத்தரசியானளென்றும் கூறப்பட்டுள்ளன. இம்மாதிரியான சந்தர்ப்பம் இந்தியச் சரித்திரத்தில் வேறு இருப்பதாகத் தெரியவில்லை. எகிப்து தேசத்தில் இருந்த டாலமியர்களுடைய வழக்கத்தை அறிந்து அதை இந்தக் கதையின் ஆசிரியர் இதில் நுழைத்துவிட்டதாக நாம் எண்ணமுடியுமா? பௌத்த ஆகமங்களில் இதைவிட பெரிதான இராமகதை இருந்து அதினின்றும் இந்தச் சிறிய கதை எழுதப்பெற்றதோ என்கிற விஷயத்தை நாம் நிச்சயமாகச் சொல்வதற்கு இடமில்லை.

படைப்பு

கோவை மின் கனியைப் படைத்த கை — அதைக்
கொத்திடக் கிளியைப் படைத்தது!
பூவினில் தேனைப் படைத்த கை — பாம்புப்
புரி பல்லில் விஷத்தைப் படைத்தது!
காவியம் எழுதிப் படைத்த கை — அதில்
கற்பனைப் பொய்யைப் படைத்தது!
கோவிலை அழகுறப் படைத்த கை — சிலை
கோரிடா உணவைப் படைக்குதே!

சி. எஸ். ஆர்

கல் வெட்டுகள்

அ. கிருஷ்ணமூர்த்தி.

நமது நாட்டில் உள்ள கோயில்களுக்குப் போகும் போது, கோயிலின் சுவர்களில் என்னென்னவோ எழுதியிருப்பதைப் பலர் பார்த்திருக்கலாம். மிகவும் படித்தவர்களுக்குத் தவிர, மற்றப்படி அங்கு போகும் பொதுமக்களில் பலருக்கு அவை இன்ன செய்திகளைக் குறிக்கின்றன, இன்ன காரணத்துக்காக எழுதப்பட்டிருக்கின்றன என்பதே தெரியாது. இவையெல்லாம் கல்லில் வெட்டப் பட்டிருப்பதால், இவற்றிற்குக் 'கல்வெட்டுக்கள்' என்று பெயர்.

உலகத்தின் பல பகுதிகளிலும் பலவித நாகரிகம் தோன்றி வளர்ந்திருக்கிறது. அந்தந்த இடத்திற்குத் தகுந்தபடிப் பலவித சாதனங்களும் அமைந்திருக்கின்றன. அந்தச் சாதனங்களைப் பயன்படுத்திப் பழைய காலத்து மக்கள் தமது கருத்துக்களை அழியாமல் எழுதி வைக்கப் பலவகையிலும் முயற்சி செய்திருக்கிருர்கள். எழுதுவதற்காகக் களிமண், தோல், கல், இலை, மரப்பட்டை, உலோகம் முதலியவைகள் பயன்படுத்தப் பட்டன. இவற்றில் என்றைக்கும் அழியாமல் நீடித்து நிற்கக் கூடியது கல்லில் வெட்டிய எழுத்துத்தான் என்பதைச் சொல்ல வேண்டியதேயில்லை.

அசோகனுடைய காலத்திற்கு முன்பே, அதாவது, 2500 ஆண்டுகளுக்கு முன்பே, தமிழ் நாட்டில் கல்லில் எழுதும் வழக்கம் பரவியிருந்தது. அக்காலத்தில் போரிற் சென்று, பெரிய வீரத் தொழில்களைச் செய்த போர் வீரர்களுக்கு அவர் வீரச் செயல்களைப் பாராட்டி, அவர் இறந்த பிறகுக் கல் நடுவது வழக்கம். அந்தக் கல்லிற்கு 'நடுகல்' என்று பெயர். வீரர்களுடைய சிறப்பெல்லாம் அதில் வெட்டப் பட்டிருக்கும். இப்படி கல் நடுவதும், அதில் வீரச் செயல்களை எழுதுவதும் பெரிய சடங்காக — விழாவாகக் கொண்டாடப் பட்ட விவரங்களைத் தொல்காப்பியம் விரிவாகக் கூறுகின்றது. சங்கப் பாடல்களில் நடு கல்லைப் பற்றிய பாட்டுக்கள் பலவுண்டு. இப்பொழுதும் இறந்தவர்களுக்கு நமது நாட்டில் கல்லெடுத்துக் கல் நடுகின்ற பழக்கம் இருக்கின்றது.

இவ்வாறு இறந்தவர்கள் சிறப்பைக் கல்லில் எழுதுவதைத் தவிரப், பிற்காலத்து அரசர்கள், தமது வெற்றி, ஈகை, புகழ் முதலிய சிறப்புக்களையும் கல்லில் வெட்டியிருக்கின்றனர். இப்படிக் கடந்த 1500 ஆண்டுகளாக எவ்வளவோ ஆயிரம் கல் வேட்டுக்கள் வெட்டப்பட்டுள்ளன. இவை தாம் நாம் கோவில்களில் பார்க்கும் கல்வெட்டுக்கள். இக்கல் வெட்டுக்கள் நமது தமிழ் நாட்டில் மட்டுமல்ல; வடநாட்டிலு முண்டு. ஆனல், வடநாட்டோடு ஒப்பிடும் போது, தமிழ் நாட்டில்தான் இவை ஏராளமாகக் காணப்படுகின்றன.

தமிழ் நாட்டின் சரித்திரத்தை எழுதுவதற்கு இக்கல் வெட்டுகளின் உதவி, இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. இக்கல் வெட்டுக்கள் இல்லை என்றுல், தமிழ் நாட்டின் சரித்

திரத்தை நாம் தெளிவாக எழுதுவதற்கு ஒரு சிறிதாவது அறிய முடியாது என்று சுருக்கமாகச் சொல்லி விடலாம்.

இப்பொழுது, தமிழ் நாட்டிலோ, தமிழ் நாட்டை ஒட்டிய இடங்களிலோ அகப்படும் கல் வெட்டுகளில், அசோகனுடைய கல் வெட்டுகளே மிகவும் பழைமையானவை. இவற்றைத் தவிரச் சங்க காலத்து வீரர்களுடைய வீரச் செயல்கள் எழுதப் பட்ட நடுகற்கள் கூட இப்பொழுது அகப்படுவது அரிதாக இருக்கிறது. அசோகனுடைய கல் வெட்டுகள் பௌத்த மதத்தைப் பரவவைப்பதற்காக உலகத்தின் பல பாகத்திலும் வெட்டப்பட்ட பொழுது, இத்தென்னிந்தியாவில் பல இடங்களில் கருங்கல்லால் தூண்களை எழுப்பி வெட்டப் பட்டன. ஒரு கல் வெட்டில், சேர சோழ பாண்டியர்களைப் பற்றி மிகச் சிறப்பாகவும், மதிப்பாகவும் குறிக்கப் பட்டிருக்கிறது. பழைய தமிழ் வேந்தர்களின் உன்னதமான நிலையை விளக்குவதற்கு அசோகனல் இப்படிப் புகழ்ந்து எழுதப் பட்ட கல் வெட்டுக்களுக்கும் ஒரு சாட்சி. இதைத் தவிரச் சங்க காலத் தமிழ் வேந்தர்கள் வெட்டியதாக நமக்குக் கல் வெட்டுக்கள் கிடைக்கவில்லை.

கி. பி. ஆறும் நூற்றுண்டிற்குப் பிறகுத் தமிழ் நாட்டில் பல்லவ அரசர்கள் ஆளத் தொடங்கினர். இவர்களால் பல விடங்களில் கல் வெட்டுகள் எழுந்தன. இவர்கள் காலத்திலிருந்து நமக்குக் கல் வெட்டுகள் நிரம்பக் கிடைக்கின்றன. இவர்களுக்குப் பிறகு சோழ அரசர்களும், பாண்டிய அரசர்களும், சேர அரசர்களும் ஏராளமான கல் வெட்டுகளை வெட்டினர்கள். சேர, பாண்டிய, சோழர்களில் ஒருவரைவிட ஒருவர் அதிகமான கல் வெட்டுகளை வெட்டியிருக்கின்றனர்.

இக்கல் வெட்டுகள் தேவ நாகரி எழுத்து, கிரந்த எழுத்து, வட்டெழுத்து என்ற மூவகை எழுத்துக்களால் எழுதப் பட்டிருக்கின்றன. பல்லவர்கள் தேவநாகரியிலும், கிரந்தத்திலும் எழுதினர். வட்டெழுத்து தான் அக்காலத் தமிழ் எழுத்து. அந்த எழுத்துக்களால் தான் சேர சோழ பாண்டியர்கள் கல் வெட்டினர்கள். இப்பொழுது கிடைக்கும் தமிழ்க் கல்வெட்டுகள் 9-ஆம் நூற்றுண்டிலிருந்து தான் அகப்படுகின்றன. அதாவது 1000 ஆண்டுகளுக்கு முன்பு, சோழர்கள் தமது பழைய பெருமையோடு நாட்டை ஆளத் தொடங்கிய காலத்திலிருந்து, நாளடைவில் அக்காலத் தமிழ் எழுத்தின் வடிவம் சிறிது சிறிதாக மாறுதலடைந்தது. அதனுடன், கிரந்த எழுத்தின் தாக்குதலும் சிறிது உண்டு. இவ்வாறு வளர்ந்து வந்த எழுத்துக்கள் தாம், இன்றைக்கு நாம் எழுதுகின்ற தமிழ் எழுத்துக்கள். அச்சியந்திரம் வந்தவுடன் இந்த எழுத்துக்கள் இன்னும் சிறிது செப்பமடைந்தன. இவ்வாறு எழுத்துக்களின் வளர்ச்சியை அறிவதற்கும் இக்கல் வெட்டுகள் பயன் படுகின்றன.

பல்லவரும், சோழ பாண்டிய அரசரும் வெட்டிய கல்வெட்டுகளில், அவர்களின் வெற்றி, ஈகை புகழ் முதலியவை விரிவாகக் கூறப்பட்டிருக்கும். முதலாம் இராசராசன் காலத்திலிருந்து இக், கல் வெட்டை எழுதுவதில் ஒரு புதிய முறை ஏற்பட்டது. அதாவது ஒவ்வொரு கல் வெட்டின்

தொடக்கத்திலும், அதனை வெட்டும் அரசனுடைய வெற்றிகளைத் தொகுத்து ஒரு சிறு பாட்டாக அமைப்பது; இதற்கு 'மெய்க் கீர்த்தி' என்று பெயர். பிறகு, அரசன் அதை வெட்டுகிற காரணம், காலம், வெட்டுஞ் செய்தி விவரம், அந்தச் செய்திகளுக்குச் சாட்சியம் முதலியவை கூறப் படும்.

உதாரணமாக இராசராசன் தான் ஆளத் தொடங்கிய 27-ஆம் ஆண்டில் ஒரு கல் வெட்டை வெட்டுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் தன் வெற்றியையும் பெருமையையும் முதலில் எழுதி, பிறகு, ஆளத் தொடங்கிய இத்தனையாவது ஆண்டில், இத்தனையாவது நாளில் இன்ன நட்சத்திரத்தில் இது வெட்டப் பட்டது; இதனால் இன்னாருக்கு, இன்ன நிலம், அல்லது இன்ன பொருள், தானமாக அல்லது விலைக்குக் கொடுக்கப் பட்டது; நிலமாக இருந்தால், இன்னின்ன எல்லைக்கு உட்பட்ட நிலம்; வேறு பொருளாக இருந்தால், அப்பொருளின் விவரம்; அதற்கு இன்னின்னார் சாட்சியம் என்ற பலவித விவரங்களும் அந்தக் கல்வெட்டில் காணப்படும்.

இப்படிக் காணப்படும் கல் வெட்டுகளைப் படிக்கும் போது அந்தக் கால அரசர்கள் தானமென்றும், தருமமென்றும் செய்திருக்கும் பொருள்களுக்கு விலை மதிப்பு இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. மனத்தால் நினைக்க முடியாதபடி ஏராளமான பொன்னும், மணியும், முத்தும், நீலமும் பிற சொத்துக்களும் தானஞ் செய்யப் பட்டிருக்கின்றன. இந்தத் தான வகைகளில் இரணிய கருப்பம் என்றும் துலாபாரம் என்றும் இரண்டு உண்டு. இரணிய கருப்பம் என்பது தங்கத்தால் பெரிய அண்டா செய்து அதில் மஞ்சள், ஏலம், இலவங்கம் முதலான வாசனைத் திரவியங்களோடு தண்ணீரை நிரப்பி, பட்டத்தரசி அதில் குளித்து விட்ட பிறகு, அந்த அண்டாவை விதி முறையோடு தானஞ் செய்து விடுவது. துலாபாரம் என்பது அரசன் எடைக்குச் சரிக்குச் சரியான தங்கத்தைத் தானம் செய்வது. இப்படிப் பட்ட தானங்களைப் பல அரசர்களும் செய்திருக்கின்றனர்.

இதனால் அக்காலத்தில் மக்கள் எல்லாரும் ஒரு குறையு மில்லாமல் செல்வஞ் செழிக்க வாழ்ந்தார்கள் என்று சொல்ல முடியாது. பாடு பட்டு வருந்தி வயிறு வளர்க்கும் மக்கள் ஒரு பக்கம் இருந்து கொண்டுதான் வந்திருக்கிறார்கள். ஆனால் பொருளாதார நெருக்கடியும், மக்கள் நெருக்கடியும் இப்பொழுது இருப்பது போல இவ்வளவு கடுமையாக இல்லை என்று மட்டும் சொல்லலாம். இவ்வளவு தான தருமங்களும் அரசர்கள் பரம்பரையாகக் கொண்டிருந்த சில நம்பிக்கைகளின் மேல் நடந்து வந்தன. அக்காலத்தில் மிகுந்த செலவுக்குக் காரணம் அதிகமில்லாமையால், அரசர்கள் பெரும் போர்கள் செய்து திரட்டிய செல்வமெல்லாம் தான தருமத்திற்கே பயன் பட்டன; தான தருமத்தோடே நின்று விட்டன.

இப்படிப் பாதிச் செய்திகள் இருந்த போதிலும், மீதிப் பாதி செய்திகள் அரசர்களின் காலம், ஆட்சி முறை, பழக்க வழக்கங்கள், நாட்டு வளம், சமூக நிலை முதலான விவரங்களைத் தெரிவிக்கப் பெரிதும் பயன் படுகின்றன.

இவற்றை யெல்லாம் பலரும் தெளிவாகத் தடையில்லாமல் பார்த்தறியும் பொருட்டு, அரசர்கள் இவற்றைக் கோயில் முதலான பொது விடங்களில் வெட்டுவித்தார்கள். அன்றியும் கோவில்களில் வெட்டப் படுவதால், பாதுகாப்பாகவும் இருக்கும். கோவில்களிலும் சுற்றுச் சுவர்களில் தாம் இவை அதிகமாக வெட்டப் பட்டிருக்கும்.

நாட்டின் சரித்திரத்திற்கு இக் குறிப்புகள் பெரிதும் உதவியாயிருக்கின்றன. நாளேற ஏறப் பல காரணங்களால் இவை சிதைந்து போவதைக் கண்டு, அரசியலார் அதற்கென்று சில அதிகாரிகளை நியமித்து, இவற்றை எடுத்தெழுதி அச்சில் வெளியிட்டிருக்கின்றனர். இவற்றின் மேல் பலவித ஆராய்ச்சிகளும் இதுவரையில் செய்யப் பட்டிருக்கின்றன. சில சிறந்த கல்வெட்டுகள் படம் பிடித்தும் வெளியிடப் பட்டுள்ளன.

இக்கல் வெட்டுக்களைப் போலவே, இந்நாட்டில் பல விடங்களில் செப்புப் பட்டயங்களும் அகப்படுகின்றன. இவை பட்டயங்களானமையால், மண்ணில் புதைந்து கிடந்து தோண்டுகிறவர் கையில் அகப்படுகின்றன. கல்வெட்டுக்களைப் போலவே, சரித்திரத்தை எழுது வதற்கு இவையும் பெரும் பயன் தருகின்றன. அரசர்கள் தானஞ் செய்த விவரங்கள் இவற்றில் எழுதப் பட்டிருக்கும். இவை பல இடங்களில் கண்டெடுக்கப்பட்டுப் பொருட் காட்சிச் சாலையில் வைக்கப் பெற்றுள்ளன.

இப்படி ஆராய்ந்து திரட்டி எடுக்கப் பட்ட பட்டயங்கள், கல்வெட்டுகள் தவிர, இன்னும் எடுக்கப் படாதவைகள் அநேகம். எடுக்கப் பட்ட கல் வெட்டுக்களிலும் ஆயிரக் கணக்கானவை வெளியிடப் படாமல் இருக்கின்றன.

கோயில்களைப் புதுப்பித்துப் பழுது பார்க்கிறவர்கள் கல்வெட்டுகள் வெட்டப்பட்ட கற்களைப் பாதுகாக்காமல், அவற்றை யிடித்துவிட்டுப் புதிதாகக் கற்களை யடுக்கிக் கட்டி விடுகின்றனர். பழைய காலத்தில் இப்படிப் பழுது பார்க்க நேர்ந்தால், கல் வெட்டு எழுதிய கற்களை எடுத்துப் பாதுகாப்பாக வைத்துப் பிறகு திருத்திக் கட்டும்போது, அவற்றை இருந்த இடத்தில் முறை தவறாமல் வைத்துக் கட்டுவார்கள். இல்லாவிட்டால், முன்பிருந்த கல் வெட்டுக்களை மறுபடியும் அவ்விடத்தில் வெட்டி விடுவார்கள்.

கல் வெட்டுகள் உரை நடையாகவும், செய்யுளாகவும், இரண்டும் கலந்ததாகவும் வெட்டப் பட்டுள்ளன. தமிழுலுள்ளது போலவே, கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளிலும் கல் வெட்டுகள் நிரம்ப உண்டு. அசோகன் முதன் முதல் பாலி பாஷையில் கல்வெட்டினான். நமது தென்னாட்டுக் கல்வெட்டுக்களை ஆராயவும், எடுத்து வெளியிடவும் முதன் முதல் முயன்ற பெரியார்களில் திருவனந்தபுரம் ஆசிரியர்-சுந்தரம் பிள்ளை யவர்கள் தலை சிறந்தவர். அரசியலாரைத் தூண்டிப் புதை பொருளாராய்ச்சிக் கழகம் ஒன்றைத் திருவனந்த புரத்தில் நிறுவும் படி செய்து, அதன் தலைவராகவும் விளங்கினார். போற்றத் தகுந்த விதமாகப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், நூல்களையும் கூட எழுதி வெளியிட்டுள்ளார்.

ஆகவே, கல் வெட்டுகள், இறந்தவர் வீரச் செயல்களைக் குறிப்பதற்கும், மதத்தைப் பரப்பு வதற்கும், அரசர்களுடைய, வெற்றி, தானம் முதலான புகழை வெளிப்படுத்தவும் அரசர்களாலும், அரசரைப் போன்ற பல பெரிய தலை மக்களாலும் வெட்டப் பட்டன என்று அறிய வேண்டும்.

தென்னிந்திய சரித்திரத்தை ஆராயும் மாணவர்கள், இக்கல் வெட்டுக்களை நன்ருய் அறிய வேண்டும். கற்களிலிருந்து எழுத்துக்களைப் பெயர்த்து எழுதுவது மிகக் கடினமான வேலை. சில எழுத்துக்கள் சிதைந்திருக்கும்; சில அழிந்திருக்கும்; சில உருமாறியிருக்கும்; நடையில் சில பிழைகளுமிருக்கும். இவ்வளவு தொந்தரவான வேலை இது. கல் வெட்டில் காணும் செய்திகள் நல்லவையோ, தீயவையோ, நமக்கு அது கவலையில்லை; அக்கால வாழ்க்கை முறை, ஆட்சி முறை உயர்ந்ததோ, தாழ்ந்ததோ அதுவும் வேறு செய்தி. ஆனல், அக்கால நிலையை அறிவதற்குக் கல் வெட்டுகளைப் போன்ற பெருந்துணை வேறு ஒன்றுமில்லை,

துறவு!

சங்கிலி வேணுமென்று — பொன்னம்மா
சண்டை பிடித்து நின்ருய்!
'தங்கம் விலையதிகம்' என்றேன்
தலையிலடித்துக் கொண்டாய்

சதுரப் பணம் சிலதை — என்
சட்டையில் வைத்திருந்தேன்
புது ரிப்பன் வாங்குதற்கே — பொன்னம்மா
பொறுக்கி எடுத்துக் கொண்டாய்!

விறகுக் கலைந்து சுற்றி — களைத்து
வீடு திரும்பி வந்தேன்
சிறிதும் இரக்கமின்றி — பொன்னம்மா
சீறிச் சினந்து கொண்டாய்!

கொளுத்தும் வெயிலில் நின்று — கிடைத்த
கொஞ்சம் உளுந்தைத் தந்தேன்!
'உளுத்த உளுந்து' என்று — பொன்னம்மா
உதறி எறிந்து விட்டாய்!

ஓயாது தொல்லை தரும் — பொன்னம்மா
ஓடி ஒழிந்து போறேன்
ஆயாபோல் காலை நீட்டி — இனி நீ
ஆட்சி புரிவாயடீ!

— அம்பலவாணன்

சிலப்பதிகாரம்

சர்-ஆர்.கே. சண்முகம் செட்டியார்

7. கானல்வரி

கானல் வரி என்பது, கடற்கரையில் பாடும் வரிப்பாட்டு என்று சொல்லப்படும் ஒருவகை இசைப்பாட்டு. கோவலனும் மாதவியும் கடற்கரைச் சோலையிலிருந்து, வரிப்பாட்டுகளைப் பாடினதும், கோவலன் மாதவியை விட்டுப் பிரிந்து போவதும் முதலான செய்திகள் இதில் சொல்லப்படுகின்றன.

(1—20)

கோவலனும் மாதவியைப்போல், இசைக்கலையில், பயிற்சி பெற்றவன். இருவரும் கடற்கரைச் சோலையை அடைந்தவுடன், மாதவி தன் தோழி வசந்தமாலை கையிலிருந்த யாழை வாங்கித் தொழுது, அதன் நரம்புகளை நன்கு ஆராய்ந்து, இசை எழுப்பிக் கோவலன் கையில் கொடுத்தாள். அரங்கேற்று காதையில் நாட்டிய இலக்கணத்தைப் பற்றி விரிவாகச் சொன்னதுபோல், இந்த இடத்தில் இசையிலக்கணக் குறிப்புகளில் சிலவற்றை நூலாசிரியர் எடுத்துக் காட்டுகிறார். இவர் குறிக்கும் விஷயங்களுக்குப் பொருள் தெரிவது கடினமாயிருந்தாலும், இக் குறிப்புகளால் பண்டைத் தமிழ் மக்கள், இசைக்கலையில் எவ்வளவு முன்னேற்ற மடைந்திருந்தார்கள் என்பதை ஒருவாறு அறியலாம். மாதவி கொடுத்த யாழைக் கையில் வாங்கிக் கோவலன் காவேரியாற்றைப்பற்றிய பாடல்களையும், கடற்கரையைப் பற்றிய பாடல்களையும் பாடத் தொடங்கினான்.

கோவலன் யாழ் வாசிப்பது

(I) கட்டுரை

சித்திரப் படத்துள் புக்குச், செழுங்கோட்டின் மலர் புனைந்து,
மைத்தடம் கண் மணமகளிர் கோலம்போல் வனப்புஎய்திப்,
பத்தரும் கோடும் ஆணியும் நரம்பும் என்று —

இத்திறத்துக் குற்றம் நீங்கிய யாழ், கையின் தொழுது வாங்கிப்
பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல்,
கண்ணிய செலவு, விளையாட்டுக், கையூழ்,
நண்ணிய குறும் போக்கு — என்று நாட்டிய
எண்வகையால் இசை எழீஇப்,
பண்வகையால் பரிவு தீர்ந்து,
மரகதமணித் தாள்செறித்த மணிக்காந்தள் மெல்விரல்கள்.
பயிர் வண்டின் கிளைபோலப் பன்னரம்பின் மிசைப்படர,
வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல்,
சீருடன் உருட்டல், தெருட்டல், அள்ளல்,
ஏருடைப் பட்டை — என இசையோர் வகுத்த
எட்டுவகையின், இசைக்கரணத்துப்
பட்டவகை, தன்செவியின் ஓர்த்து,
ஏவலன் ; பின் பாணி யாது? எனக்
கோவலன் கை யாழ் நீட்ட, அவனும்
காவிரியை நோக்கினவும், கடற்கானல் வரிப்பாணியும்
மாதவிதன் மனம்மகிழ, வாசித்தல் தொடங்குமன்.

பதவுரை

[சித்திரப் படத்துள் புக்கு — சித்திரத் தொழில் செய்யப்பட்ட உறையினுள் புகுந்து; செழுங்கோட்டின் — அழகிய யாழின் தண்டில்; மலர் புனைந்து — மலர்கள் சூட்டி ; மணமகளிர் கோலம்போல்— திருமணக் கோலங் கொண்ட பெண்களின் கோலத்தைப் போல வனப்பு எய்தி — மிக்க அழகைப் பெற்று ; பத்தரும் கோடும் ஆணியும் நரம்பும் என்று இத்திறத்து — பத்தர், கோடு, ஆணி, நரம்பு என்று சொல்லப்பட்ட இப்பிரிவுகளில்; குற்றம் நீங்கியயாழ் — நால்வகைக் குற்றங்களும் நீங்கிய யாழை: கையில் தொழுது வாங்கி — தன் கையால் தொழுது வாங்கி ;

பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு கையூழ், குறும்போக்கு என்று நாட்டிய எண் வகையால் இசை எழீஇ — யாழை வாசிப்பதற்குமுன் அதை ஆராய்வதற்காகச் செய்யும் இந்த எட்டு வகையாலும் அதில் இசை எழுப்பிப் பார்த்து; பண் வகையால் பரிவு தீர்ந்து — பண்ணின் வகைகளில் ஏற்படும் குற்றங்கள் நீங்கப் பெற்று ;

மரகத மணித்தாள் செறிந்த — மரகத மணியால் செய்த மோதிரங்கள் அணிந்த; மணிக் காந்தள் மெல்விரல்கள்—அழகிய நீலநிறமுடைய காந்தள்பூப் போன்ற மெல்லிய விரல்கள் ; பயிர் வண்டின் கிளைபோல— இசைபாடும் வண்டின் கூட்டம்போல; பல்நரம்பின் மிசைப்படர — பலவாகிய யாழின் நரம்புகளின்மேல் செல்ல; வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், சீருடன் உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என —; இசையோர் வகுத்த — இசை நூற்புலவரால் வகுக்கப்பட்ட; எட்டு வகையின் இசைக் கரணத்துப் பட்ட -- எட்டு வகையினையுடைய இசைத் தமிழில் சொல்லப்பட்ட ; வகை — முறைகளை ; தன் செவியின்

ஓர்த்து — தன் செவிகளினுல் எல்லாக் குணங்களும் அவ்யாழில் பொருந்தியுள்ளனவா என்று ஆராய்ந்து;

ஏவலன் — (கோவலனைப்பார்த்து) இதில் இசை பாடுங்கள் என்று ஏவவில்லை; பின் — மற்று; பாணி யாது என — வாசிக்கும் தாள வகை யாது அறிய வேண்டுகிறேன் என்பவள்போல; கோவலன் கை யாழ் நீட்ட — கோவலன் கையிலே யாழை நீட்டிக் கொடுக்க; அவனும் —; காவிரியை நோக்கினவும் — காவிரியைப் பற்றிய பாடல்களையும்; கடற்கானல் வரிப்பாணியும் — கடற்கரைச் சோலையைப் பற்றிய வரிப்பாடல்களையும்; மாதவி தன் மனம் மகிழ — மாதவியின் மனம் மகிழும் படியாக; வாசித்தல் தொடங்கும்—யாழை வாசிக்கத் தொடங்கினன்.

கட்டுரை என்பது இக்காதைக்கு ஒரு முன்னுரை போல்வது. படம் — மூடும்துணி; அதாவது உறை. பத்தர் என்பது யாழின் அடிப்பகுதியில் பருத்து அகன்ற ஒரு உறுப்பு. கோடு — தண்டு. ஆணி — யாழின் உறுப்புகளைப் பொருத்துவதற்காகப் பூட்டப்பட்டிருக்கும் ஆணிகள். திறம் — வகை. கோடு, ஆணி, நரம்பு என்பன அவற்றைப் பற்றிய குற்றங்களைக் குறித்து நிற்கும் பெயர்கள். கண்ணிய — ஆராயப்பட்ட; நண்ணிய — பெருமை பொருந்திய; தாள் — மோதிரம்; கிளை — இனம்; சீர் — இசையின் ஒழுங்கு; வார்தல் — சுட்டுவிரல் யாழின்மேல் செய்கின்ற தொழில்; வடித்தல் — சுட்டு விரலும் பெருவிரலும் சேர்த்து யாழின் நரம்புகளை உட்புறமாகவும், வெளிப் புறமாகவும் ஆராய்தல்; உந்தல் — நரம்புகளைத் தடவுதல்; உறழ்தல் — நரம்புகளையெல்லாம் வரிசையாக இசை எழுப்பிப் பாராமல், ஒரு நரம்பையோ, இரு நரம்பையோ இடையிட்டு ஆராய்தல். தெருட்டல், அள்ளல், பட்டடை — இவைகளுக்குப் பொருள் தெளியவில்லை; பாணி — தாளம்; மன் — அசை.]

★

காவிரியாற்றைப் பற்றிய பாடல்கள்

(2)

சோழ நாட்டிற்குச் செல்வத்தையும் வளத்தையும் தருவது காவேரி யாறு. கோவலன் யாழை வாசித்துப் பாடும்போது, முதலாவதாக, இவ்வாற்றைப் பற்றிப் பாடுகின்றான். காவேரியாறு சோழநாட்டு மக்களுக்கு மட்டுமல்லாமல், அந்நாட்டிற்கு வரும் எல்லா மக்களுக்கும் தன் செல்வத்தைக் கொடுக்கும். காவேரி நாட்டின் அரசனாகிய சோழன், தன் புகழை நிலை நாட்டக் கங்கை பாயும் நாடு வரையில் செல்லுகின்றான். தன் கணவனாகிய சோழன், கங்கையாகிய மற்றொரு பெண்ணை நாடிப் போனான் என்று காவேரி பிணங்கவில்லை. எங்கே போனாலும், தன்னுடைய நாட்டில் செங்கோல் முறை தவறாமல் ஒழுங்காகச் சோழ மன்னன் ஆட்சி செய்வதால், கற்புடைய நீ இவ்வாறு

உன் கணவனிடம் பிணங்காமல் இருக்கிறாய் என்று அறிந்தேன். காவேரியே, நீ வாழ்வாயாக!

(3)

சோழ மன்னன், தன் புகழை நிலை நாட்டப் பாண்டியனுக்குரிய கன்னியாகுமரி வரையில் சென்றான். எங்கே சென்றாலும், தன் நாட்டைத் தவறாமல் செங்கோல் செலுத்தி வந்தான். கயல்மீன்களைக் கண்ணாகவுடைய காவிரியே, உனது தலைவன் உன்னை விட்டுக் கன்னியாகுமரியை நோக்கிப் போனபோதும் நீ அவனுடன் பிணங்கவில்லை. மனவுறுதியுள்ள பத்தினிகளின் பெருங் கற்புத் திறமை இப்படித்தான் இருக்குமென்று அறிந்தேன் காவேரியே நீ வாழ்வாயாக!

(4)

காவேரி யாற்றில் எல்லாக் காலங்களிலும், வெள்ளம் நிறைந்து ஓடும். ஆகையால், காவேரி பாயும் இடமெல்லாம், மக்களின் உழைப்பும், ஓசையும் நிறைந்திருக்கும். இரு பக்கங்களிலும், நிலத்தை உழவு செய்பவர் ஓசையும், ஆற்றின் நீர் மதகுகளின்மேல் மோதும் ஓசையும், வாய்க்கால்களில் வெள்ளம் நிறைந்து, உடைத்துக் கொண்டு ஓடும் ஓசையும், புது நீர் விழாவில் விழாக் கொண்டாடுவோர் ஓசையும் எப்பொழுதும் ஆரவாரிக்கும்படி நீர் ஓடும் காவேரியே! இவ்வளவு சிறப்பிற்கும் காரணம், உன் தலைவனான சோழ மன்னன், தன் வீரர்களைக் கொண்டு, நாட்டைப் பாதுகாத்துச் செங்கோல் செலுத்துவதே யாகும். காவேரியே, நீ நெடிது வாழ்வாயாக!

(2)

திங்கள் மாலை வெண்குடையான்,
சென்னி செங்கோல் அது ஓச்சிக்,
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்,
புலவாய் வாழி காவேரி!
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாது ஒழிதல், கயற்கண்ணாய்!
மங்கை மாதர் பெருங்கற்பு என்று
அறிந்தேன் வாழி காவேரி!

பதவுரை

[**திங்கள்** — சந்திரனைப் போன்று ஒளி வீசுகின்ற; **மாலை** — முத்து மாலை யணிந்த; **வெண்குடையான்** — வெண் கொற்றக் குடையை உடையவனாகிய; **சென்னி** — சோழ மன்னன்; **செங்கோல் அது ஓச்சி** — தனது செங்கோலை ஒழுங்காகச் செலுத்தி; **கங்கை தன்னைப் புணர்ந்தாலும்** — கங்கையாற்றைக் கூடினாலும்; (என்றது, தனக்குரிய நாட்டை நன்கு காத்துப் பின் கங்கையாறு வரையுள்ள மற்ற நாடுகளையும் வயப்படுத்தி ஆண்டாலும்) **காவேரி** — ஏ, காவிரியே! **புலவாய்** — நீ வெறுத்துப் பிணங்க மாட்டாய்; (என்றது, காவிரிதான் பாயும் நாட்டிற்கு மட்டுமல்லாமல், மற்ற நாடுகளையும் காப்பாற்றக் கூடிய அவ்வளவு வளமுடையது) **வாழி** — ஆதலால் நீ வாழ்வாயாக

கங்கை தன்னைப் புணர்ந்தாலும் — அவன் அவ்வாறு கங்கை யாற்றைக்கட்டி ஆண்டாலும்; புலவாது ஒழிதல் — அதற்கென்று மாறுபடாமல் இருத்தல்; கயல் கண்ணாய் — கயல் மீன்களாகிய கண்ணையுடையவளே!; மங்கை மாதர் பெருங் கற்பு என்று — மங்கையாகிய மென்மைத் தன்மையுடைய உன் பெரிய கற்பேயாகும் என்று; காவேரி — காவேரியே; அறிந்தேன் வாழி — நான் அறியலானேன் நீ வாழ்வாயாக. ஓச்சுதல் — செலுத்துதல்;]

(3)

மன்னும் மாலை வெண்குடையான்,
வளையாச் செங்கோல் அது ஓச்சிக்,
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்,
புலவாய் வாழி காவேரி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்,
புலவாது ஒழிதல், கயற்கண்ணாய்!
மன்னு மாதர் பெருங்கற்பு என்று
அறிந்தேன் வாழி காவேரி!

பதவுரை

[மன்னும் மாலை வெண்குடையான் — நிலை பெற்ற முத்துமாலை கட்டிய வெண் கொற்றக் குடையுடைய சோழ மன்னன்; வளையாச் செங்கோல் அது ஓச்சி — வளையாத செங்கோலைச் செலுத்தி; கன்னி தன்னைப் புணர்ந்தாலும் — குமரியாற்றைக் கூடினாலும்; காவேரி — காவிரியே; புலவாய் — நீ வெறுத்துப் பிணங்கமாட்டாய்; வாழி — (ஆதலால்) நீ வாழ்வாயாக.

கன்னிதன்னைப் புணர்ந்தாலும் — குமரியை அவன் சேர்ந்தாலும் புலவாது ஒழிதல் — நீ வெறுத்துப் பிணங்காமல் இருத்தல்; கயல் கண்ணாய் — கயல் மீன்களாகிய கண்களையுடையோய்; மன்னும் மாதர் பெருங் கற்பு என்று அறிந்தேன் — நிலைபெற்ற அழகிய உன் உறுதியான கற்புத்தன்மை என்று அறிந்து கொண்டேன்; காவேரி— வாழி — நீ வாழ்வாயாக!

முன் பாட்டில் கங்கை என்றதற்கு மாறாக இப்பாட்டில் கன்னி என்றார். கன்னி — குமரியாறு. இது தெற்கில் குமரிமலைப் பக்கத்தில் ஓடிய ஒரு ஆறு. அம்மலையோடு, அதனையும் கடல் கொண்டதாக வரலாறு உண்டு.]

(4)

உழவர் ஓதை, மதகு ஓதை,
உடைநீர் ஓதை, தண்பதம்கொள்
விழவர் ஓதை, சிறந்து ஆர்ப்ப
நடந்தாய் வாழி காவேரி!
விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப
நடந்த எல்லாம், வாய்காவா
மழவர் ஓதை வளவன் தன்
வளனே வாழி காவேரி!

பதவுரை

உழவர் ஓதை — உழவர்களின் ஓசையும்; மதகு ஓதை — மதகு களில் உண்டாகும் ஓசையும்; உடைநீர் ஓதை — நீர் உடைத்துக் கொண்டு ஓடுவதால் உண்டாகும் ஓசையும்; தண்பதம்கொள் — புது நீர் விழாவில் நீராடுகின்ற; விழவர் ஓதை — விழாக் கொண்டாடு வோர் ஓசையும்; சிறந்து ஆர்ப்ப — சிறப்போடு ஆரவாரிக்கும்படி; காவேரி —; நடந்தாய் — நீ சென்றாய்; வாழி — நீ வாழ்வாயாக!

விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப — விழாக் கொண்டாடுவோர் ஓசை சிறந்து ஆரவாரிக்கும்படி; நடந்தவெல்லாம் — நீ ஓடிய ஓட்டத்திற் கெல்லாம்; வாய்காவா — மதில் வாயிலைக் காவல் செய்ய வேண்டாத; மழவர் ஓதை — வீரர்களின் ஓசையையுடைய; வளவன்தன் — சோழ னுடைய; வளனே — வளமான செங்கோலாட்சியே (காரணம்; ஆதலால்) காவேரி —; வாழி — நீ நெடிது வாழ்வாயாக!

மதிலைக் காவல் செய்ய வேண்டாதபடி, வீரர்கள் ஆரவாரிப்பு எங்கும் நிறைந்திருப்பதை, வாய்காவா மழவர் ஓசை என்றார். தண் பதங் கொள்ளுதல் — புது நீராடுதல்.]

★

புகார் நகரத்தைப் பற்றிய பாட்டுகள்

நாட்டின் வளமைக்குக் காரணமான காவிரியின் சிறப்பை முத லில் பாடிவிட்டுப் பின்னர் தலைநகரான புகார் நகரத்தின் சிறப்பைப் பாடுகின்றார்.

(5)

தலைவன் தன் காதலியை விட்டுப் பிரியும்போது, மீண்டும் விரை வில் திரும்பி வருவதாகச் சொன்னவன், வெகு நாள் கழித்து வந்தான். தலைவியின் தோழி அவனைப்பார்த்து, வேறொருவனைப் பற்றிச் சொல் வதுபோல் சொல்லுகிறாள். "கடற்கரையோரத்தில், தலைவன் தன் தலைவியை விட்டுப் பிரியும்போது, கடல் தெய்வத்தைச் சுட்டிக்காட்டி, அதன்மேல் பலமுறை ஆணையிட்டு, வெகு சீக்கிரத்தில் திரும்பி வருவ தாக உறுதிமொழிகளைச் சொல்லிப் பிரிந்தான். இவ்வளவு ஆணை மொழிகளைச் சொல்லியும், அவர் தலைவியை வஞ்சித்து விட்டார். நாங் கள் தலைவனைப் பற்றிப் பெருமையாக நினைத்திருந்தோம். இம்மாதிரி வஞ்சிக்கும் குணம் உள்ளவரென்று ஏழையாகிய நாங்கள் தெரிந்து கொள்ளவில்லை. மெய்பேசுவதுபோல, ஒருவர் பேசினால், நாங்கள் அவரை எளிதில் நம்பி விடுவோம். புகார் நகரமாகிய எங்கள் ஊரி லுள்ள ஆம்பற் பூக்களும்கூட, இப்படி ஏமாந்துவிடும். கடற்கரையில் வெண்ணிறமுள்ள சங்குகளையும், முத்துக்களையும் சந்திரனும் அதனைச் சுற்றிய நட்சத்திரங்களும் ஆகும் என்று ஏமாந்து நினைத்து, இந்த ஆம்பல் பூக்கள் கட்டவிழ்ந்து மலர்ந்து விடும். இவ்விதமாக, வஞ்சனை என்பதே அறியாத காவிரிப் பட்டினமே எங்கள் ஊராகும்"

(6)

தோழி, பின்னும் சொல்லுகின்றாள். நானும் தலைவியும் உப்பங்கழிச் சோலையில் இருக்கும்போது, அயலார் ஒருவர் வந்து, என் கையில் சில பொருள்களைத் தந்து, தலைவிக்குக் கொடுக்கும்படிச் சொன்னார். பல தடவைகளிலும், என்னைத் தேடி வந்த அவர், இப்போது வருவதில்லை. அவருடைய காரியமோ நிறைவேறி விட்டது. இப்பொழுது, நாங்கள் அவரைத் தேடிப் போகும்படியா யிருக்கின்றது' இந்த நிலைமைக்கு நாங்கள் வருவோமென்று நாங்கள் நினைக்கவேயில்லை. எங்கள் ஊரில் இவ்விதமான வஞ்சகங்கள் நடப்பது வழக்கமில்லை. எங்கள் ஊரிலுள்ள வண்டுகளுங்கூடப் பெண்களின் கண்களுக்கும், தாமரைப் பூவுக்கும் வேறுபாடு தெரியாமல் தடுமாறுவதுண்டு. அப்படிப்பட்ட ஊராகிய காவிரிப் பட்டினமே எங்கள் ஊர்.

(7)

தோழி மேலும் கூறுகின்றாள். எங்கள் ஊரில் வஞ்சகமென்பதே இல்லையாதலால், உண்மைக்கும், வஞ்சகத்திற்கும் வேறுபாடு தெரிந்து கொள்ளக் கூடாதவர்களாக நாங்கள் இருக்கின்றோம். இக் காரணத்தால்தான், அந்தத் தலைவனுடைய வஞ்சகத்தை நாங்கள் தெரிந்து கொள்ள முடியவில்லை. எங்கள் ஊரில் கடற்கரையோரத்தில், சிறு பெண்கள், வண்டல் மண்ணினால் பொம்மைகளைச் செய்து விளையாடிக் கொண்டிருப்பார்கள். அலைவீசும் போது, கரையில் வந்து மோதுகின்ற சங்குகள், இப்பொம்மைகளின் மீது விழுந்து அவைகளை அழித்து விடும். இதைக் காணும் இச்சிறுமிகள் தம்மார்பில் அணிந்திருக்கும் பூமாலைகளைக் கழற்றி, அலைகளைத் தடுத்து விடலாம் என்றெண்ணி, அம் மாலைகளை வீசி, அலைகளை யடிப்பார்கள். மாலைகளிலுள்ள பூக்கள் எங்கு பார்த்தாலும் சிதைந்து கிடக்கும். அவ்வழியில் வருபவர்கள் நிலத்தில் கிடக்கும் இப் பூக்களைப் பார்த்து, இவை அழகிய பெண்களின் கண்களே என்று நினைத்து, நின்று விடுவார்கள். இத்தகைய வஞ்சகமில்லாத புகார் நகரே எங்கள் ஊராகும்.

(5)

கரியமலர் நெடுங்கண் காரிகைமுன்,
"கடல் தெய்வம் காட்டிக் காட்டி
அரியசூள் பொய்த்தார், அறன் இலர், என்று
ஏழையம் யாங்கு அறிகோம் ஐய?
விரிகதிர் வெண்மதியும், மீன்கணமும்
ஆமென்றே, விளங்கும் வெள்ளைப்
புரிவளையும், முத்தும்கண்டு, ஆம்பல்
பொதி அவிழ்க்கும் புகாரே எம்மூர்

பதவுரை

[கரியமலர் நெடுங்கண் — மலர்போன்ற அழகிய நீண்ட கண்களையுடைய; காரிகை முன் — தலைவி முன்பாக; கடல் தெய்வம் காட்டிக் காட்டி — கடலில் வாழ்கின்ற வருணனாகிய கடல் தெய்வத்தைப் பல

முறைக் காட்டிக் காட்டி; அரியசூள் — அருமையான ஆணைமொழி களைக் கூறி; பொய்த்தார் — பின் வஞ்சித்து விட்டார். அறன் இலர் என்று — அவர் அறக்குணம் இல்லாதவர் என்று; ஐய —; ஏழையம் — ஏழையாகிய நாங்கள்; யாங்கு அறிகோம் — எவ்வாறு அறிவோம்!

விளங்கும் வெள்ளைப் புரிவளையும் முத்தும் கண்டு — ஒளி வீசுகின்ற வெள்ளை நிறமான கோடுகளையுடைய சங்குகளையும், முத்துக் களையும் பார்த்து; விரிகதிர் வெண்மதியும் மீன் கணமும் ஆம் என்றே— இவை விரிந்த கதிர்களையுடைய வெண்ணிறமான சந்திரனும், அதனைச் சுற்றிய நட்சத்திரங்களும் ஆகுமென்று தவறுகக் கருதி; ஆம்பல் — ஆம்பல் பூ; பொதி அவிழ்க்கும் — கட்டு அவிழ்கின்ற; புகாரே — காவிரிப் பட்டினமே; எம்மூர் — எமது ஊராகும்; (ஆதலால் நாங் களும் பிழையாக உணரும் அறிவுடையோம்)

[பொதி — கட்டு. புரி — வரி, கோடு.]

(6)

காதல ராகிக் கழிக்கானல்
கையுறை கொண்டு எம்பின் வந்தார்;
ஏதிலர் தாமாகி, யாம் இரப்ப
நிற்பதை யாங்கு அறிகோம் ஐய?
மாதரார் கண்ணும் மதிநிழல் நீர்
இணைகொண்டு மலர்ந்த நீலப்
போதும் அறியாது வண்டு
ஊசலாடும் புகாரே எம்மூர்.

பதவுரை

[காதலர் ஆகி — என் தலைவிமேல் காதல் உடையவராகி; கழிக் கானல் — உப்பங்கழியின் சோலையில்; கையுறை கொண்டு — கையுறையாகச் சில பொருள்களைக் கொண்டு; எம்பின் — எம்மைப் பின் தொடர்ந்து; வந்தார் — அன்று ஒருவர் வந்தார்; ஏதிலர் தாமாகி யாம் இரப்ப — இப்பொழுது அயலார் போலாகி நாங்கள் அவரைக் கெஞ்சும்படி; நிற்பதை — நிற்கவேண்டி வருவதை; யாங்கு அறி கோம் ஐய — நாங்கள் முன்பே எவ்வாறு அறிவோம் ஐயா?

மாதரார் கண்ணும் — பெண்களின் கண்களையும்; மதிநிழல் — சந்திரனின் ஒளியால்; நீர் இணைகொண்டு மலர்ந்த — தண்ணீரின் அளவாக மலர்ந்த; நீலப் போதும் — நீலோற்பலப் பூவையும்; அறியாது — வேறுபாடு தெரியாமல்; வண்டு ஊசலாடும் புகாரே — வண்டுகள் தடுமாறுகின்ற காவிரிப் பட்டினமே; எம்மூர் — எமது ஊராகும்.

கையுறை — கைப்பொருள். ஏதிலர் — பகையும் நட்பும் இல்லாத அயலார். நீர் இணைகொண்டு — தண் உயரும் அளவாகத் தானும் உயர்ந்து வளர்ந்து.

(7)

மோது முதுதிரையான் மொத்துண்டு,
போந்து, அசைந்த முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரிமணல்மேல் வண்டல்
உழுது அழிப்ப மாழ்கி ஐய
கோதை பரிந்து அசைய, மெல்விரலால்
கொண்டு ஓச்சும் குவளைமாலைப்
போது சிறங்கணிப்பப் போவார்கள்
போகப் புகாரே எம்மூர்.

பதவுரை

[மோது முது திரையால் — கரையை மோதுகின்ற பழைய பெரிய அலைகளால்; மொத்துண்டு — தாக்கப்பட்டு; போந்து — கரையில் வந்து; அசைந்த — அந்நீரால் அசைந்து கொண்டிருந்த; முரல்வாய்ச் சங்கம் — ஒலிக்கின்ற வாயையுடைய சங்குகள்; மாதர் — பெண்கள்; வரி மணல்மேல் வண்டல் உழுது அழிப்ப — அழகிய மணல் மீது செய்து விளையாடும் வண்டற் பொம்மையைப் பேர்த்து அழித்து விடுதலால்; மாழ்கி — அப்பெண்கள் மனங்கலங்கி; கோதை — தம் மார்பில் அணிந்த மாலை; பரிந்து அசைய — அறுந்து அசையும்படி; மெல்விரலால் — மெல்லிய விரல்களால்; கொண்டு ஓச்சும் — கையில் கொண்டு வீசுகின்ற; குவளை மாலை — குவளைப் பூக்களாலாகிய மாலையின்; போது — உதிர்ந்த பூக்கள்; சிறங்கணிப்ப — கண்களைச் சிறங்கணித்துப் பார்த்தாற்போலக் கிடப்ப; போவார் — அவ்வழியே போவோர்; போகா — அவற்றைக் கண்ணென்று கருதி அப்பால் போகாத; புகாரே — காவிரிப் பட்டினமே; ஐய — தலைவ!; எம்மூர் — எமது ஊராகும்.

முரல்வு — சங்குகள் தம்முள் இருக்கும் முத்துக்களை ஈனுதற்கு வருந்தும் வருத்தத்தால் செய்த ஒலி. சிறங்கணித்துப் பார்த்தல் — ஒரு வகையாகச் சாய்த்துப் பார்க்கும் கடைக்கண் பார்வை.

(தொடரும்)

புத்தக ஆராய்ச்சி

★

[*கல்லின் வேட்கை:* முதலிய கதைகள். ஆசிரியர் ரவீந்திரநாத் டாகூர். மொழி பெயர்ப்பு: த. நா. குமாரஸ்வாமி, த. நா. ஸேனபதி: பிரசுரம் அல்லயன்ஸ் கம்பெனி, மைலாப்பூர், சென்னை. விலை ரு. 2.]

ஆற்றங்கரையோரம் ஒரே பசுமையாகத் தோன்றும் பொட்டல் நிலம், வெள்ளத்தில் மூழ்கிய சணல் வயல்கள், பச்சைப்பசேலென்று கார் பயிர் ஆடுவது படித் துறையிலிருந்து கிராமத்துக்குப் போகும் பாதை மரங்கள், நெருங்கி வளர்ந்து நிழலடர்ந்த கிராமம் எல்லாம் ஒவ்வொன்றாக அவன் கண் முன் வந்து கொண்டேயிருந்தன. இந்த நீரும், நிலமும், வானும் நாற்புறமும் காணும் சஞ்சலமும் உணர்வும், ஒலியும், நிலம், வானம் இவற்றின் பரப்பும், விசித்திர விநோதங்களும், கணக்கற்ற தூரமும் அளவில் அடங்காது அழிவற்றதாய் கண் கொட்டாமல், மௌனமாய் சுழலும் இப்பேருலகமே அவ்வாலிபனுக்குப் பிடித்திருந்தன''

இதைப் படித்தவுடன் மகோன்னதமான ஒரு கலை உள்ளத்திலிருந்து வந்த அனுபவ வெளியீடு என்பது தெரிகிறதல்லவா? வாழ்க்கையை மிக மிக நுட்பமாக கூர்ந்து நோக்கி ஒப்பற்ற கலைஞர் அனுபவித்த உண்மைதான் இது. கவியரசர் தாகூர் 'அதிதி' என்னும் கதையில் இந்த விதம் வர்ணித்திருக்கிறார். கதைகள் மூலம் இந்தியப் பண்பையும், நாகரீகத்தையும் உலகுக்கு எடுத்துக் காட்டிய கலைவள்ளல் தாகூர் என்று நமது 'டி. கே. ஸி.' எத்தனையோ தரம் சொல்லியிருக்கிறார்கள். கண் எதிரே அற்புதமான உலகங்களை காட்டவல்ல பேரிஞர். சின்ன சிறு நிகழ்ச்சியையும் சிந்தையிலே தேன் துளிக்க எடுத்துச் சொல்லும் ஆற்றல் இயற்கையாகவே தாகூருக்கு அமைந்திருந்தது. கதை என்ன என்பதையும், கதையிலே என்ன ஆனந்தம் இருக்கிறது என்பதையும் உண்மையாக அறிய வேண்டுமானால் தாகூர் எழுதிய கதைகளைப் படிக்க வேண்டும்.

கல்லின் வேட்கை முதலிய சிறு கதை புத்தகத்திலே தாகூர் எழுதிய எழுதிய 7 கதைகள் அடங்கியிருக்கின்றன. இதய வீணையிலே அவை எல்லா இசைகளையும் எழுப்பும் சக்தி படைத்தவை. மொழி பெயர்ப்பு சுகமாக இருக்கிறது. அமைப்பு அற்புதம். பிரசுராலயத்தாரை வேண்டிய மட்டும் பாராட்டலாம்.

கிடைக்கப் பெற்றோம்:

[*லோபியின் காதல்:* ஆசிரியர் மாலியர். மொழி பெயர்ப்பு எஸ். வி. கணபதி: பிரசுரம் அல்லயன்ஸ் கம்பெனி, மைலாட்பூர், சென்னை. விலை ரு. 1—4—0]

●

[*குழலோசை:* ஆசிரியை: ஸரோஜா ராமமூர்த்தி பிரசுரம் அல்லயன்ஸ். கம்பெனி விலை ரு. 2—8—0]

●

[*முதல் கதை:* ஆசிரியர் ஆர். திருஞானசம்பந்தம். பிரசுரம்: சிந்தாமணி பப்ளிகேஷன்ஸ், ராஜவீதி, கோயமுத்தூர்.]

●

ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாலயம், கோயமுத்தூர் ஜில்லா. ஆண்டு அறிக்கை 1943-44.

சிறு கதை :

இருளும் ஒளியும்

எஸ். ஆர். வெங்கடேஸ்வரன்

வழக்கம் போல அன்று மாலை இடுப்பில் தாங்கிய குடத்துடன் சகுந்தலா நீரெடுத்து வருவதற்காக ஆற்றங்கரையை நோக்கி நடந்து போய்க் கொண்டிருந்தாள். இரண்டு பக்கங்களிலும் பாதையை மறைத்து சிறு சிறு புல்லும், பூடும் படர்ந்திருந்தன. முன் தினம் பெய்த சிறு மழையால் பச்சை மரங்கள் புது மலர்ச்சியுடன் தலையை அசைத்து சகுந்தலைக்கு நல்வரவு கூறின. அப்போது அவள் எதிரில் ஒரு இளைஞன் வந்து கொண்டிருந்தான். அந்த இளைஞனைக் கண்டதும் அவள் முகம் ஏனோ வெட்கத்தால் சிவந்தது. இதற்கு முன் இந்த வாலிபனைப் பார்த்ததில்லை. அவன் நடை யுடை பாவனையிலிருந்தும், மரியாதையாகத் தங்கி ஒரு புறமாக செல்வதிலிருந்தும் அந்த ஊருக்கு அவன் புதிது என்பதைக் கண்டுகொண்டாள். இயற்கையான நாணத்தால் அவள் சற்று நகர்ந்து நின்றாலும் இதயத்தில் என்ன என்னவோ உணர்ச்சிகள் பால் போல் பொங்கி வளிந்தது.

ஆற்றங்கரைக்குச் சென்று குடத்தை லேசாகத் தேய்த்துக் கொண்டிருந்த போதும் அவளுடைய உள்ளத்தில் அந்த ஒரே ஒரு எண்ணம் தான் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஒரு கணத்தில் எவ்வளவோ இன்ப காவியம் இயற்றி விட்டாள். ஓடும் நீரைப் போல அவள் உள்ளத்தில் கற்பனை வெள்ளம் பிரவகித்துக் கொண்டிருந்தது. அந்த வாலிபன் யாராக இருக்கக் கூடும்? இந்த யோசனையை நூறாயிரம் தடவை தன்னையே கேட்டுக் கொண்டு மண்டையை உடைத்துக் கொண்டாள். யாரா யிருந்தாலென்ன நல்ல கேள்வி! ஒரு வேளை ....உம்......... விவாகம் செய்து கொண்டால்! நல்ல கூத்து! அப்போது எங்கோ பக்கத்தில் தண்ணீரில் ஒரு மண் கட்டி சரிந்து விழுந்தது. விழுந்த மண் கொஞ்ச நேரத்தில் தண்ணீரோடு இரண்டற கலந்து விட்டது. அப்படியே அவள் உள்ளமும் அந்த இளைஞனோடு கலந்து விட்டது.

மறுநாள் காலையில் வீட்டு வாசலில் சகுந்தலா கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். கோலம் போட்டுக் கொண்டிருக்கும் போதே சில மெல்லிய ரஞ்சிதமான கோலங்களும் மனத் திரையில் பதிந்து கொண்டிருந்தது. வாழ்க்கையே ஒரு கோலம் தானே. திசை தப்பிய பறவையைப் போல அங்கு மிங்கும் சுற்றினாலும் கடைசியாக ஒரு கூட்டை அதாவது இருப்பிடத்தை அடைந்து தானே தீரவேண்டும். முடிவு முதல் தெரியாத எத்தனையோ அற்புத கோலங்களை இந்த இளம் பெண்கள் போடுகிறார்கள். ஆனந்த மயமான அருணோதயத்திலே, புது மலர் போல் புன்னகை சூடிக் கோலமிடும் இப் பூங்கொடிகளுக்கு தங்களுடைய எழில் பொங்கும் யௌவனத்தின் இன்பகரமான வாழ்க்கை எங்கு ஆரம்ப மாகிறது எங்கே முடிவடைகிறது என்பதின் ரகசியம் தெரியுமா? நதி கடலில் கலந்து விடுகிறது. ஆனால் இவர்களுடைய

வாழ்க்கை பம்பரம் போல் ஒரே சுற்றாக சுற்றிக் கொண்டிருப்பதா அல்லது வால் நக்ஷத்திரம் போல் திடீரென்று மங்கி மறையக் கூடியதா? இன்னும் என்னென்னவோ நினைத்தாள். இப்படி நினைத்துக் கொண்டே எதிர் வீட்டைப் பார்த்த பொழுது அவள் கண்களையே நம்ப முடியவில்லை. அவனே தான். நேற்று நெஞ்சைப் பறி கொடுத்தாளே, அதே இளைஞன் தான் நின்று கொண்டிருந்தான்: நின்று கொண்டு தானிருந்தானா? அவன் உதட்டருகே விளையாடும் அந்த குறும்புப் புன்னகை! மறு கணமே கோலமிட்ட கோகிலம் மின்னல் போல் வீட்டிற்குள் மறைந்து விட்டாள்.

உள்ளே சென்ற சகுந்தலை நிலைக் கண்ணாடியின் முன் நின்று தன்னை மேலும் கீழும் பல தரம் பார்த்துக் கொண்டாள். கண்ணாடிக்கு எதிரே நின்று அலங்கரித்துக் கொள்வதில் எப்போதுமே அவளுக்கு அலாதியான ஆசை. அழகான கண்ணாடியில் முகம் மட்டும் தானா தெரிகிறது! உள்ளமே அப்படியே தெரிகிறதல்லவா? வந்த அவசரத்தில் கதவைச் சாத்த மறந்து விட்டாள். அப்போது 'கண் வழி புகுந்த காதலன்' கண்ணாடிக்கு முன் நிற்கும் தன் உணர்ச்சிகளையே தன் மனச் சிறையில் சிறை பிடித்து விட்டானே? ஆகாயத்திற்கே பறந்து விடலாம் என்று நினைத்தாள். ஆனால், மந்திர சக்தி ஒன்றும் அவளிடம் இல்லாததால் பேசாமல் இருந்து விட்டாள். இந்த அற்புதக் காட்சியை மட்டும் என்றும் மறப்பதில்லை என்ற விரதத்தை மட்டும் உறுதி செய்து கொண்டாள்.

"கண்டதும் காதல்" என்று சொல்லுகிறார்களே அந்த நோய் சகுந்தலாவைப் பரிபூரணமாகப் பற்றிக் கொண்டது. அவளை மட்டுமா அது பற்றிக் கொண்டது? அந்த இளைஞரையும் அல்லவா அது பிடித்து விட்டது. ஆனாலும் தென்றலில் ஆடும் இளம் மலரைப் போல அவன் முகத்தில் உல்லாசப் புன்னகை யெங்கே? அவன் கண்களிலே கவிகள் வர்ணிக்கும் அந்த ஆனந்த லாகிரி எங்கே? கதாநாயகர்கள் போக்கிலே இயற்கையாக வழியும் அந்த அசட்டுத் தனம் எங்கே?

சரி! அவளோடு பேசத்தான் முடியாது. ஏதாவது அவள் படித்த புத்தகத்தை நானும் தான் படித்துப் பார்க்கலாமே. இதில் விதியின் சதி எப்படி குறுக்கிடும்? இப்படி நினைத்துக் கொண்டு ஒரு சிறு பையனை ஏதாவது புத்தகம் கேட்டு வாங்கி வரும்படி கதைகளில் படித்திருந்த தந்திரத்தையே அவனும் கையாண்டான். சகுந்தலை சந்தர்ப்பத்தை நழுவ விடுவாளா? சகுந்தலை உடனே காளிதாஸருடைய "சாகுந்தலத்"தை கொடுத்தனுப்பினாள். புத்தகம் கைக்கு வந்தவுடன் நமது ஆனந்தன் கொட்டை எழுத்தில் எழுதியிருந்த 'சகுந்தலை' என்ற அவளுடைய பெயரை பத்துத் தடவை படித்தான். சாகுந்தலத்தை பல தடவை அவன் படித்திருந்த போதிலும் மீண்டும் இரண்டு தடவை இன்று படித்தான். புத்தகத்தை படிக்கும் போதே நீரெடுத்து வருவதற்கு அவள், நித்தில புன்னகை சூடி நடந்திடும் திருக்கோலத்தை' அவன் மனம் கற்பனை பண்ணிக் கொண்டிருந்தது.

அன்று மாலையும் அவள் எப்பொழுதும் போல் ஆற்றங் கரைக்குப் புறப்பட்டாள்.

ஆனந்தன் அதற்கு முன்பே ஆனந்தத் தென்றலிலே நதிக் கரையில் அங்கு மிங்கும் நடந்து கொண்டிருந்தான்.

அடுத்த கட்டம் துப்பறியும் நாவல் படித்தவர்களுக்கு திடுக்கிடும் படியா யிராது. எல்லாக் கதா நாயகிகளையும் போல 'பாம்பு, பாம்பு' என்று கத்தினாள். ஆனந்தனுக்கு தைரியம் பிறந்தது. நிச்சயம் அந்தக் கருநாகம் வரண்ட வாழைச் சருகாகத் தானிருக்கும் மென்று தாவினான். அப்போது தான் யாரும் இருக்க மாட்டார்களே!

மெது மணலில் இருவரும் உட்கார்ந்தார்கள் லேசான நிலவு, அலைகளின் இன்னிசை, மனோகரத் தென்றல், தூய இரு உள்ளங்கள் — இரண்டு இளம் காதலர்கள் பேச ஆரம்பித்தால் அதற்கு முடிவு தான் ஏது?

அடுத்த நாள் சந்தித்த போது, தந்தி வந்ததின் பேரில் உடனே ஊருக்குப் புறப்படுவதாகச் சொன்னான். தன் நெஞ்சம் என்றும் மறவாது என்பதையும் தெரிவித்துக் கொண்டான்.

பிறகு காலதேவன் சற்று கண்ணயர்ந்து மீண்டும் விழித்தான். சில வருஷங்கள் சென்று விட்டன. இப்போது தான் சகுந்தலைக்கு "பெண்புத்தி பின் புத்தி" என்ற மொழி ஞாபகத்துக்கு வந்தது. அடடா! ஒரு தந்தி கொடுப்பதற்கு அவனுடைய விலாஸம் கூட தெரியாமல் போய் விட்டதே. நன்றாகக் கேட்டிருக்கலாம். தீரவிசாரித்திருக்கலாம். தானாக அவனுக்குக் கடிதம் எழுதி ஏதாவது பார்த்துக் கொள்வதற்கும் இந்தக் காகிதப் பஞ்சத்தில் முடிகிறகாரியமா? சொல்லி வைத்தாற்போல் எதிர் வீட்டிலிருந்தவர்களும் போய்விட்டார்கள். இனி எங்கே போய்த்தேடுவது. அவனைக் கண்டு பிடிப்பது எப்படி?

கொஞ்சம் கொஞ்சமாக விதியின் பேய்ச் சிரிப்பு அவள் உள்ளத்தைத் தாக்க ஆரம்பித்தது. தந்தை மாரடைப்பால் திடீரென்று மாண்டார். இளமையிலேயே தாயைப்பறி கொடுத்த சகுந்தலா இப்போது தந்தை இறந்ததை பார்த்ததும் தாங்க முடியாத தவிப்பில் தத்தளித்தாள். தான் அனாதை. இந்தக்கதி தனக்கு ஏன் நேர்ந்தது. உள்ளங்கவர் கள்வன் ஏன் இன்னும் பராமுகமாயிருக்கிறான். நல்ல வேளையாக அப்போது தான் தேகம் அழியாமை, உலகம் மாயை, எல்லாம் பொய் இந்தத் தத்துவங்கள் அவள் மனதில் பதிந்தன.

இப்போது அவளுக்கு முன்னாலிருப்பது ஒரேஒரு பிரச்சனைதான். எப்படி மிலிடரிலாரி தன்போக்கில் எதையும் பொருட் படுத்தாது போய்க் கொண்டிருக்கிறதோ, அதேமாதிரி தானும் நேராகத் தன் காதலனைச் சென்றடைந்துவிட வேண்டுமென்பதேதான். நேராக மதுரைக்கு வந்தாள். ஒரு சிறு வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொண்டாள். தன் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினாள்.

ரொம்பவும் கஷ்டப்பட்டு அலைந்து அவர் இருப்பிடம் தெரிந்து கொண்டு நேராக அந்த வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தாள். உள்ளே அவள் கண்ட காட்சி கண்களில் தீப்பொறியை நிறைத்தது. தன்னை ஏமாற்றிய வஞ்சகன் என்பது சந்தேகத்திற்கிடமில்லாமல் தெரிந்துவிட்டது. பசுத்தோல் — இல்லை புலித்தோல்

போர்த்த பசு என்பதை அறிந்தாள். ஆனல் அவனே இந்த அனல் கக்கும் கண்களையுடைய அழகியிடம் "யாரம்மா நீங்கள்" என்ருன். ஆஹா! ஒன்றும் தெரியாதவர் போல் கேட்கிருரே. அதற்குள்ளாகவே மறந்து விட்டார். சகுந்தலை கல்லாய் சமைந்து போனுள். பிறகு மெதுவாக நீங்கள் ஊருக்கு வந்ததே கனவா? இன்பமயமான அம்மாலைப் பொழுதிலே ஆற்றங்கரை மண்டபத்தில் ஆனந்தகரமாக உட்கார்ந்து இன்பக் கதைகள் பேசிக் கொண்டிருந்தோமே. அது கனவா? வாழ்க்கை பொய் யல்ல. அது இன்பக்கனவு என்று சொன்னீர்களே, அது நிஜமல்லவா? வெண்ணிலா கடல் அலையைக் கொஞ்சி விளையாடுவது போல் உன் உள்ளத்து அலைகள் எப்போதுமே என்னைச் சுற்றி விளையாடிக் கொண்டிருக்கும் என்று சொன்னதெல்லாம் கனவா? 'இந்த இல்லறத்திலே தூய்மையையும் புனிதத்தையும் நிலை நாட்டுவதற்காகவே அன்பு வாழ்க்கையையே நடத்திக் காட்டுவோம்' என்று உறுதி செய்து கொண்டதுகூட கனவுதானு? போகட்டும். கையிலே பழிச்சிடுகிறதே இந்த மோதிரம் இதுகூட உளரல் தானு? "என்னம்மா" நீங்கள் சொல்லுங்கள். எங்களில் யாருக்குப் பைத்தியம், யார் சொல்வதுபொய்" என்ருள்.

ஆனந்தன் நல்ல ஸமயத்தில் ஒரு விஷயத்தை அருகேயிருக்கும் தன் மனைவிக்கு ஞாபகப் படுத்தினன்" நேற்றைக்கு படம் பார்த்துவிட்டு வந்தபோது நம்முடைய காரிலே விழ ஓடி வந்ததே அந்த சினிமாப் பைத்தியம் தான் இது. நீபயந்து விடாதே" என்று ஆறுதல் கூறினன்.

இந்த வார்த்தை சகுந்தலாவின் உள்ளத்தை தீப்போல தகித்தது. உடனே அங்கிருந்து புறப்பட்டாள். ஒருமாதம் அவள் சுற்று சுற்று என்று சுற்றினுள். ஒரு மனேகரமான மாலை நேரத்தில் ஒரு வீட்டின் முன்பாக நின்று கொண்டிருக்கும் போது இது மதுரைப் பட்டணம் தான் என்ற நினைவு அவளுக்கு உதித்தது. இந்த ஊரை விட்டுப் போய்விடலாமென்ருலும் என் முடியவில்லை, இந்த யோசனைகளுடன் நின்றிருந்த அவள் கண்களை ஒரு இளம் குழந்தை கவர்ந்தது. அது ஒரு சின்னஞ் சிறு சிங்காரமான குழந்தை அந்தக்குழந்தையோடு கொஞ்ச வேண்டும் என்ற எண்ணம் சகுந்தலையின் உள்ளத்தில் ஆனந்த வெள்ளம் கரை புரண்டு எழுந்தது. குழந்தையும் சகுந்தலையைக் கண்டவுடன் தாயைக் கண்ட சேய் போல் தாவி வந்தது.

இந்த வேளையில் வீட்டிற்குள்ளிருந்து வெளியே வந்தது யார் என்று நினைக்கிறீர்கள். துக்கம் நிறைந்த நமது ஆனந்தனேதான். திடீரென சென்ற மாதம் மனைவி காலமாகி விட்டாள். இறப்பதற்குக் காரணத்தை விளக்க வாவேண்டும். எத்தனையோ இருக்கலாம். அது விதியின் செயல்.

"சகுந்தலா? என்னை மன்னித்துவிடு நடந்தது நடந்து விட்டது. எப்படியோ என்னை மன்னித்துவிடு. நான் ஏழை. தந்தைக்கோ கடன் இருந்தது. கடனைத் தீர்க்க அவளைக் கட்டிக் கொள்ள நேர்ந்தது. இப்போது அவள் கடனும் தீர்ந்தது. காரியங்களையும் முடித்து விட்டேன். என்ன சொல்லுகிருய்? கையிலிருக்கும் மோதிரம் தானே. அதெல்லாம்

இப்போது நன்றாக விளங்குகிறது. தெரிகிறது" என்றான்.

நின்றிருந்ததோ? தன் முகத்தில் அரும்பும் முத்துப் போன்ற வியர்

பக்கத்தில் ஒரு நிலைக் கண்ணாடி நின்றிருந்தது. அதைப் பார்த்ததும் சட்டென்று, அவளுக்குப் பழைய நினைவுகள் ஊற்றெடுக்க ஆரம்பித்தது. அந்த அற்புதக் காட்சியை ஞாபக மூட்டத்தான் அந்த நிலைக் கண்ணாடி அங்கு

வையை லேசாகத் துடைத்து விட்டுக் கொண்டே, குழந்தையை அன்புடன் மார்போடு அணைத்துக் கொண்டு "இது யார் குழந்தை" என்றாள். ஆனந்தன் "இது உன் குழந்தைதான்" என்றான்.

* * *

உள்ளும் புறமும்

திரு. நா. சு

[பழைய அரண்மனையின் அந்தப்புரம். இரவு வேளை, சோழ சக்ரவர்த்தி பரகேசரி ராஜராஜ தேவரும் அவர் தேவி உலகுடை முக்கோக்கிழான் அடிகளும்]

ராஜராஜன்: தேவி, எப்போது பார்த்தாலும் ஏன் இப்படிக் கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறாய்?

தேவி: இல்லை அரசே......

ராஜ: பின் ஏன் உன் முகம் பிரசன்னமாகக் காணவில்லை.? சதா வாட்டம் அடைந்தே இருக்கிறதே.

தேவி: சக்கரவர்த்தி மன்னிக்க வேண்டும். நான் அந்த வருத்தத்தைச் சிறிதும் பாராட்டாமல் தான் இருக்கிறேன். அதற்காகச் சந்தோஷமாகவே இருக்கப் பெரிதும் பாடுபடுகிறேன். ஆயினும்...உள்ளத்திலே ஊறிப் போன அந்த வருத்தம்.....என்னையும் அறியாமல் ஒரொரு சமயத்தில் மீறி வெளிவந்துவிடுகிறது.

ராஜ: தேவி, அவனருள் அவ்வளவு தான். அதற்காக நாம் நொந்து மனதைப் புண்ணாக அடித்துக் கொள்வதில் பயன் இல்லை.

தேவி: (தீனமான குரலில்) உம்...

ராஜ: தேவி, மற்றுஞ் சிலரைப் போல நாம் முழுதும் அபாக்கிய சாலிகள் அல்ல. ஏதோ ஈசன் கண் திறந்து இரண்டு பெண் குழந்தைகளையாவது அருளியிருக்கிறான். அவர்களைக் கொண்டே நாம் சந்தோஷம் அடைய வேண்டும்.

தேவி: சக்கரவர்த்தி, அதுவே நம் கஷ்டத்தை மறக்க ஓர் அளவு துணை புரிகிறது......என்றாலும் நம் வமிசம் விளங்க......ஓர் ஆண் குழந்தை......

ராஜ: அதையே திருப்பித் திருப்பிச் சொல்வதால் என்ன பயன்?

தேவி: இல்லை......எனக்குப் பிறக்காவிட்டாலும்......

ராஜ: மறந்திருக்கப் பார்க்கும் ஒரு விஷயத்தை ஏன் அடிக்கடி ஞாபகமூட்டுகிறாய்? அன்றொரு நாள் நாம் கொல்லிமலைப் பக்கத்தே பார்த்த அந்தத் துறவி சொன்னது நினைவு இல்லையா?

தேவி: [சற்று ஆத்திரத்துடன்] அவர் சொல்லிய பிறகுதான் வாழ்க்கையிலே ஏமாற்றம் உண்டாயிற்று.

ராஜ: எப்படி?

தேவி: எப்படியா? பின்னால் நடக்கப் போகிறதோ இல்லையோ... ஏதோ ஓர் அவச் செய்தியை முன்கூட்டியே ஒருவன் கேட்டு விட்டால், அப்பால் அவன் மனம் அதையன்றி வேறு

எதைப்பற்றியும் சிந்திக்காமல், அந்த அவச் செய்தி உண்மையாகவே போகுமாறு நடந்துகொண்டு விடுவான் அன்ருே? இதுதானே மனித இயற்கை.

ராஜ: தேவி, அவரை எதற்காக குறைகூறுகிருய்? நீ வற்புறுத்தி கேட்டதினுல் தானே, அவர் அந்தச் செய்தியை......அதுவும் இஷ்டமில்லாமலே கூறினுர்.

தேவி: ஆகவேதான் அது உள்ளத்தை அறுத்துக் கொண்டே இருக்கிறது.

ராஜ: தேவி, நமக்கு ஆண் குழந்தை பிறக்காவிட்டாலும், சோழர் குலம் தழைத்தோங்கப் பிறந்த பிள்ளைகள் அநேகர் இருக்கிருர்கள். அவர்களுள் தகுதியுடைய குழந்தை ஒன்றை எடுத்து நாம் வளர்த்து வருவோம் வருந்தாதே......

தேவி: சக்கரவர்த்தி, அதை நானும் யோசித்து வந்தேன்... ஆனுல்......

ராஜ: என்ன?

தேவி: அதே கொல்லிமலைத் துறவியாரை மறுபடியும் காணும் பாக்கியம் பெற்றேன்.

ராஜ: எப்போது?

தேவி: நேற்றிரவு கனுக்கண்டேன் முன் தடவை பார்த்த போது எப்படி விளங்கினுரோ அதே கோலத்துடன், அவர் காட்சியளித்தார். (அழுகை)

ராஜ: தேவி, என்ன விஷயம்? எதற்காக மனங் கலங்குகிருய்? நடந்ததைச் சொல்?

தேவி: அரசே, அதை எவ்விதம் சொல்வது என்பதுதான் விளங்கவில்லை......நமக்குப் புத்திர பாக்கியம் கிடையாதாம்.

ராஜ: [திடுக்கிட்டு] என்ன?

தேவி: ஆம், நாம் வேறு ஆண் குழந்தையை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டாலும் அது நமக்குத் தக்காதாம்.

ராஜ: உண்மையாகவா?

தேவி: அவர் அப்படித்தான் சொன்னுர்.

ராஜ: உம்......எல்லாம் அவன் அருள்...ஆனுல் அதற்காக நீ மனங்கலங்க வேண்டாம்......

[அந்தப்புரப் பணிப்பெண் உள் நுழைந்து]

பணிப்பெண்: செம்பொன் வீரசிம்மாசனத்து உலகுடை முக்கோக்கிழான் அடிகளோடும் வீற்றிருந்து அருளும் கோப்பரகேசரி வர்மரான ஸ்ரீதிரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜ சோழதேவி நீடூழிவாழ்க...... குளத்தூர் கிழான் திருச்சிற்றம்பலம்.

ராஜ: வரச்சொல்...

பணிப்பெண்: புத்தி (போகிருள்)

ராஜ: தேவி. உன் தந்தையாரை இந்த விஷயமாகக் கலந்தாலோசிக்கவேதான் வரச்சொல்லியிருக்கிறேன்.

தேவி: என்ன?

ராஜ: ஆம். நாம் இதைப்பற்றி நீண்டகாலமாகவே யோசித்து வந்திருக்கிருேம்.

[பல்லவராயர் வருகிருர்]

பல்லவராய: சக்கரவர்த்திகள் நீடூழிவாழ்க.

தேவி: அப்பா, நமஸ்கரிக்கிறேன்.

ராஜ: மந்திரியாரே, வரவேண்டும்.

பல்லவ: குழந்தாய் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வாயாக.

ராஜ: இப்படி உட்காருங்கள்.

பல்லவ: சக்கரவர்த்தி, தங்கள் உடல் நிலை இப்போது எப்படியிருக்கிறது? நாடு எங்கும் மக்கள் அதே கவலையாக இருக்கிறார்கள்.

ராஜ: நிலைமையிலே எவ்விதமான வேறுபாடும் இல்லை.

பல்லவ: கூடியவரையில் தங்களுக்குப் பூர்ண சௌக்யம் அருள்புரிய எம்பெருமானை வேண்டுகிறேன்.

ராஜ: மந்திரியாரே, தங்கள் குமார்த்தி நேற்றிரவு அந்தக் கொல்லிமலைத் துறவியைக் கனவில் கண்டாளாம்.

பல்லவ: ஆம். கேள்விப்பட்டேன். என்னிடமும் தெரிவித்தார்கள்.

தேவி: அப்பா...

பல்லவ: நமக்குக் கிட்டாத ஒரு விஷயத்தைப் பற்றிக் கவலைப்பட்டுப் பயன் என்ன? மேலே நடக்கவேண்டியதை யன்றோ கவனிக்கவேண்டும்?

ராஜ: மந்திரியாரே, நம் உடல் நிலை முன்போலப் பூர்ண குணம் அடையும் என்ற நம்பிக்கை சிறிதும் இல்லை......அதனால்... நமக்குப் பிறகு சாம்ராஜ்யம் தலைவன் இல்லாமல் போகக் கூடாது என்ற ஒரே கவலைதான் நம்மை வாட்டுகிறது.

பல்லவ: சக்ரவர்த்தி, அதைப் பற்றிக் கவலைப்பட இப்போது என்ன அவசரம்?

ராஜ: பல்லவராயரே, ஏன் இல்லை? ஒருகால் நமக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால்......?

தேவி: போதுமே, உங்கள் பேச்சு

ராஜ: தேவி, ஏன் அப்படிக் கூறினாய்? நெருப்பு என்றால் வாய் வெந்து விடாது. மனிதனாகப் பிறந்தவன் என்றைக்கு இருந்தாலும் ஒருநாள் இறக்க வேண்டியவனே......தவிர, நாமும் சென்ற ஒரு வருஷகாலமாகப் படுத்த படுக்கையாகக் கிடக்கிறோம்.

பல்லவ: சக்ரவர்த்தி......

ராஜ: பல்லவராயரே, சற்றுப் பொறுங்கள். கடந்த ஓர் ஆண்டாகவே ராஜ்ய காரியங்கள் சரிவர நடைபெறவில்லை. இனிமேல் உடம்பு குணம் ஆகி முன்போல் அவற்றை நாம் கவனிக்கப் போகிறோம் என்ற நம்பிக்கையும் எனக்கு இல்லை.....அதனால் இப்போதே யாராவது ஒருவரை இளவரசராக நியமித்துத் தக்க பயிற்சியளித்துவர விரும்புகிறோம்.

பல்: ஆனால்......யாரைப் பொறுக்கி நியமிப்பது என்பதுபற்றித்தான்......

ரா: பல்லவராயரே, ஸாம்ராஜ்யத்தின் நலனையே நாம் முதலில் கருதவேண்டும்... அதற்காகத்தான் நாம் உம்மை வரவழைத்தோம்.

தேவி: அப்பா, பட்டத்துக்கு உரிய குழந்தைகள் இருவர் இருக்கிறார்கள்.

ரா: ஆம், பெண் குழந்தைகள். ஆனுல், சோழ வமிசத்தின் சரித்திரத்திலே, பெண் குழந்தை உரிமையால் சிங்காதனம் ஏறியது இதுவரையில் கிடையாது.

பல்: தவிர, திரு அபிஷேகத்திற்கு உரியவர்களும் அல்லர். மிக்க இளம் வயது உடையவர்கள்.

தேவி: (ஆத்திரத்துடன்) அப்பா நீங்கள் கூடவா இப்படிச் சொல்கிறீர்கள்? குழந்தையின் காரியகர்த்தாவாக இருந்து வேறெருவர்...

பல்: குழந்தாய், ஸாம்ராஜ்யத்தின் தற்போதைய நிலேமையையும் தேவையையும் அறிந்து கொள்ளாமல் நீ சொல்லுகிருய்...சக்கரவர்த்தி.

ரா: ஆம். ஆம் நாம் நேரில் கவனிக்க முடியாமற் போனதால் சிற்றரசர்களும் பிறரும் தலேயெடுத்துக் கொஞ்சங் கொஞ்சமாகத் தங்கள் ஆதிக்யத்தை நிலேபெறச் செய்ய முயல்கிருர்கள். இதுகாறும் அடங்கிக் கிடந்த பாண்டியன் இப்பொழுது பெரும் படை திரட்டித் தனியரசு செலுத்த எண்ணுகிருன். அவனுக்குத் துணையாக ஈழத்தரையனும் தயாராக இருக்கிருர்கள்.

பல்: சக்ரவர்த்தி, உண்மைதான். ஆனுல்...ராஜ்ய பாரத்தை இப்போதே ஏற்று நடத்தும் வயது வந்தவராகவும், நாட்டு மக்கள் அனேவரும் ஏகோபித்து அங்கீகரிக்கக் கூடியவராகவும் உள்ள சோழர் குலக் குழந்தையைத் தேடிப்பார்த்து...

ரா: மந்திரியாரே, இப்படிப் பட்ட சமயங்களில் முன்னுளிலே காரியம் நடந்தபடியை அறியமாட்டீர்களா?

பல்: அவற்றையும் தீரவிசாரித்தே வைத்திருக்கிறேன். நேர்முறையிலோ இளேய பரம்பரையிலோ உரிய மக்கள் இல்லாவிட்டால் தௌஹித்திர முறையிலாவது பார்த்து எடுத்தே முடி சூட்டுவார்கள். சக்கரவர்த்திகளின் முப்பாட்டனுரான பெரிய தேவர் உபயகுலோத்துங்க ராஜேந்திர சோழதேவர் சாளுக்கிய வம்சத்திற் பிறந்தும், இதே வழியால் சோழ சிங்காதனத்தை அடைந்த செய்தியை நான் எடுத்துக்கூற வேண்டியதில்லே.

ரா: அதைத்தான் நாமும் கூற வந்தது. நம்மைப் போலவே, உடையார் விக்கிரம சோழ தேவருக்குப் பேரனும் நெறி உடைப் பெருமாள் திருமகனும் ஆன எதிரிலிப் பெருமாளே இந்தப் பதவிக்கு ஏற்ற தகுதி வாய்ந்தவர் என்று நாம் எண்ணுகிருேம்.

தேவி: நம் சோழ சைன்யத்தில் தண்டநாயகப் பதவி வகித்து வருகிருரே,

ரா: ஆம், அவரேதான்.

பல்: எவ்விதத்திலும் சிறந்தவரையே சக்கரவர்த்திகள் குறிப்பிட்டுள்ளார்.

தேவி: நம் படையில் சாதாரணமான ஒரு கீழ்ப் பதவியில் இருக்கும் ஒருவரைத் தீடீரென்று சக்கரவர்த்தியாக்குவது விரோதத்தையும் மனக்கசப்பையும் உண்டாக்காதா?

ரா: அவர் அவர் ஆசைகளேயும் மனேபாவத்தையும் நாம் கவ

னிக்க முடியுமா? யாரைத் தேர்ந்து எடுத்தாலும் பிறர் அப்படித்தான் இருப்பர். பல்லவராயரே, எதிரிப் பெருமாளை உடனே தலை நகரத்துக்கு அழைத்து வர ஏற்பாடு செய்யுங்கள்.

பல்: சித்தம் சக்கரவர்த்தி.

தேவி: அப்பா, நான் உங்களையன்றோ பெரிதாக நம்பியிருந்தேன்.

பல்: குழந்தாய், எதற்கும் கவலை கொள்ளாதே. ஈசன் உனக்கு ஒரு குறைவையும் வைக்கமாட்டான்...சக்கரவர்த்தி தொட்டதைத் துலங்கவைக்கும் சக்தி பெற்ற எதிரிப் பெருமாள், தாங்கள் எதிர் பார்ப்பதைவிடச் சிறப்பாகவே ராஜ்யபாரம் வகிப்பார் என்ற நம்பிக்கை எனக்குத் திடமாக இருக்கிறது.

[சோழமன்னன் அரண்மனையிலே அந்தப்புரம். சக்கரவர்த்தி ராஜராஜ தேவர் படுத்துக் கிடக்கிறார். பக்கத்தில் தேவி உலகுடை முக்கோக்கிழான் அழகன் பல்லவராயர் எதிரிலிப்பெருமாள் முதலியோர்]

எதிரிபெருமாள்: சக்கரவர்த்திகள் நீடூழிவாழ்க.

ரா: குழந்தாய், கடவுள் உனக்கு நீண்ட ஆயுளை அளிப்பாராக... பல்லவராயரே......

பல்: சித்தம் அரசே; எல்லா ஏற்பாடுகளும் ஒழுங்காக நடை பெற்று வருகின்றன.

ரா: பல்லவராயரே, நாளைத்தினம் நடக்கும் திரு அபிஷேகத்துக்கு முன்னதாக உங்களிடம் ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன்.

பல்: சித்தம்...

ரா: நாளை அபிஷேகத்திலே தாங்கள் முக்கியஸ்தராக இருந்து அதை நடத்தி வைக்க வேண்டும்.

பல்: சக்கரவர்த்திகள் அதைப் பற்றித் தனியாக எடுத்துக்கூற வேண்டியதன் அவசியம்...... நான் வகித்து வரும் பதவியின் உரிமையாலேயே நான் உடன் இருந்து அபிஷேகத்தை நடத்தி வைக்கக் கடமை பூண்டவன்.

எதிரிலி: பத்துகோயிற் கொத்தும், நியாயம் உள்ளிட்ட துறைகளுக்கு முதலிகளாய் முன் ஏவல் உள்ளிட்டு எல்லா வரிசைகளும் ஏற்றங்களும் பெற்று நிற்கும் பல்லவராயர் அவசியம் உடன் இருந்து நிறை வேற்றுவார்.

ரா: பல்லவராயரே, அதுவன்று நாம் குறிப்பது. அபிஷேகம் ஆனபிறகு சோழசாம்ராஜ்யத்தின் பெருமைக்கு அறிகுறியாக விளங்கும் மகுடத்தை எடுத்து அவருக்கு நீரே சூட்டவேண்டும் என்று விரும்புகிறோம்.

பல்: (திடுக்கிட்டு) என்ன?

ரா: ஆம், அதைத்தான் நாம் முன்னதாகவே உம்மிடம் தெரிவிக்க விரும்பினோம்.

பல்: சக்கரவர்த்திகள் மன்னிக்க வேண்டும். வழக்கம்......

ரா: பல்லவராயரே, வழக்கத்தை நாம் அறிவோம். மண்டை கவிப்பதைச் சக்கரவர்த்திகளே நேரில் செய்யவேண்டும். ஆயினும் பல காரணங்களுக்காக நாம் அதைச் செய்ய விரும்பவில்லை.

தேவி: அப்பா, சக்கரவர்த்தி கூறுவதன் உட்கருத்து உங்களுக்கு விளங்கவில்லையா? நாளைக்கு

என் வயிற்றுக் குழந்தைகள் உரிமை கொண்டாடி ஏதாவது வீண் வாதம் கிளப்பாமல் இருக்கும்படி உங்களைக் கட்டுப் படுத்தவே!

எதிரிலி: சக்கரவர்த்தினி, அடி யேன் தங்களை என்னைப் பெற்ற தாயார் ஸ்தானத்தில் வைத்து வணங்கி வருகிறேன். அத்த கைய நிலைமை ஒருநாளும் ஏற் படாது.

ரா: இளவரசே, வருத்தப்பட வேண்டாம். முக்கோக்கிழான் அடிகள் வேடிக்கையாகவே இதைச் சொன்னார்.

தேவி: (சிரித்துக்கொண்டு) குழந் தாய், இதற்குள்ளாகவே கோபம் வருகிறதே. நிர்வாகத் தில் பலவிதமான நிர்ப்பந்தங்கள் ஏற்படுமே அந்தக் காலங்களில் எல்லாம் நீ மன அமைதியைக் கொஞ்சமும் இழக்காமல் நிதா னமாக இருந்தால்தான் காரியங் களைச்சரிவர நடத்த முடியும்.

பல்: சக்கரவர்த்தினி, அது உண் மையே. ஆயினும் இது அவ ரைப் பொறுத்த விஷயமாதலால் குறித்திருக்க வேண்டியதில்லை.

எதிரிலி, அடியேன் எதையும் மனத்திற் கொள்ளவில்லை. ஸாம் ராஜ்யத்தின் நன்மையைக் கோரி எத்தகைய கஷ்டங்களை யும் வகிக்கச் சித்தமாக இருக்கி றேன்.

ரா: பல்லவராயரே, முன்னம் ஒரு சமயம் கொல்லிமலைத் துறவி யார் கூறியதையே நாம் உங்க ளுக்கு ஞாபகமூட்டுகிறோம்.

பல்: சக்கரவர்த்திகள் அவ்விதம் சொல்லலாகாது.

ரா: இளவரசே, உண்மையை மறைப்பதில் பயன் இல்லை. உங் களுக்கு மகுடஞ்சூட்டுவதற்கு நான் அருகதையற்றவன்...பல் லவராயரே, தாங்கள் இதுவரை யிலும் எடுத்த காரியங்களுள் எது நிறைவேறாது போயிருக் கிறது.

பல்: சக்கரவர்த்திகள் துவக்கி வைக்காத காரியம் எதையும் நான் இதுகாறும் செய்ததில் லையே?

ரா: ஆம், எல்லாவற்றையும் நாம் அங்கீகரித்து அனுமதித்த பிறகே நீர் செய்து முடித்தீர் கள். ஆனால் அவற்றுள் ஒன்றை யும் நாம் நேரில் இருந்து நடத்தி வைக்கவில்லை. நீர் இவ்விடம் இல்லாத சமயம் நாமே தனியா கச் சாம்புவராயரை யடிக்க முயன்றது வீண் பிரயத்தன மாகவே முடிந்ததன்றோ?

பல்: அதற்குக் காரணம் சாம்புவ ராயருக்குத் துணையாக வந்த வடநாட்டு அரசனின் பலமே யாகும்.

ரா: எதுவாயினும் இந்த விஷயத் தில் அந்தப் பரீக்ஷையைச் செய்ய நாம் விரும்பவில்லை. நீங்களே உடன் இருந்து செய்து முடிக்கவேண்டியது இந்தத் திரு அபிஷேகம்.

தேவி: அப்பா சக்கரவர்த்திகள் கூறுவது உண்மைதான். முக் கோக்கிழானடிகளைப் பெற்ற தங்களுக்கு பிறருக்குக் கிடைக் காத பாக்கியம் கிட்டுவதைக் குறித்து நான் குதூகலம் அடை கிறேன்.

பல்: தாங்கள் இருவரும் இவ்வி தம் சொல்லும்போது நான் எவ் விதம் மறுக்க முடியும்?

கலைக்கடிதம்:

நல்லவேளை

எஸ். வி. எஸ்.

அருமை நண்பனுக்கு

சமீப காலத்தில் நம் நாட்டில் ஒரு நிலைமையைப் பார்த்து வருகிறோம். அதாவது ஒரு காரியமும் செய்ய முடிவதில்லை. அவ்வளவு உணர்ச்சி செயலும் அழிந்து கிடக்கிறோம்.

நிலைமை என்றேனே அது வேறொன்றுமில்லை. இப்பொழுது எங்கும் நீக்கமற நிறைந்து கிடக்கும் பஞ்சத்தைத்தான் சொல்லுகிறேன். இந்தியாவின் களஞ்சியம் என்று புகழப் பட்ட வங்காளத்தில் லக்ஷக்கணக்கான மக்கள் பட்டினி கிடந்து மடிகிறார்கள் என்று கேட்டு வருகிறோம்; பார்த்தும் வருகிறோம்.

வங்காளம் மட்டுமா இந்தியாவின் பலவேறு பாகங்களில் இந்தப் பஞ்சம் கோர நடனமாடுகிறதைப் பார்க்கிறோம்.

அரிசி என்றால் மிதமிஞ்சி இருந்த நாட்டில், தலைக்கு இவ்வளவுதான் என்று 'ரேஷன்' செய்து கொடுக்கப்படுகிறது. நீர் வளமும் நன்செயும் மிகுதியாகவுள்ள பிரதேசங்களிலேயே அரிசிக்கு மக்கள் திண்டாடுகிறார்கள். ஏழைகளுக்கு என்று திறக்கப்பட்ட கடைகளில், நாள் தவறாமல் லக்ஷக்கணக்கான மக்கள் தெருவில் காத்துக் கிடந்து, சண்டையிட்டு 'இரண்டு வேளைக்குக் கிடைத்து விட்டதே' என்ற ஆறுதலோடு ஜனங்கள் செல்வதைப் பார்க்கிறோம். இவ்வளவு பஞ்சம் எந்த நாட்டில்? சோறு படைத்த பாரத நாட்டில் இன்று இக்கதிதான்!

ஆனால் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் ஒரு பெரியவர் இருந்தார். அவர் மனசு ரொம்ப இளகிய மனசு. ரொம்ப உணர்ச்சி மிக்கவர், பேரறிஞர்.

அவர் ஒரு நாள் பிச்சை எடுத்துக்கொண்டு ஒருவன் வருவதைக் கண்டார். அவர் அதைப் பார்க்கக்கூடவில்லை. "ஒரு சாண் வயிற்றுக்காக—மனிதன் உலகில் சும்மா வாழ்வதற்காக யாசிக்கவும் வேண்டுமா? உலகங்களை யெல்லாம் சிருஷ்டித்த கடவுள் இப்படியும் விதித்து விட்டானா? மனிதனையும் படைத்துவிட்டு யாசிக்கவும் விட்டு விட்டானா? அவனை என்ன செய்தால் தேவலை?" என்று ஒரே கோபாவேசத்தில் மூழ்கி விட்டார். அந்தக் கோபத்திலிருந்து பிறந்த வார்த்தைகள் என்ன தெரியுமா?

இரந்தும் உயிர்வாழ்தல்
வேண்டில், பரந்து
கெடுக உலகியற்றி யான்!

சாபம் எப்படி; 'கெடுக' அழியட்டும் என்கிறார். எப்படி? அவனைப் போலவே யாசித்து என்கிறார். உலகங்களையெல்லாம் சிருஷ்டித்த கடவுளுக்குத்தான் இந்தச் சாபம்.

உண்மையில் கடவுளுக்குக் கொடுத்த சாபமா? மக்களில் ஒருவனை பிச்சையெடுக்க விட்ட மனித சமுதாயத்தின்மேல் எழுந்த கோபமல்லவா; சொல்ல மாட்டாமல், எல்லாம்வல்ல இறைவனைத் தாக்கிற்று.

ஆனால் நல்ல வேளை. நமக்கு ஒரு ஆறுதல் அளிக்கும் விஷயம். அவர் இன்று நம்மிடையில் இல்லை! இருந்தால் அவர் உள்ளம் எவ்வளவு கொதிக்குமோ? இன்னும் எத்தனை கடவுள்களும் தெய்வங்களும் வேண்டுமோ?

இந்த மகானுபவர்தான் திருவள்ளுவர் என்று உனக்குத் தெரிந்திருக்கும். சரி.

உனதன்புள்ள,
எஸ். வி. எஸ்.

ஞானோதயம்

"பாசரசு"

செஞ்சிக் கோட்டையும் அதைச் சுற்றியுள்ள பாழடைந்த பண்டைக்காலக் கட்டிடங்களையும் பார்த்து வியந்து அப்படியே மெய் மறந்து உட்கார்ந்தேன். என் கற்பனா சக்தியைப் பிரயோகித்து ராஜா தேசிங்கை என் கண் முன் வந்து தோற்றமளிக்கச்செய்தேன். அவனுடைய குழந்தைப் பருவம், கலியாணம், நீலவேணிக் குதிரை மீது வாயுவேகம் மனோவேகமாகப் பறந்து சென்றது எல்லாம் சினிமா காட்சிபோல் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. நேரம் போவதுகூடத் தெரியாமல் சிந்தனையில் ஆழ்ந்து விட்டேன். பூரண சந்திரன் செஞ்சி பூராவும் தன் குளிர்ந்த வெள்ளிக் கிரணங்களை வீசி ஒரு புது சோபையைக் கொடுத்தான்.

செஞ்சியைப் பார்க்கப் பார்க்க என் உள்ளத்தில் உணர்ச்சி அலைகள் உயர எழுந்து மோதின. செஞ்சியின் அழகுத் தெய்வத்தின் மடியில் சயனித்திருந்த சமயம் ஒரு வேட்டுச் சத்தத்தைக் கேட்டு திடுக்கிட்டேன். தூரத்தில் காகங்கள் ஒரே கும்பலாக மரங்களிலிருந்து கிளம்பி 'கா கா' வென்று கரைந்து பீதியுற்று நிலவொளியில் தோய்ந்த நிர்மலமான ஆகாயத்தில் நாலா பக்கமும் பறந்தன. காகங்களின் கூச்சல் பயத்தையும் பிரதிபலிக்கச் செய்தன. மலையடி வாரத்தில் "ஐயோ சுட்டு விட்டானே! உயிர் துடிக்கிறதே!" என்று யாரோ கூக்குரலிட்டது காற்றில் லேசாக மிதந்து வந்து கேட்டது. அந்தச் சத்தத்தை அந்த பாழடைந்த கட்டிடங்கள் எதிரொலித்தன. அந்தக் கூச்சலின் தாத்பரியம் முதலில் எனக்கு சரியாக விளங்கவில்லை. வெகு நேரமாக அவ்விடத்திலிருந்து விட்டேன் என்பதையறிந்து உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து நடக்க வாரம்பித்தேன். மறுபடியும் அதே கூச்சல். யாரையோ சுட்டு வீழ்த்தி விட்டார்களோ வென்று பயந்து கூக்குரல் வந்த திசையை நோக்கி ஓடினேன். மலையடிவாரத்திற்கு வந்ததும், "அவன்தான் அவனைப் பிடி" என்றகுரல் என்னை நோக்கி வந்தது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் இரண்டுபேர் என்னைப் பிடித்துக் கொண்டார்கள்.

"எங்கே அந்தத் துப்பாக்கி?" என்று கேட்டார் அவர்களில் ஒருவர்.

"துப்பாக்கியா? எது?" என்று நான் மிரள மிரள விழித்தேன்.

"என்னய்யா," பேந்தப் பேந்த முழிக்கிறீர்? துப்பாக்கியைக் கொடுத்துவிட்டால் உம்மை விட்டு விடுகிறோம். இப்பொழுது இந்தப் பட்சியை சுட்டு வீழ்த்தினீரே அந்தத் துப்பாக்கி எங்கே?"

ஒரு கையால் என்னைப் பிடித்திருக்க மற்றொரு கையில் பட்சி ஒன்றை அணைத்து வைத்துக் கொண்டிருந்தார் அந்த பைராகி போன்ற மனிதர்.

"என்னிடம் துப்பாக்கி கிடையாதே! எனக்குச் சுடக்கூடத்

தெரியாதே" என்றேன் நாக் குழற.

அவர்களிருவரும் மஞ்சள் காவி துணிகளை அணிந்திருந்தனர். அவர்கள் புத்த சன்னியாசிகள் என்பது பிறகு தெரிய வந்தது.

"இல்லை, உன்னை நான் நம்ப மாட்டேன். துப்பாக்கியை எங்கே ஒளித்து வைத்தாய்?" என்று என்னை மறுபடியும் அந்த சன்யாசி கேட்டபொழுது திரும்பவும் ஒரு வேட்டுச் சத்தம் கொஞ்ச தூரத்தில் கேட்டது. சன்யாசிகள் இருவரும் திடுக்கிட்டவர்களாய் என்னை விட்டு விட்டுத் துப்பாக்கிச் சத்தம் வந்த திக்கை நோக்கி ஓடினார்கள். இவர்களுடைய செய்கை எனக்கு விளங்கவில்லை. விஷயத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்ற அவா என் மனதில் எழுவே நானும் அவர்கள் பின் ஓடினேன். இவர்கள் இருவரும் எனக்கு முன் கொஞ்ச தூரத்தில் ஓடினார்கள். இரண்டு நிமிஷங்கள் ஓடியிருப்போம். திரும்பவும் துப்பாக்கி சத்தம் கேட்டது. புத்த சன்யாசிகளில் ஒருவர் "ஐயோ" என்று வீறிட்டுக் கீழே விழுந்தார். அவர் கையில் காயத்துடனிருந்த பட்சி கத்திற்று. மற்றொரு சன்னியாசி கீழே உட்கார்ந்து விழுந்த சன்னியாசியின் தலையைத் தூக்கித் தன் மடியின்மீது வைத்துக் கொண்டார். நான் அவர்களை நெருங்கினேன். கீழே விழுந்த சன்னியாசியின் மார்பிலிருந்து இரத்தம் பீறிட்டு வந்து கொண்டிருந்தது.

சன்யாசி சிரமத்துடன் வாயைத் திறந்து பேசவாரம்பித்தார். "மனிதனுக்கு நாளுக்கு நாள் மிருகத் தன்மை அதிகரிக்கிறது. அவன் நெஞ்சில் ஈரமில்லை. அவன் நெஞ்சு தண்ணீரற்ற வரண்ட பாலை வனமாக விருக்கிறது. இயற்கை யழகை நாசம் செய்கிறவன் மனிதன். ஒரு குற்றமும் அறியாத மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் துன்பத்தைத் தருகிறான். அந்த மனிதனே இன்று என்னை சுட்டு வீழ்த்தினான். நான் இனி பிழைக்க மாட்டேன். மௌனி, நீ தான் அந்தப் பட்சியைக் காப்பாற்றவேண்டும்" என்று சொன்னார். அவர் வாயிலிருந்து இரத்தம் வழிந்தது. குண்டு அவர் இருதயத்தில் பாய்ந்திருந்தது. அவருடைய கண்கள் நிலைத்து விட்டன. அவர் ஆத்மா அவரை விட்டுக் காற்றோடு காற்றாய் பறந்துபோய் விட்டது. மௌனி தேம்பித் தேம்பி அழுதார். அக்காட்சியைப் பார்த்து துக்கம் மேலிட்டதால் என் கண்களிலும் கண்ணீர் வழிந்தோடியது. மௌனி பத்து நிமிஷங்கள் அழுதார். நான் மௌனமாக அவர் பக்கத்தில் நின்று கொண்டிருந்தேன். பிறகு அவர் என்னைப்பார்த்து விட்டு, "ஐயா, இவரை எடுத்துச் செல்ல எனக்குக் கொஞ்சம் உதவி செய்வீர்களா?" என்று கேட்டார். அவரைப்பார்ப்பதற்கு பரிதாபமாக விருந்தது.

சன்னியாசியின் உடலை இருவரும் தூக்கிச் சென்றோம். சன்னியாசியின் குடிசையிலேயே அவர் உடலை வைத்து விட்டு மறு நாள் காலையில் அந்த குடிசைக்கு எதிரே இருந்த ஒரு சமாதியின் பக்கத்தில் புதைத்து அவருக்கும் ஒரு சமாதி கட்டினோம்.

அன்று செஞ்சியை விட்டுப் புறப்பட எனக்கு மனம் வரவில்லை. இந்த சன்னியாசியின் வரலாற்றைக் கேட்டு விட்டுப்

போக வேண்டுமென்றிருந்தது. அன்றிரவு நிலவொளியில் சமாதியினருகே நாங்கள் இருவரும் உட்கார்ந்திருந்தோம். மௌனி வெகுநேரம் மௌனமாக ஏதோ யோசனையிலாழ்ந்திருந்தார்.

"ஆமாம் அந்த சமாதி யாருடையது?" என்று சன்னியாசியின் சமாதிக்குப் பக்கத்திலிருந்த சமாதியைச் சுட்டிக் காண்பித்துக் கேட்டேன்.

மௌனி ஒரு பெருமூச்சு விட்டார். "அது ஒரு பெரிய கதை ......நான் ஒரு பாவி. ஒரு நாள் இரவு இதே நிலவுதான். இரவு நேரங்களில் பறந்து செல்லும் நீர்ப் பறவைகளைச் சுட்டுக்கொண்டே இவ்விடம் வந்தேன். அப்பொழுது இந்த சன்னியாசி — அவர் பெயர் அன்பு — கூச்சல் போட்டு என்னை துரத்தி வந்து பிடித்துக் கொண்டார். 'என்னிடம் அந்தத் துப்பாக்கியைக் கொடு' என்றார். எனக்குக் கோபம் வந்தது. 'கொடுக்க முடியாது' என்றேன்.

'இல்லை, நீ பறவைகளைச் சுடக் கூடாது. அது பாபம். அது மனிதத் தன்மையல்ல. உன்னை இனி சுட விடமாட்டேன்' என்றார்.

'நல்ல பாபத்தை கண்டீர் ஐயா நீர். மனிதன் புசிப்பதற்காகவே இவைகள் படைக்கப்பட்டன. ஐயா, அது சரி நீர் யார் என்னைத்

தடுப்பதற்கு?' என்று கேட்டு விட்டு நில வொளியில் பறந்து சென்ற நீர்ப் பறவைகளின் கூட்டத்தின் மீது குறி வைத்தேன். அன்பு என் துப்பாக்கியைக் கையிலிருந்து பிடுங்கினர். அவருடைய கைகள் இரும்பை ஒத்திருந்தது. அப்போது இடைப்பையன் குழலிலிருந்து வேணுகானமும் வந்து கொண்டிருந்தது.

'இல்லை, இல்லை, பறவைகளைச் சுட விடமாட்டேன். வேண்டுமானல் என்னை முதலில் சுட்டு வீழ்த்தி விட்டு பிறகு உன்னிஷ்டம்போல் செய்து கொள்' என்ருர். அவருடைய குரலில் கம்பீரம் தொனித்தது.

அவரைப் பயமுறுத்தி துரத்தி விடலாம் என்று எண்ணித் துப்பாக்கியை அவருக்கு நேராகப் பிடித்து 'இவ்விடத்தை விட்டு ஓடிப் போகா விடில் உன்னைச் சுட்டு வீழ்த்துவேன்' என்றேன்.

'சுடு' என்று சொல்லிவிட்டு கண்களை மூடிக் கொண்டார். அவர் கண்களை மூடிக்கொண்டது தான் சமயம் என்று அப்போதே பறந்து வந்த பறவைக் கூட்டத்தின்மீது குறி வைத்து சுடும் பொழுது அன்பு என் துப்பாக்கியைத் தட்டி விட்டார். குறி தவறியது. ஒரு தோட்டாவீணகப் போய் விட்டது. எனக்கு வந்த ஆத்திரத்தில் துப்பாக்கியைத் திருப்பி அவர் முதுகில் பலங்கொண்டு ஒரு அடி கொடுத்தேன். அப்பொழுதும் அவர் என் மீது கோபங் கொள்ளவில்லை. அவர் என்னை மறுபடியும் வேண்டிக் கொண்டார். என் கோபம் எல்லையைத் தாண்டிவிட்டது. துப்பாக்கியால் அவர் தலையில் ஓங்கி அடித்தேன். அன்பு, சுருண்டு கீழே விழுந்தார். நான் பயந்து விட்டேன். குனிந்து பார்த்தேன். அவர் தலையில் இரத்தம் பீறிட்டுக் கொண்டு வந்தது. அவர் மீது எனக்கு இரக்கம் உண்டாயிற்று...'' என்று சொல்லி மௌனி கண்களில் கண்ணீர்விட ஆரம்பித்து விட்டார்.

"பிறகு என்ன நடந்தது?'' என்று ஆவலோடு அன்பின் சமாதியைப் பார்த்துக் கொண்டே கேட்டேன்.

'அவருக்குக் கட்டுக்கட்டினேன். அருகேயிருந்த சுனையிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து அவர் முகத்தில் தெளித்தேன். கொஞ்ச நேரங் கழித்து அவருக்குப் பிரக்ஞை வந்தது. அன்பு கண்ணைத் திறந்து மிரள மிரள விழித்தார். அவருடைய கண்களில் சாந்தம் நிலவியதே தவிர ருத்ரகாளியின் கண்களைப்போல் கோபத்தினல் சிவந்திருக்கவில்லை. என் மனம் பதறியது. என் கொடூரமான செய்கையினல் வெட்க மடைந்தேன். 'ஐயா, என்னை மன்னியுங்கள்... எனக்கு என்ன கட்டளை இடுகிறீர்கள்...நான் செய்ய சித்தமாயிருக்கிறேன்' என்றேன். என்னல் அப்படித்தான் சொல்ல முடிந்தது. அவரை எதிர்த்து என்னல் பேச முடியவில்லை. அந்தச் சக்தி என்னை விட்டு ஓடிவிட்டது. அன்பினல் அவர் என்னை வென்ருர். இரண்டு நிமிஷங்கள் கழிந்தன. அவர் எழுந்திருக்க முயன்ருர். நான் அவரைப் பிடித்து தூக்கி விட்டேன். 'அந்த துப்பாக்கியை எடுத்துக் கொள்' என்ருர். அவர் சொன்னபடியே எடுத்துக்கொண்டேன். 'அதை இரண்டாக ஒடி' என்ருர். ஒரு இயந்திரம்போல் அவருடைய ஆக்ஞைக்குக் கீழ்ப்படிந்தேன். துப்பாக்கியை இரண்டாக ஒடித்தேன். 'அதையும் தோட்டாக்களையும் அந்த சுனையில்

எறிந்து விடு' என்றார். அவைகளைச் சுனையில் எறிந்தேன்...... அன்றைய தினத்திலிருந்து அன்புடன்தான் இருந்து வந்தேன்.

நேற்று யாரோ ஒருவன் பறவைகளைச் சுட்டுக்கொண்டே இவ்வழியாகப் போனான். ஒரு அடிபட்ட பறவை இவர் மடியில் வந்து விழுந்தது. நாங்கள் அவனைத் துரத்திச் சென்றோம். அப்பொழுதுதான் அவன் அன்பைச் சுட்டு விட்டான்......' என்று சொல்லி முடித்து ஒரு பெருமூச்சு விட்டார். எதையோ யோசனை செய்து கொண்டிருந்தவர் திடீரென்று "ஐயோ நேற்று குற்றுயிராகக் கொண்டு வந்த பறவையை மறந்துபோய் விட்டேனே!" என்று சொல்லி குடிசைக்குள் ஓடினார். மௌனி கொஞ்சநேரத்திற்கெல்லாம் கண்களில் தேங்கிய கண்ணீருடன் இறந்துபோன பறவையுடன் வெளியே வந்தார். ஒரு அற்பப் பறவையின் மீது அவ்வளவு வாஞ்சை கொண்ட அம்மனிதனின் தன்மையை வியந்து மெய் மறந்தேன். அன்றும் செஞ்சியிலேயே நாளைக் கழித்தேன். மறுநாள் காலை அந்தப் பறவைக்கும் ஒரு சாமாதி கட்டி முடித்தோம். அன்புக்காகவும் அந்தப் பறவைக்காகவும் இரண்டு துளிக் கண்ணீர் விட்டு விட்டு விடை பெற்றுச் சென்றேன்.

போகி

நல்ல கீதத் தொழிலுணர் பாணர்
நடனம் வல்ல நகைமுக மாதர்
அல்லல் போக இவருடன் கூடி
ஆடியாடிக் களித்தின்பங் கொள்வோம்;
சொல்ல நாவு கனியுத டாநற்
சுதியி லொத்துத் துணையொடும் பாடி
புல்லும் மார்பினே டாடிக் குதிக்கும்
போகம் போலொரு போகமிங் குண்டோ?

ஞானி

மாதரோடு மயங்கிக் களித்தும்
மதுர நல்லிசை பாடிக் குதித்தும்
காதல் செய்தும் பெறும் பல இன்பம்,
கள்ளில் இன்பம், கலைகளின் இன்பம்,
பூதலத்தினை ஆள்வதில் இன்பம்,
—பெய்மை யல்ல—இவ்வின்பங்களெல்லாம்
யாதும் சக்தி இயல்பெனக் கண்டோம்
இனைய துய்ப்பம் இதய மகிழ்ந்தே.

—பாரதி

புதிர்

"சிவஞானம்"

போன ஜன்மத்தில் நான் உலகத்தையே 'புத்தம் சரணம் கச்சாமி' என்கிற வார்த்தைகளால் எதிரொலிக்கச் செய்திருக்க வேண்டும். அதாவது நான் ஒரு புத்த 'பிக்ஷு'வாக இருந்திருக்க வேண்டும். இல்லாவிடில் ஏனோ எனக்கு இந்த இல்லற இன்பத்தில் இவ்வளவு வறட்டு மனம். அதுவும் இந்தக் காளை துள்ளும் பருவத்தில்!

அவளை, என் மனைவியை, ஒரு கலாரசிகன் கண்டால், அதுவும் அவள் பவள உதட்டிலே புன்னகை அரும்பும் பொழுது பார்த்தால் நிச்சயம் அந்த அழகை மனத்திலே கொண்டு ஒரு காவியமே இயற்றி விடுவான். 'உதடுகளிலே நான் கண்ட உஷையின் நடன நாட்டியம்' என்று அதற்கு பெயரும் இட்டிடுவான்.

அந்த அழகிய மனைவியோடு ஏனோ இந்த இல்லற சுகத்தில் இவ்வளவு வறட்டு மனப்பான்மை? அதுதான் இன்னும் எனக்குப் புரியவில்லை. அவளுடைய அழகை நான் ரசிக்கின்றேன். அவள் உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்துக் கிளம்பும் அன்புத்தாரையைப் பருகுகின்றேன். இதெல்லாம் கணவன் மனைவி என்கிற முறையில் செய்யவில்லை; செய்யக் கூடாது என்பதில்லை. செய்ய முடியவில்லை. அதுதான், அந்த 'செய்ய முடியவில்லை' என்பதுதான் ஆச்சர்யமானது. புதிர்.

அவள் அழகு எனக்கு லாகிரியை ஊட்ட மறுத்து விட்டது. அவள் நடந்துவரும் மெட்டி ஓசையோ அல்லது கரங்களில் சுருதி கூட்டும் அந்த வளையல்களின் ஒலியோ என்மன வீணையில் சிருங்கார இசையை தட்டி எழுப்ப சக்தியற்றிருந்தது.

என் மனப் போக்கு எனக்கே புரியவில்லையே. அன்று அவள் என்னைத் தழுவி முத்தமிட்ட பொழுது என் முகத்தில் தோன்றிய அந்த அசூயைச் சித்திரம்! வெள்ளிக்கிழமை யிரவு, நிலவு தோய்ந்த அந்த இரவிலே, மாடி ஜன்னலருகே அவள் என்னை அணைந்து நின்றிருந்த பொழுது என் உடல் எப்படிக் கூசியது. படுக்கையிலே அவள் கூந்தல் என் நெற்றியிலே தவழ்ந்து விளையாடும்பொழுது அவள் எவ்வளவு இன்பமாயிருந்தாள். ஆனால் என் மனம் அது என்னமோ செய்யத்தகாத செய்கையை செய்துவிட்டது போலல்லவோ வெம்பிக் கொண்டிருந்தது.

இன்னும் நிச்சயமாய் சொல்லுவேன். அவள் மீது பூர்ண அன்பு இருக்கின்றது. ஆனால் அது கணவனின் காதலாக மட்டும் இல்லையே. அது அவளுக்கு மட்டும் தெரியாமலில்லை. இந்த அசூயை நோய்க்கு எப்பொழுதுமே விடிவு கிடையாதா?

*   *   *

"அவர் அழகுடையவர் மட்டுமல்ல. நல்லவர் கூடத்தான். ஆனால் அவர் என்னிடம் நடந்து கொள்ளும் முறையே புதுசாயிருக்கிறது. அன்புதான் காட்டுகின்றார். அந்த அன்பில் என்னால்

ரசிக்கக்கூடிய பாகத்தைக் காணோமே.

அவர் வெள்ளை மனதை எங்காவது நான் கரைபடுத்தி விட்டேனு? இல்லாவிடில் ஏன் என் ஸ்பரிசம் அவர் மேல் படும் பொழுது அப்படிக் கூசுகின்ருர்.

பொதுவாக கணவன்தான் மனைவியின் இன்பத்திற்காக காத்திருப்பது வழக்கம். ஆனுல் இவரோ...

அன்றிரவு எவ்வளவு நேரம் காத்திருந்தேன். அவர் சும்மா பேசிக்கொண்டிருந்தாரே தவிர... சீ சீ...நினைக்கவே வெட்கமாயிருக்கின்றது. இதில் என்ன வெட்கம். அவர் கணவர். நான் மனைவி. அவரிடம் தானே என் சுகத்தை நான் எதிர் பார்க்க முடியும். ஆனுல்...வேறு எந்த சுகமாயிருந்தாலும் அவரை மண்டியிட்டு நான் கெஞ்சிக் கேட்டிருக்க முடியும். பெண்மை இந்த விஷயத்தில் என்னைக் கட்டுப்படுத்தி விடுகிறதே.

அன்பு வேறு. காதல் வேறு. காதல் வெறும் அன்பாக மட்டும் இருந்துவிட்டால் அதில் என்ன ரசிப்பு இருக்கின்றது. எல்லோரிடமும் அன்பு கொள்ளலாம். ஆனுல் எல்லாரையும் காதலிக்க முடியுமா? குழம்பிய சந்தனத்திலே ஒரு துளி அத்தர் கலந்தால் தானே அந்த மணத்தின் இன்பத்தில் மனம் 'கிறுகிறு'க்கின்றது! 'கிறுகிறு'க்கும் இன்பந்தானே நான் வேண்டுவது. நான் என்ன தபசினியா சாந்தி இன்பத்தை தேடுவதற்கு?

அந்த ஒரு துளி அத்தர்...அந்த சரீர சுகமில்லாமல்.....காதல் மொட்டே மலராமல் கருகிவிடும் போலிருக்கின்றதே......இதற்கு என்றுமே விமோசனம் கிடையாதா?"

* * *

அவனும் அவளும் அம்மி மிதித்து அருந்ததி பார்த்து இன்னும் ஆறு ஏழு மாதங்கூட ஆகவில்லை. இதற்குள் இரு மனமும் ஒன்று சேர்ந்து இசைக்க மறுத்துவிட்டன. அவள் தேக சுகங்கலந்த காதலை விரும்பினுள். அவனுல் வெறும் அன்பை மட்டுந்தான் கொடுக்க முடிந்தது. இதற்குக் காரணம்?

இப்பொழுதுதான் அவன் தங்கை இறந்த மாதிரியிருக்கின்றது. அதற்குள் மூன்று வருஷங்கள் ஓடி கால வெள்ளத்தில் கலந்து விட்டன. அவனும் அவன் தங்கையும் சிறு வயதிலேயே தாயை இழந்தவர்கள். தாயன்பையும் சகோதர அன்பையும் கலந்து குழைத்து அவள் மனத்திரையிலே தீட்டி வந்தான் சகோதரன். நிர்க்கதியற்ற அவள் மீது தன் முழு அன்பையும் வர்ஷித்தான். சிறு வயதிலிருந்து படிப்பு முடியும் வரையில் இருவரும் ஒருவராகவே வாழ்ந்து வந்தனர்.

அவளுக்கு பதினேழு வயது. அழகு சொட்டும் உருவம். காலதேவனுக்கு இவர்கள் இருவரின் பாசமும் பிடிக்கவில்லை போலும். கண் காணுத, மனம் எட்டாத உலகத்திற்கு அழைத்துச் சென்று விட்டான் அவளை. அந்த இளம் வயதில்.

இது அண்ணனின் மனதைச் சாராயப் பிழிந்தது. சவுக்கடி பட்டவன்போல் துடியாகத் துடித்தான். காலந்தான் அவன் மனப் புண்ணை யாற்றியது.

தங்கையை அவனுல் சுலபமாக மறக்க முடியவில்லை. இரண்டு

முழு வருஷகாலங்கூட அவன் மனப்புண்ணை பூர்ணமாக குணப் படுத்த முடியவில்லை. தங்கை விட்டுச் சென்ற அந்தத் தழைத்த அன்புச் செடி அவன் மனத்தில் காய்ந்து கருகுவதற்குள் காதல் முளையை நட்டுவிட்டனர் பெரியோர். அப்பொழுதுதான், வாழ்க்கைப் பாதையில் அவனுடைய கரத்தைப் பிடித்து அவன் கையோடு சேர்த்து அவனோடு அவளை அனுப்பினர்கள் துணைக்காக.

இன்னும் தன் சகோதரியின் ஞாபகம் அவனை விட்டபாடில்லை. அடங்கிய புயல் திடீரென்று சீறிக் கொண்டு கிளம்பும். இந்த மனோ நிலையில் அவன் புதுக்குடித்தனத்தை ஆரம்பித்தான். மனைவியும் வீடு வந்து சேர்ந்தாள்.

அவள் அழகு அவனைக் கவராமலில்லை. ஆனல் அவன் அவள் முகத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் ஏனோ தன் சகோதரியின் நினைப்பை யடைவான். கொஞ்ச நாளில் அவள் முகத்தைப் பார்த்தே தன் சகோதரியை மறக்கவும் முயன்முன்.

விதியின் விளையாட்டே விசித்திரமானது. அவன் துரதிருஷ்டம் அவளுடைய முகம் அவன் சகோதரியின் சாயலை சிறிது கொண்டுதான் இருந்தது. ஆனல் அது மிகமிகச் சிறிது. ஒருவருடைய முகச்சாயல் மற்றொருவருக்கும் படிந்திருப்பது உலகில் சர்வ சாதாரணமாக இல்லாவிட்டாலும் எப்பொழுதோ ஒரு சமயம் நேர்ந்து விடுவது சகஜந்தான்; இதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை.

காலத்தின் புயலிலும் இடியிலும் அடிபட்டு கசக்கப் பட்ட அவன் இளம் உள்ளத்திற்கு, சகோதரியின் அன்பிலேயே மூழ்கிக்கிடந்த அவன் பச்சை மனசிற்கு, அந்த வெகு சிறிய ஒற்றுமை கூட மிகப் பெரிதாகத்தோன்றியது. அவனையுமறியாமல் அவனுடைய நடை உடை பாவனைகளில் கூட அவனுடைய தங்கையின் வாழ்க்கை சித்திரிக்கப் படுவதை காண ஆரம்பித்தான் அவன். அப்படி அவன் விசித்திரமாக எண்ணுவதின் காரணம் அவன் பேதை மனம் அந்த எண்ணத்தில் சாந்திக்கு புகலிடம் கண்டது தான்.

தன் மனைவியிடத்தே சகோதரியின் பிரதி பலிப்பைக் காணும் அவன் அதிசய மனம் எப்படி அவளிடம் காதல் கொள்ள முடியும்? இந்த இளம் தம்பதிகளின் வாழ்க்கையிலே விதி யிட்ட புதிருக்கு அதனல் தானே விடையளிக்கக் கூடும்!

* * *

ஊரெல்லாம் ஒரே அம்மை. அது அவன் குடும்பத்தையும் சும்மா விடவில்லை. அவளுக்கு அம்மை கண்டது. அவளுடைய பாரம் அவன் தலைமேல் விழுந்தது.

அம்மை ஊசி அம்மை தான். அதனல் பயமில்லை. ஆனலும் அவன் மனம் துடியாய் துடித்தது. அவள் பக்கத்திலேயே எப்பொழுதும் இருப்பான். அந்த எரியும் குத்து விளக்கும் புகையும் ஊதுவத்தியும் நிலவும் நிசப்தமும் நடு நடுவே தோன்றும். அவன் மனைவியின் முனகல்களும் அவளது அந்த எளிய அழகு நிரம்பிய முகமும் எல்லாம் சேர்ந்து அவன் மனதில் ஒரு சிந்தனைப் புரட்சியைத் தூண்டி விட்டன.

அவளுக்கு வேண்டிய பணிவிடையெல்லாம் செய்து வந்தான். இரவெல்லாம் கண் விழித்தான்

அவளுக்காக. அவள் முனகும் பொழுதெல்லாம் அவள் தலையைத் தடவிக் கொடுப்பான். இப்பொழு தெல்லாம் அந்த ஸ்பரிச உணர்ச்சி அருவருப்பைப் படுவதாக இல்லை. வேண்டிய பொழுது அவளுக்குப் பாலும் கஞ்சியும் கொடுத்து வந்தான்.

அம்மையும் குறைந்து வந்தது. கொஞ்ச நாளில் பூர்ண சௌக்ய மாகி விட்டது. அழகு ஒன்றும் அதிகமாக பாதிக்கப் படவில்லை. ஆனால் அவன் சகோதரியின் அந்த சிறு சாயல் மட்டும் அடியோடு மறைந்து விட்டது அம்மைக்குப் பிறகு.

புது மழைக்குப் பிறகு துளிர்த்தெழும் மரஞ் செடிகள் போல் அவள் அங்கங்களும் பசுமையோடு தழைத்தது.

அம்மை ஆரம்பித்த பொழுது, அவளுடைய நெருங்கிய சகவாசத்தால் ஏற்பட்ட அந்த சிந்தனைப் புரட்சி காதல் கொடியை நாட்டி விட்டு வெற்றிகரமாக முடிந்து விட்டது. அந்தப் புரட்சித் தீயில் அவன் பழைய மனம் வெந்து சாம்பராகி விட்டது.

இப்பொழுதெல்லாம் அவள் உருவம் அவனை மயக்கியது. போதை யூட்டியது. அவள் வார்த்தைகள் அவன் மனதில் காதற் கீத மிசைத்தன.

இந்த மாறுதல்களெல்லாம் அவனை யறியாமலேயே அவன் மனதில் பொங்கி எழுந்தன.

இதற்குக் காரணம் அவள் முகமும் நடையுடை பாவனைகளும் அம்மைக்குப் பிறகு பூர்ணமாக மாறி விட்டது தானா?

* * *

நிலவு பொழியும் இரவு. அதே ஜன்னலருகில் இரண்டு நிழற் சித்திரங்கள் ஒன்றையொன்று அணைந்து முத்தமிடுகின்றன. அவனும் அவளுந்தான். காதலோடு தான். இரவு வானிலே அந்த இரண்டு உள்ளங்களின் துடிப்பும் எதிரொலிக்கின்றது.

"உங்களைத்தான் இப்பொழுதெல்லாம் எப்படி மாறி விட்டீர்கள்."

"நீ செய்த புரட்சி தான் அது"

"எப்பொழுதும் விளையாட்டு' தான். ஒரு ரகசியம். தெரியுமா' உங்களுக்கு"

"என்னவாம் அது"

"உம். சொல்ல மாட்டேன்"

"சொல்லித்தான் ஆகவேண்டும் அப்பொழுது தான்........."

"சொல்லட்டுமா ......உம்...... நீங்கள் சீக்கிரம் தந்தையாகப் போகின்றீர்கள். தெரியுமா?"

இன்ப வெறியில் உலகை மறந்து விட்டான் அவன். விதியின் புதிருக்கு விடை கிடைத்து விட்டதல்லவா இப்பொழுது.

★

ஆசிரியர்
சரத் சந்திரசட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு.
ஆர். ஷண்முகசுந்தரம்.

கிரணமயி, "இன்றும் நாங்கள் தயாராக இல்லை. நாளைக்கு வருவீர்களென்று நினைத்தோம்" என்று கூறிவிட்டு சதீசைப் பார்த்துப் புன்சிரிப்புடன், "சின்ன பாபு கூட வந்திருக்கிறாரே!" என்றாள்.

இன்று சதீஷ் தலை குனிந்து கொண்டான்.

"ஹாரான்பாபு எப்படியிருக்கிறார்?" என்று உபேந்திரன் கேட்டான்.

"அதே நிலைமைதான். வாருங்கள் அந்த அறைக்குள்"

ஹாரானுடைய தாயார் அகோரம்மா கட்டிலருகில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். உபேந்திரன் வணங்கியதும் அவள் அழுதாள்.

ஹாரான் மெதுவாக, "அம்மா பேசாமலிரு!" என்றான்.

உபேந்திரன் துக்கத்துடன் ஒரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டான்.

சதீஷ் நாலாபுறமும் பார்வையைச் செலுத்திவிட்டு அங்கிருந்த ஒரு மரப் பெட்டியின்மேல் போய் உட்கார்ந்தான்.

கிரணமயி சிறிது நேரம் நின்று கொண்டிருந்துவிட்டு, சதீசை எரித்து விடுபவள்போல் பார்த்துவிட்டு அங்கிருந்து சென்று விட்டாள். அவள் அங்கிருந்து சென்றது, 'நீங்கள் செய்வது ஒன்றும் நல்லதல்ல' என்று சொல்வது போலிருந்தது.

டாக்டர் பரிட்சைக்குப் படிக்காமல் விடுவதில்லை என்று சதீஷ் முடிவு செய்து கொண்டான். ஆகையால் அடுத்த நாள் சாயங்காலம் பிஹாரியை அழைத்துக் கொண்டு முன் இருந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தான். அந்த வீடு இதுவரையிலும் காலியாகத்தானிருந்தது. வீட்டுக்காரனிடம் ஆறு மாதத்திற்கு வாடகைச் சீட்டு எழுதிக்கொண்டான். பிறகு அருகிலிருந்த ஒரு ஓட்டலிலிருந்து ஒரு சமையல்காரனை கூட்டி வந்து வைத்துவிட்டு நிம்மதியாக வெளிக்கிளம்பினான். பிஹாரியிடம், "என் பிஹாரி! நாம் நேற்றுத் தானே வந்தோம்?" என்றான்.

பிஹாரி ஆம் என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான். வழியில் நடந்து கொண்டே, "பிஹாரி, என் மனதுக்குத் திருப்தி

இல்லை. என்ன இருந்தாலும் அவள் எனக்காக எவ்வளவோ செய்திருக்கிருள். அதைத் தவிர இன்னொரு விதத்தில் பார்த்தால், என்னால்தான் அவளுக்கு அந்தச் சாப்பாட்டு விடுதியிலிருந்து வேலை போயிற்று. ஒரு தரம் அவளைப் பார்த்தால் தேவலாம்'' என்றான்.

அவன் யாரைப்பற்றிப் பேசுகிறான் என்பதைப் பிஹாரி அறிந்து கொண்டான். பிஹாரி ஒன்றும் பேசவில்லை.

சதீஷ் மேலும் சொல்லத் தொடங்கினான். ''யாராயிருந்தாலும் சரி, தெருத் தெருவாகப் பிச்சை எடுப்பவளாக இருந்தாலும், கஷ்ட காலத்தில் நாம் அவளுக்கு உதவா விட்டால் மனிதப் பிறவி எடுத்ததில் அர்த்தமே இல்லை. ஆனால், நான் அவள் வீட்டிற்கு வர மாட்டேன். அவள் தெருவுக்குக்கூட வரமாட்டேன். நான் அந்தச் சந்து முனையில் நின்று கொள்கிறேன். நீ அவள் வீட்டிற்குப் போய் அவள் சௌக்கியமாக இருக்கிருளா என்பதைத் தெரிந்து வந்துவிடு. கஷ்டப் பட்டுக் கொண்டுதானிருப்பாள். இது எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஏதாவது ஒரு சாக்கில் என்னமாவது கொடுத்துவர வேண்டும்'' என்றான்.

பிஹாரி மௌனமாகப் பின்னால் நடந்து சென்றான். மறுபடியும் சதீஷ், ''என்னிடம் அவள் எல்லா விஷயத்தையும் சொல்ல மாட்டாள். ஆனால், உன்னிடம் ஒன்றையும் ஒளிக்க மாட்டாள். என்ன, தெரிகிறதா பிஹாரி?'' என்றான்.

ஆனால் பிஹாரி ஒன்றும் பேசவில்லை.

சாவித்திரி வீதி முனைக்கு வந்ததும் சதீஷ் நின்று கொண்டான். ''போய் பார்த்து வா; நேரம் செய்து விடாதே!'' என்றான் சதீஷ்.

பிஹாரி சென்று விட்டான். சதீஷ் அங்கேயே உலாவிக் கொண்டிருந்தான். அதிக தூரம் போவதிற்கு மனது வரவில்லை. ஒரு வேளை பிஹாரி தன்னைப் பாராமல் வேறு எங்காவது போய் விட்டால்!

பத்து நிமிஷத்திற்குப் பிறகு பிஹாரி திரும்பி வந்து, ''அவள் இல்லை'' என்று சொன்னான்.

சதீஷ் ஆவலுடன், ''எப்போது வருவாள்?'' என்றான்.

''இனி அவள் திரும்பிவர மாட்டாள். அவள் போய் இரண்டு மாதம் ஆகி விட்டதாம்.''

சதீஷ் ராந்தல் கம்பத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ''பொய்! நீ ஏமாந்து விட்டாய்'' என்றான்.

பிஹாரி உறுதியாக ''இல்லை, உண்மையாகவே அவள் அங்கு வருவதில்லையாம். வீட்டை விட்டுப் போய் விட்டாளாம்'' என்றான்.

''அவளுடைய சாமான்கள் எல்லாம்?''

''அங்கேயேதான் கிடக்கிறது. அப்படி என்ன பிரமாதமான சாமான்கள்?''

''அவள் ஒரு ஏழை பெண்ணயிற்றே! அந்தச் சாமான்களை அவள் பொருட்படுத்த மாட்டாளா? நீ ஒரு சுத்த முட்டாள். யாரிடமோ கேட்டு விட்டு இனி அவள் வரமாட்டாள் என்கிருயே? சரி பிஹாரி, நீயே சொல்லு;

அவள் காணுமல் போய் விட்டால் யாரும் தேடக்கூடாதோ? நான் போலீசுக்கு ரிபோர்ட் செய்யப் போகிறேன்''

பிஹாரி பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

"மோக்ஷதா என்ன சொல்கிருள்? என்ன, அவளுக்குக் கூடவா தெரியாது? நான் நம்ப மாட்டேன். அவளுக்கு நிச்சயம் தெரிந்தே இருக்கும். நான் இதோ போய் அவளைக் கேட்கப் போகிறேன்''

பிஹாரி மிகுந்த கவலையுடன். "நீங்கள் போக வேண்டாம்!'' என்ருன்.

"என் போகக் கூடாது? அவர்கள் என் மறைக்கிருர்கள்? நான் என்ன அவளை விழுங்கியா விடுவேன்? நான் சொல்வதைக் கேள் பிஹாரி, அவளைக் கண்டு பிடிக்காமல் விடமாட்டேன்''

பிஹாரி பயந்து விட்டான். "அவள் பேரில் ஒன்றும் குற்றம் கிடையாது பாபுஜி. சாவித்திரி தன் இஷ்டப்படி அவர்களிடம் சண்டை பிடித்துக் கொண்டு போய் விட்டாள்'' என்ருன் பிஹாரி.

"பின் ஒன்றும் சொல்லிப் போகவில்லை என்ருயே! தன் விலாசத்தைத் தெரிவித்துத்தான் போயிருப்பாள்''

"சொல்லிப் போகவில்லை. ஆனல் அவள் இங்குதான் இருப்பாள்''

"எங்கே, எங்கு இருப்பாள்? கழுதைபோல என் அசையாது நிற்கிருய்? என்ன நடந்தது என்பதைச் சொல்லித் தொலைப்பதற்கென்ன?''

பிஹாரி சிறிது நேரம் பேசாமல் இருந்துவிட்டு, "நீங்கள் துக்கப் படுவீர்களே என்று பார்த்தேன். இந்த விஷயம் எல்லோருக்கும் தெரியும்'' என்ருன்.

சதீஷ் திடுக்கிட்டுப் போய் விட்டான் "ஏன் சொல்லவில்லை? என்ன விஷயம்?'' என்ருன்.

பிஹாரி மறுபடியும் மௌனமடைந்து விட்டான்.

சதீஷ் பொறுமை இழந்து விட்டான். அவன் உரக்க, "அடே, போக்கிரிப் பயலே! உன் காலைப் பிடிக்கிறேன். ஜல்தியாகச் சொல்லித்தொலை!'' என்று கத்தினுன்.

பிஹாரி உடனே கீழே விழுந்து சதீஷின் காலைப் பிடித்துக் கொண்டு, "பாபு, என்னை நீங்கள் படுபாவி ஆக்கி விட்டீர்கள். கொஞ்சம் இப்படி வாருங்கள்'' என்று கூறி பக்கத்திலிருந்த ஒரு சந்திற்கு அழைத்துச் சென்ருன். சதீஷ் எதிரில் நின்று கொண்டு, ''என்ன விஷயம்?'' என்ருன்.

பிஹாரி தொண்டையைத் தீட்டிக்கொண்டு, "சாவித்திரி உங்களிடமிருப்பதாக அவளுடைய சின்னம்மாள் நினைக்கிருள். ஆனல் அவள் எங்கிருக்கிருள் என்பது எனக்குத் தெரியும்'' என்ருன்.

"நீ பெரிய புத்திசாலி! எனக்குத் தெரியும்; மேலே சொல்லு''

"அவசரப் படாதீர்கள்'' என்று கூறிவிட்டு மறுபடியும் ஒரு முறை தொண்டையை நன்கு தீட்டிக் கொண்டு "நான் என்ன நினைக்கிறேன் என்ருல்.........''

"என்ன நினைக்கிருய்?''

பிஹாரி வேறு வழியின்றி சொல்லத் தொடங்கினுன்.

"அவள் எங்கும் போகவில்லை. விபின்பாபுவிடம்தான்........"

"யாரிடம்? விபினிடமா?"

"ஆம், பாபுஜி ஆம்............... ஐயையோ! சேற்றுத் தண்ணீர். உலகத்திலுள்ள சனங்கள் எல்லாம் அங்குதான்......"

சதீஷிற்கு வேறு ஒன்றும் காதில் விழவில்லை. தன்னைச் சமாளித்துக் கொண்டு, அருகிலிருந்த சுவரில் சாய்ந்தபடியே, "அப்போ, அவளுடைய சின்னம்மா எப்படி சாவித்திரி என்னிடமிருப்பதாக நினைக்கிருள்?" என்ருன்.

"அன்று சாவித்திரி விபின் பாபுவை நன்கு அவமானப்படுத்தி விரட்டி விட்டாளாம். சதீஷ் பாபுவைத்தவிர வேறு யாரிடமும் போய் இருக்க மாட்டேன் என்று சொல்லி விட்டாளாம்............... வீட்டிலிருந்தவர்களெல்லாம் மறைவிலிருந்தபடியே சண்டையைக் கேட்டார்களாம்."

சதீஷ் எழுந்து நின்று கொண்டான். "பின் நீ எப்படி அவள் விபின் பாபுவிடம் போயிருக்கிருள் என்கிருய்?"

பிஹாரி ஒன்றும் பேச வில்லை.

சதீஷ், "சொல்லு" என்ருன்.

பிஹாரி இங்கு மங்கும் பார்த்தான். அன்று சாவித்திரியிடம் சபதம் செய்தது ஞாபகத்திற்கு வந்தது. கடைசியில், "நான் என் கண்ணுலேயே பார்த்தேன்" என்ருன். சதீஷ் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தான். "நாம் வீடு மாற்றினதிற்கு மறுநாள் நான் வந்திருந்தேன். அன்று விபின் பாபு, சாவித்திரியின் படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தார்" என்ருன்.

சதீஷ் பலத்த குரலில் "பொய்" என்ருன்.

பிஹாரி திடுக்கிட்டு, "இல்லை, உண்மையாகச் சொல்கிறேன்" என்ருன்.

சதீஷ் சிறிது நேரம் பிஹாரியை உற்று நோக்கி விட்டு, "அப்போது சாவித்திரி எங்கிருந்தாள்?" என்ருன்.

"சாவித்திரி அதே அறையில் தானிருந்தாள். வெளியில் வந்து பாய் விரித்து என்னை உட்காரச் சொன்னுள். பாபு கோபித்துக் கொண்டாரா? ஏன் வீடு மாற்றினீர்கள்? என்றெல்லாம் கேட்டாள்."

"அதற்கப்புறம்?"

"நான் கோபித்துக் கொண்டு வந்து விட்டேன். அன்றே அவள் அவருடன் போய் விட்டாள்."

"இத்தனை நாளும் ஏன் சொல்லவில்லை?"

பிஹாரி ஒன்றும் பேசவில்லை. சதீஷ், "நீ உன் கண்ணுலேயே பார்த்தாயா அல்லது யாராவது சொன்னுர்களா?" என்ருன்.

"இல்லை பாபுஜி. நான் என் கண்ணுரக் கண்டேன்"

"எங்கே உன் கண்ணுலே கண்டதாக சத்தியம் செய் பார்ப்போம்? பாரு, பொய் சத்தியம் செய்தால் கண் அவிந்து விடும்"

பிஹாரி உடனே சத்தியம் செய்தான். "இந்த விஷயம் சதா என் மனதிற்குள் அழுந்திக் கொண்டு தான் இருக்கிறது. என் கண் கண்ட விஷயம்."

சதீஷ் பிறகு சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு, "சரி, வீட்டிற்குப் போ. இன்று இரவு

நான் பவானிபூர் போகிறேன். வரமாட்டேன் என்று உபேந்திர அண்ணுவிடம் சொல்லிவிடு '' என்ருன்.

பிஹாரிக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. அவன் அழ ஆரம்பித்தான்.

சதீஷ் கோபத்துடன், " ஏன் அழுகிருய் ? '' என்ருன்.

பிஹாரி கண்ணைத் துடைத்துக் கொண்டு " பாபுஜி, நான் உங்கள் பிள்ளைக்குச் சமம். என்னிடம் எதையும் ஒளிக்காதீர்கள். நானும் கூட வருகிறேன் '' என்ருன்.

" என்ன ? ''

" நான் கிழவனுகத்தான் போய் விட்டேன். ஆனுலும் தைரியம் போகவில்லை. இன்றும் கையில் தடியை எடுத்துவிட்டால் ஐந்தாறு பேரை சுலபமாகக் கீழே விழுக் காட்டி விடுவேன். உயிர் இருக்கிற வரையிலும் ஒரு கை பார்த்து விடுவேன் ''

சதீஷ் ரொம்ப சாந்தமாக, "நான் அங்கு யாரிடம் சண்டை செய்யப் போகிறேன் ? '' என்ருன்.

" பின் வீட்டிற்குப் போகலாம் வாருங்கள் ''

" போ '' என்று கூறிவிட்டு சதீஷ் சென்று விட்டான். பிஹாரி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சிறிது நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்து விட்டு வீட்டிற்குச் சென்ருன்.

பிஹாரியை விட்டுக் கிளம்பியதும் சதீஷ் நேராக மைதானப் பக்கம் சென்ருன். எங்கு போவதென்று ஒரு உத்தேசம் இல்லாவிட்டாலும் எங்கேயாவது போக வேண்டுமென்றிருந்தது. தன்னுடைய முகமே பார்க்க ரொம்ப விகாரமாக மாறி விட்டதை உணர்ந்தான். தன்னை அறிமுகமானவர்கள் யாரும் பார்க்கக் கூடாதென விரும்பினுன். ஏனென்ருல் பார்ப்பவர்கள் நிச்சயம் பயந்து போவார்கள்.

அந்த சனசந்தடியற்ற மைதானத்திலே ஒரு மரத்தடியில் ஒரு பெஞ்ச் போடப்பட்டிருந்தது. சதீஷ் அதில் சென்று உட்கார்ந்தான். அங்கு சனசஞ்சாரமில்லாதிருந்ததே அவனுக்கு ரொம்பவும் நிம்மதியாக இருந்தது. தன்னை நோக்கி பெரிய ஆபத்துக்கள் வரக் காத்திருக்கின்றன என்பதை உணர்ந்தான். அவைகளிலிருந்து தப்புவதற்கு அந்த இருளில் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு யோசிக்கத் தொடங்கினுன். 'என்ன செய்வது ?' என்று சொல்லிக் கொண்டான். இவ்வார்த்தைகள் அவன் காதிற்குள் சிறிது நேரம் ஒலித்துக் கொண்டிருந்தது. கடைசியாக 'ஒன்றும் செய்யப் போவதில்லை என்ற பதில் கிடைத்தது. " சாவித்திரி, ஏன் இப்படிச் செய்தாள் ? '' என்று தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டான்.

" அவள் ஒன்றும் செய்யவில்லையே ! எதற்காக அவள் பேரில் குற்றம் சாட்டுகிருய் ? '' என்று பதில் கிடைத்தது.

கேள்வி :- இம்மாதிரி நம்பிக்கைத் துரோகமான காரியத்தை ஏன் செய்தாள் ?

பதில்:- முதலில் இதைச்சொல்லு. அவள் என்ன நம்பிக்கை ஊட்டியிருந்தாள் ? எதை அவள் துரோகம் செய்து விட்டாள் ?

சதீஷால் மேலே ஒன்றும் யோசிக்கமுடியவில்லை. உண்மையிலேயே சாவித்திரி பொய்யாசை ஒன்றும் அவனுக்குக் காட்டவில்லை. ஒரு நாளும் அவள் சதீஷை ஏமாற்றும் விதத்தில் நடந்து கொண்டது கிடையாது. ஆனல் அதற்கு மாருக அவள் அடிக்கடி எச்சரித்து வந்திருக்கிருள். சகோதரியைவிட அதிகமாக நேசித்து வந்திருக்கிருள். சதீஷ் இதற்கு முன் ஒரு இரவு நடந்த சம்பவத்தை ஞாபகப் படுத்திக் கொண்டான். நோயாளியைக் குணப் படுத்துவதற்காக வைத்தியர் கடினமான முறைகளைக் கையாள்வதைப் போல அன்று சாவித்திரி சதீஷை பலவந்தமாக வீட்டை விட்டு வெளியேறச் செய்து காப்பாற்றிஞள். யாரால் அப்படிச் செய்ய முடியும்? சதீஷின் கண்களில் நீர் நிறைந்தது. தான் அறிந்த விஷயத்தில் எங்கோ தவறு இருக்கிறது என்று அவன் மனதை உறுத்திக் கொண்டே இருந்தது.

பிறகு அவன் தனக்குள் கேள்வி கேட்கத் தொடங்கிஞன். "நான் அவளை காதலித்தேனு?"

பதில் :- ஆனல் இல்லையா? பின் எதற்காக அந்தச் சேற்றில் இறங்கிஞய்?

கேள்வி :- ஓஹோ! தாமரையைக் கொய்ய இறங்கிஞல்கூட சேறு ஆகத்தான் செய்யும்?

பதில் :- அப்பனே, இது ரொம்பப் பழைய விஷயம். இது பிரயோசனமில்லை. தாமரையை தண்ணீர் விட்டுச் சுத்தம் செய்து கொள்கிருர்கள். ஆனல் உன் தாமரைதான் எது? நீ எங்கு அதைச் சுத்தம் செய்வாய்?

"அது என் இஷ்டம்?"

பதில் :- ராம ராம! இம்மாதிரி மனதில்கூட நினைக்காதே!

அதன் பிறகு வெகு நேரம் நட்சத்திரங்கள் நிறைந்த ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு திடீரென, "நான் தான் அவள் ஆசையையே விட்டு விட்டேனே. அவளை அடைய விரும்பவில்லையே. பின் எதற்காக என்னை இவ்விதம் அவமானம் செய்தாள்? ஒரு தரம்கூட என்னை ஏன் கேட்கவில்லை? இந்தக் காரியம் செய்யும்படி அவளுக்கு என்ன கஷ்டம் வந்து விட்டது? ஒரு சமயம் பணத்தாசையால் செய்திருப்பாளோ? என்ருல், அதுவும் நம்ப முடியவில்லையே! விபினைப் போன்ற குடிகாரனைத்தான் அவள் எப்படி மனதாரக் காதலிக்க முடியும்? பின் என்னதான் காரணம்?

கங்கைப் புனலில் மோதிவரும் குளிர் காற்றுப் பட்டவுடன் தேகம் நடுங்கியது. போர்வையை நன்கு இழுத்துப் போர்த்துக் கொண்டு பெஞ்சி மீது படுத்துக் கொண்டான். படுத்ததும் அவன் கண்ணெதிரே சாவித்திரியின் உருவமே காட்சியளித்தது. ஆஹா! அந்த முகம்தான் எவ்வளவு அழகாயிருக்கிறது! அந்த முகத்திலே அறிவும், சாந்தமும், அன்பும் இளமையும் அல்லவா குடி கொண்டிருக்கிறது! ஒரே சமயத்தில் அவன் இவ்வளவு அரிய பண்புகளையும் பார்த்ததே இல்லை. அவன் உள்ளத்திலே மூடுண்டு கிடக்கும் அந்த நீறு பூத்த நெருப்பை எங்ஙனம் சகிப்பான்! அவன் என்னதான் செய்ய முடியும்? அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடியது. இந்தக் கண்ணீரைத் துடைக்கக்கூட அவனுக்கு

விருப்பமில்லை. இந்தக்கண்ணீர் முத்துக்களில்தான் எத்தகைய இன்பம் நிறைந்திருக்கிறது என்பதை அறிந்தான். அவன் இருகரங்களையும் அகல விரித்துக் கொண்டு நட்சத்திரங்கள் நிறைந்துள்ள ஆகாயத்தை அடிக்கடி வணங்கினான்.

சதீஷ் எப்பேர்ப்பட்டவனையும், கடவுள் ஒருவர் இருக்கிறார்; சிறியவர் பெரியவர் யாராயிருந்தாலும் அவருக்கு ஒரு நாளைக்குப் பதில் சொல்லியாக வேண்டும் என்ற நம்பிக்கையுடையவன். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். பிறகு, "ஆண்டவா! நீ யார் மூலம் என்ன சேதி அனுப்புகிறாய் என்பது யாருக்கும் தெரியாது. இன்று உனது விருப்பப்படி சாவித்திரி ஒரு கொடை வள்ளல் தான். நான் ஒரு பிச்சைக்காரனே! ஆனால் இது நல்லதா கெட்டதா என்று நிர்ணயிக்கும் சக்தி எனக்குக் கிடையாது. என் நெஞ்சிலிருக்கும் பாரத்தை மட்டும் அப்புறப் படுத்திவிடு" என்று வேண்டினான்.

அதன் பிறகு சதிஷ் தூங்கி விட்டான். எங்கோ மணி இரண்டு அடித்தது. மூடியிருந்த கண்கள் மெதுவாக விரிய ஆரம்பித்தன. அவன் அவசரமாக எழுந்து உட்கார்ந்து, கொண்டு, "இல்லை, இனி ஒருக்காலும் உன்னைப் பற்றி நினைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்க மாட்டேன். நீ எங்கிருந்தாலும் சரி; சுகமாக இரு என்று வேண்டுமானால் இன்றிலிருந்து பிரார்த்திக்கிறேன்" என்று கூறினான். அதன் பிறகு அவன் தூங்கி விட்டான்.

அங்கு பாரிஸ்டர் வீட்டில் சாயங்காலம் சரோஜினி, ஜோதிஷ் உபேந்திரன், வேறு யாரோ ஒரு புதிய வாலிபன் முதலானவர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அந்த வாலிபன் நல்லகட்டு மஸ்தான தேகம் படைத்தவன். பெயர் சஷாங்கமோகன். இவனும் வெளிநாடு சென்று படித்து வந்த வாலிபன். சிறிது நாளாக சரோஜினி மீது நாட்டம் கொண்டு வருகிறான். அதோடு தனது காதலைத் தெரியப் படுத்த பூர்ண முயற்சியும் செய்து வருகிறான். ஆனால் அந்த முயற்சிகளெல்லாம் வெற்றி அளித்ததா என்பது யாருக்கும் தெரியாது. இன்று சதீஷைப் பற்றி பேச்சு நடந்துகொண்டிருந்தது.

உபேந்திரன், சதீஷினுடைய தேக பலத்தைப் பற்றியும், மனோ பலத்தைப் பற்றியும் சங்கீத ஞானத்தைப் பற்றியும் விவரித்துக் கூறிக் கொண்டிருந்தான். அருகில் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு சரோஜினி மிகவும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். இந்தச் சமயத்தில் தான் பிஹாரி வந்து சதீஷ் பவானிபூர் போயிருக்கிறார் என்ற சேதியைச் சொன்னான்.

உபேந்திரன் ஆச்சரியத்துடன், "அங்கே அவனுக்கு யார் இருக்கிறார்கள்?" என்றான்.

"எனக்குத் தெரியாது" என்று கூறிவிட்டு பிஹாரி சென்று விட்டான். அனைவரும் சதீஷைத் தான் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்களாதலால் அவர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது. சரோஜினி இது வரையிலும் குனிந்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தவள் இந்த "சமாசாரத்தைக் கேட்டதும் நன்கு நிமிர்ந்து உட்கார்ந்தாள். பிறகு, "சரி, இனி என்ன செய்வது" என்றாள்.

ஜோதிஷ் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

ஆனல் சஷாங் மோகன் ஏமாற்ற மடையவில்லை. அவன் உடனே மகிழ்ச்சியுடன், "இனி சரோஜினி ஆரம்பிக்க வேண்டியது தான்" என்ருன். அவனுடைய சங்கீத ஞானத்தைப் பற்றி அனைவருக்கும் தெரியும். அவன் மறுபடியும் "ஆண்கள் பாடுவது எனக்குப் பிடிப்பதில்லை. இயற்கையிலேயே அவர்கள் குரல் பெரிதாக இருக்கிறது. அவர்கள் எவ்வளவு உயர்ந்த வித்தை உடையவர்களாயிருந்தாலும் அந்த இனிமையும், மதுரமும் வருவதில்லை."

அங்கிருந்தவர்களில் யாருமே இதற்கு எதிர் வாதம் செய்யவில்லை. ஆனல் சரோஜினி, "உங்களுக்கு ஆண்கள் குரலில் இனிமை இல்லாதிருக்கலாம். ஆனல் ஸ்வரத்திற்கு குரல் பெரிதாக இருப்பதால் ஒன்றும் பாதகமில்லை. ஆர்மோனியத்திற்கும், பியானோவிற்கும் ஆரம்ப ஸ்வரங்கள் கனமாகத்தான் இருக்கின்றன. அவைகளை சனங்கள் ரசிப்பதில்லையா?" என்ருள்.

சஷாங்கனல் இக்கேள்விக்குப் பதில் அளிக்க முடியவில்லை. இருந்தாலும் அவன் என்னவோ சொல்ல முயன்ருன். ஆனல் அதற்குள் சரோஜினி எழுந்து நின்று கொண்டு, "நான் அம்மாவிடம் சொல்லி விட்டு வந்து விடுகிறேன். அவள் சாப்பிடுவதற்கு எதிர் பார்த்துக் கொண்டிருப்பாள்" என்று கூறிச் சென்றுவிட்டாள்.

உடனே உபேந்திரன் திடுக்கிட்டு, "ஓஹோ! இன்னும் அம்மா தான் சாப்பாட்டு விஷயத்தைக் கவனித்துக் கொள்வதா?" என்ருன்.

உபேந்திரன் மனதிலே நிறைந்திருந்த வாஞ்சை தான் அவனை அம்மாதிரி பேசத் தூண்டியது. அதை சரோஜினி அறிந்து கொண்டு புன் முறுவலுடன், "உங்கள் விருப்பமா இது? அம்மா உங்களைப் போல் நினைக்காவிட்டால் அது அவளுடைய குற்றமல்லவே! சரி, அம்மாவிடம் சொல்லி விட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுப் போய்விட்டாள்.

அவள் சென்ற பிறகு சஷாங்க மோகன் உபேந்திரனிடம், "உங்கள் நண்பர் ஒரு வைதீகர் என்று நினைக்கிறேன்" என்ருன்.

உபேந்திரன், "சாதாரணமான வைதீகனல்ல; ரொம்பக் கடூரமான வைதீகன். பூஜை எல்லாம் தவற மாட்டான்" என்ருன்.

சதீஷ் மறைவாகக் குடிப்பது உண்டு. இது உபேந்திரனுக்கு தெரியாது. இதை அவன் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாது.

"அவர் என்ன செய்து கொண்டிருக்கிருர்?" என்று சஷாங்கன் கேட்டான்.

"ஒன்றும் செய்வதில்லை. அவன் ஏதாவது செய்வான் என்ற நம்பிக்கையும் யாருக்கும் கிடையாது"

(தொடரும்)

★

நாடகமா?

"சுவான்"

ஆபீஸ் என்றவுடன் என்ன நினைக்கிறீர்கள்? இது எதுடா முதலிலேயே பெரிய குண்டு போடுகிறானே! என்று யோசிக்கிறீர்களா? "குண்டுகளைப் பொழிந்தனர். வர்ஷித்தனர்" என்று ரேடியோவிலும் பத்திரிகையிலும் வாசித்து வாசித்து, கேட்டுக் கேட்டு போதும் வாயும் வலிக்கிறது என்று சொல்வீர்கள். இதை விட குண்டுக்குப் பதிலாக ஒரு 'உருண்டை சோறு' என்று போடலாம் இப்பஞ்ச காலத்தில். பஞ்சம் என்றவுடன் எல்லாப் பஞ்சமும் வந்ததே, கதை கட்டுரைப் பஞ்சம் வரக்கூடாதா கடவுளே! என்று எண்ணுகிறீர்கள். எண்ணியபடிதான் எதுவும் நடக்காதே.

இவ்வளவு போதுமென்று நினைக்கிறேன் முன்னுரை. (என் கதைக்கு வேறு யாராவது முன்னுரை எழுதத் துணிவார்களா? என்ன!) பிறர் விஷயங்களில் தலையிடக்கூடாது (பணத்தைத் தவிர) என்று யாரோ ஒரு பெரியவர் (எதுவிஷயமும் பெரியவாள் சொன்னால் தான் மதிக்கிறது உலகம்) சொல்லியிருக்கிறார்கள்.

எங்கேயோ ஆரம்பித்து எங்கேயோ போய் விட்டேனே எங்கே உங்கள் காதை இப்படி நீட்டுங்கள் தப்பர்த்தம் செய்ய வேண்டாம். உங்களுக்கு ஒரே ரகசியம் சொல்லப் போகிறேன். அது தான் 'உலகத்திலேயே போற்றப்படுகிற — ஊழல்கள் வெளித்தெரியாத முறையில் நடத்தப்படும் சக்கை வேறு சாறு வேறாகப் பிழியும் தொழிற்சாலை, ஆபீஸ் என்ற கௌரவப் பெயருடன் நடந்து வருபவை.'

எங்கள் ஆபீஸை வாயால் வர்ணிக்க முடியுமா எழுத்தினால் எழுத முடியுமா? நேரில் வந்து பார்த்தால் தெரியும் அதன் மகத்துவம்! அலங்காரம்! ஆடம்பர அசங்கியம்!!!

ஆபீஸ் முன்பு ஒரு ரோடு, நாங்கள் அதை ரோடு என்றுதான் சொல்வோம். ரோட்டில் கல்லையும் மண்ணையும் அள்ளிப் போடுவோமே யொழிய கல்லையும் மண்ணையும் கொண்டு ரோடு போட மாட்டோம்.

அப்படித்தான் செய்வோம் அது எங்கள் பிறப்புரிமை.

ஆபீஸின் பின் பக்கத்தில் பச்சைப் பசேலென்ற வயல்கள். அதன் இருபக்கங்களிலும் 'பாரிஸ்' சென்டைத் தூக்கியடிக்கும் பட்டண நாகரிகச் சின்னத்தின் ஆட்சி பீடங்கள்!

சரி, முடிந்தது. ஆபீஸின் கட்டுப் பாடுகள் எப்படி இருக்கிறது என்று பார்ப்போம். ஏ. ஆர். பியில் பாதிக் கட்டிடத்திற்கு நீலமும் மற்றொரு பாதிக்கு காக்கியும் இப்படியாக பல வர்ணங்கள் பூச வேண்டும் என்று சொன்னார்கள். எங்கள் ஆபீசிற்கு

அந்தச் செலவே ஏற்படவில்லை. பச்சோந்தி பாராதவர்கள் எங்கள் ஆபீஸ் கட்டட நிறத்தைப் பார்க்கலாம். அதன் பிளான் எப்படி என்று கேட்கலாம். ஒரு மனுச் செய்யுங்கள். கிடைத்து விட்டால், ஏழுமாமாங்கம் முழுகிய புண்ணியம். 'வேலை' என்று பெயரை வைத்துக் கொண்டு, ஆளைக் கொல்ல முடியுமா? முடியும் என்பதே எங்கள் நித்திய வாழ்வு. எமலோகத்தில் ஏங்கிக் கிடப்பவர்களைப் பார்க்கமுடியாதவர்கள் எங்கள் ஆபீசைப் பாருங்கள். வேலை என்று ஒவ்வொரு மனிதனுக்கும் ஏனோ ஏற்பட்டிருக்கிறது. வேலையில்லாவிட்டால் செத்தல்லவா போவான். ஓகோ வேலைதான் சாகடிக்கிறதோ !

நீயும் ஒரு இயந்திரம் தானு எமகிங்கரன்தானு என்று நினைக்கிறீர்கள். யந்திரத்திற்காவது ஓய்வு எமகிங்கரனுக்காவது யமகடாக்ஷம் உண்டு. எங்களுக்கு காப்பி ஓட்டல் கடாக்ஷந்தான் உண்டு. பிரத்தியக்ஷம் ஓருவரி எழுத ஒருகப் காப்பி வேணும். நூறுவரி எழுத எனக்கு ஒரு கப் காப்பி வேண்டும். அதுதான் எங்கள் ஆபீஸ் யந்திர எண்ணெய்.

சில ஆபீஸ்களில் "ஒரு கப் காப்பி சாப்பிடுங்களேன்" என்று சொன்னல், கோபம் வரும். காப்பி சாப்பிட ஏன் கோபம்? "ஏனய்யா நான் ஆபீஸ் பண்ணுகிறது தூங்குகிறது உமக்குப் பிடிக்கலையோ?" என்று சொல்வார்கள். ஆண்டவனே அவர்கள் பாக்கியசாலிகள்; பொறுமை மனிதனுக்கு ஏற்படும் வியாதி. ஹாய்யாகக் கோட்டைப் போட்டுக்கொண்டு இரண்டு கிறுக்குக் கிறுக்கிவிட்டு வந்திடலாம் என்று நினைக்காதீர்கள். இந்த நல்ல எண்ணம் எங்கள் ஆபீசில் நடக்காது.

சரி எங்கள் ஆபீஸில் உள்ள ஆட்களை அறிமுகப் படுத்தி வைக்கிறேன். என்னுடன் வாருங்கள். நான் யார்?

என் பெயர் தானே? யாருக்கும் தெரியாது. என்னை சரியாகப் பாருங்கள்.....அப்படி.....இப்படி நான் யார் என்பதற்கு முன் "யானைப்பல்லை நான் ஏன் கவ்விக் கொண்டிருக்கிறேன்?" என்பது உங்கள் சந்தேகம். இது என் பல்தான் யானையின் பல்லல்ல. ஸ்ரீமான் 'பல்லரை' என்று ஆரம்பித்தால், ஆபீஸில் யாரும் என் முன், மன்னிக்கவேணும் என் பல் முன்னுல் கொண்டு வந்து நிறுத்தி விடுவார்கள். எனக்கு எதிரே அவர் எழுதுவதிலிருந்தும் முனகுவதிலிருந்தும் அவர் ஒரு மணி— என்னைப் போல் ஒரு யந்திரம் என்று தெரிந்து கொண்டீர்கள். அவர் மூக்கில் உள்ள கண்ணுடியைப் பார்த்தீர்களா? "அது எங்கப்பா மூக்கிலிருக்கிறது. வாயில் அல்லவா இருக்கிறது" என்று என்னிடம் சண்டைக்கு வராதீர்கள். அவரிடம் ஒரு வார்த்தை கொடுத்துப் பாருங்களேன் உங்கள் பாடு ஆபத்துதான். "இந்தத் தபால் அனுப்புகிற வரையில் என்னிடம் யாரும் பேசக்கூடாது "என்று சப்தம் போடுவார், அதிலிருந்து அவரை தபால் கிளார்க் தங்கசாமி பிள்ளை என்று அறிந்து கொண்டீர்கள்.

வராந்தாவிற்கு வாருங்கள். என்ன சார் பார்க்கிறீர்கள். சம்பளம் வாங்க வரும் ஆசாமிகளில் ஒரு வகை. பிள்ளைகளுடன் முப்பது நாளும் "கிச்சுக் கிச்சுத் தாம்பலம் கியா கியாத் தாம்பலம்

கண்ணுமூச்சி விளையாடி விட்டு மறுநாள் சம்பளம் வாங்க வந்திருக்கிறார்கள்! கொஞ்சம்—இப்படி...காதை...இல்லை! கண்ணைத் திருப்புங்கள், ரிக்ஷாவின் சப்தம் ரிக்ஷாவில் ஆள் இருக்கிறதா. ஏதோ உருவம் தர்மா மீட்டர் போல் தெரிகிறது. ஆணா? பெண்ணா? ஓகோ லேடி டாக்டர் தானா...நான் என்னவோ...நினைச்சேன் என்று மனதிலேயே வைத்துக் கொள்ளுங்கள்.

இந்தப் பக்கம் ஒரு அறை தெரிகிறதே? இதுதான் இந்த முனிசிபாலிடியை ஒரு சாண் காகிதத்தினுள் அடைத்து வைத்திருக்கும், சர்வேயர் தர்மசங்கடமய்யர். மகாவிஷ்ணு மூவுலகத்தையும் இரண்டடிக்குள் அளந்து விட்டதாகச் சொல்லுகிறார்கள். இது என்ன பிரமாதம்? அதை ஒரு அடி காகிதத்தில் அளந்துவிட முடியும் என்று சபதம் செய்யத் தயாராயிருக்கிறார். பகவானிடம் எஞ்சிய ஓரடியை இவர் கையில் தான் கொடுத்தாரோ? கொஞ்சம் மூக்கைப் பிடித்துக் கொள்ளுங்கள் ஹெல்த் டிபார்ட்டுமெண்டிற்குள் போவோம். அங்கே உள்ள பைல்கள் பேப்பர்களுக்கு ஒரு தனி வாசனை; ஆம் நாற்றம்! மூக்கைப் பிடித்துக் கொள்ளுங்கள். நாங்கள் அனைவரும் செய்யும் தினசரி அனுஷ்டானங்களில் இதுவும் ஒன்று.

சரியாய்க் கவனித்து வாருங்கள். டைரி செக் பண்ணுகிறார் ஹெல்த் பிராஞ்சு கிளார்க். அங்கே கலங்கியபடி ஒரு பெண் நிற்கிறாள். எங்கேயோ பிறந்த குழந்தைக்கு இவளால் மருத்துவம் செய்யப்பட்டு, இறந்து போனதைப் பற்றி ஜில்லா மெடிக்கல் ஆபீஸர் குறுக்கு கேள்வி போட்டு, மதராஸிலிருந்து, குழந்தை பிறந்து இறந்ததா? இறந்து பிறந்ததா என்ற சந்தேகத்திற்கு ஆபீஸிலிருந்து மிமோ அனுப்ப அதே விலாசத்துடைய இன்னொருவரிடம் போய்ச் சேர்ந்து விட்டது; விசாரிக்கப் போன இந்த அம்மாள் அந்த விலாசதாருக்கு இறந்த குழந்தையோ, பிறந்து இறந்த குழந்தையோ இல்லை யென்றும் அவர் நைஷ்டிக பிரம்மச்சாரி என்றும் குறிப்பெடுத்து டைரி காண்பிக்க வந்த இடத்தில் கலங்கி நிற்பவள் தான் நமது கதாநாயகி காந்தா!

இல்லாவிட்டால் மறுபடியும் பிடித்துக் கொள்ளுங்கள். மூக்கை பிடித்துக் கொண்டிருக்கிறீர்களா? அது என்ன சார் சுருட்டுப் புகை? இவ்வளவு நாற்றமும் ஒரு சுருட்டுக்குள் எப்படித்தான் துருத்தி வைக்கிறார்களோ? இந்தப் புகை மண்டலாதிபதியைத் தெரியாத உங்களுக்கு?

ரோட்டுகளில் அங்குமிங்கும் இவருக்கு ஜீவனோபாயமாக இருப்பவை சாக்கடைக் குடிகள் ஜலதாரை கொசுக்கள் காலராக் கண்ட வீட்டு எலிகள். அலைந்து கொண்டிருப்பாரே இவர் பெயர் சேனிட்டரி இன்ஸ்பெக்டர் சேத்தவராயன் பி. ஏ. "கடவுளிற்கு மட்டும் கண்ணிருந்தால் புகைப் படலத்தை உத்தேசித்து ரயில் வண்டியைப் போல் தலையிலேயே புகைக்கூண்டு சிருஷ்டி செய்திருப்பான். ஆதலால் உலகத்தில் கடவுளும் கிடையாது ஒரு கோயிலும் கிடையாது" என்று சொல்வார் சேத்தவராயன் பி. ஏ. இதை உலகெங்கும், வானளாவப் பரப்ப வேண்டும் என்று கங்கணங் கட்டிக் கொண்டு புறப்பட்டிருக்கிறார். எதை? புகை மண்டலத்தை

மூக்குப் பிடியைத் தளர்த்திக் கொள்ளுங்கள், இது என்ன ரத்தப் பிரவாகம் என்கிறீர்களோ கண்ணை மூடிக் கொள்ளுங்கள். ஆம் அது ரத்தமில்லை. புகையிலை வெற்றிலைத் தாம்பூல ரசம்!

என்ன மணிச் சப்தம்? காதைத் துளைக்கிறது? அதுதான் பியூன்களுக்கு காலனைக அமைந்து மானேஜர் முத்துசாமி மேஜை மேல் காட்சியளிக்கும் காலிங் பெல். எமபட்டணத்தின் ஆராய்ச்சி மணி!

மெய்வருந்தி, கண்மூடி, மூக்கடைத்து செவியும் பொத்தி என்னோடு வந்து விட்டதற்கு என்ன கைமாறு, இதோ ஒரு கப் காப்பி சாப்பிட வாருங்கள்.

காப்பி என்றவுடன் எனக்கு ஒரு ருசிகரமான சம்பவம் நினைவுக்கு வருகிறது. பட்டணத்துக்கு நான் போயிருந்த போது ஒரு "தண்ணீர் பந்தலுக்குள்" தண்ணீர் குடிப்பதற்கல்ல! காப்பி குடிக்க சென்றேன். அங்கே சிறு காப்பிக் கிளப்புகள் 'தண்ணீர்ப் பந்தல்' என்ற பெயரோடு, 'தண்ணீர் சப்ளை' செய்து வருகின்றன. இல்லை, 'காப்பி சப்ளை' இப்போது அங்கே நான் என்ன குடித்திருப்பேன் என்பதைத் துலாம்பரமாகச் சொல்ல வேண்டியதில்லை. கேட்க வேணும் என்ற ஆவலும் உங்களுக்கு இருக்காது! நிற்க,

அது ஹோட்டல் தான். ஒகோ அதை வேறுவிதமாக எண்ணிவிட்டீர்கள். எத்தனையோ பேர் இப்படி எண்ணி அங்கே 'உட்காரப் போய்' ஏமாந்திருக்கிறார்கள். ஐயோ உங்கள் கண் தித்திப்புப் பக்ஷணத்தின் மேல் போகிறதே.

அது மைசூர் பாகு. நான் "மைசூர்பாகு சாப்பிடுங்களேன்" என்றால் "உங்கள் பல்லை உடைக்க வேண்டுமா?" என்று அர்த்தம். அந்த பழிபாவம் எதற்கு?

எங்கள் ஆபீஸில்:-

மெய்வருந்த உழைக்கிறோம் வாய் நோக ஓட்டலில் சாப்பிடுகிறோம்.

கண்கூச எச்சல் தம்பலக் காட்சிகள் காண்கிறோம்.

மூக்கு முட்டித் திக்குமுக்காடி புகை மண்டலத்தை நுகர்கிறோம்.

செவி, கொப்பளிக்க எமபட்டணத்தின் ஆராய்ச்சி மணியைக் கேட்கிறோம்.

இது எங்கள் ஆபீஸ்!



கிராமியச் சித்திரம்:

வளையல்க்காரி

கே. விஜயராகவன்

இயற்கை அன்னையின் எழில் குலுங்கும் வசந்த காலம். இளந் தென்றல் இலேசாக மலர்களின் நறுமணத்தை அள்ளித் தெளித்துக் கொண்டிருந்தது. காலை நேரம் மனோகரமாக இருந்தது. பார்வதி ஆடி அசைந்து குடத்தை இடுப்பில் வைத்த வண்ணம் தண்ணீர் கொண்டு வரக் கிளம்பினாள். குளத்தில் அவள் ஒவ்வொரு படிக்கட்டாக இறங்கும் போது அவளுடைய பார்வை சடக்கென அங்கு மலர்ந்திருந்த ஒரு தாமரை மலரின் மீது விழுந்தது. அது நேற்று வரை மொக்காகத்தான் இருந்தது. இன்றுதான் குளிர்ந்த தண்ணீரில் விரிந்த மலராகக் காட்சியளித்தது. அதைக் கண்டதும் அவளுடைய உள்ளத்தில் ஏதோ விவரிக்க முடியாத உணர்ச்சி பொங்கவே சடக்கென்று படிக்கட்டில் குடத்தை வைத்து விட்டு, அதே படிக்கட்டில் அவளும் உட்கார்ந்து விட்டாள்.

அவளுக்கு விவாகம் ஆகி இரண்டு வருடங்கள்தான் ஆனது. ஆனாலும் வாழ்க்கையில் அவள் அனுபவித்த சுகம் என்ன? ஒன்றுமில்லை. காரணம்? அப்பொழுது அவளுடைய மனம் விரிவடையவில்லை. கணவன் அன்பைப் பருகத் தவறிவிட்டாள். ஏன் தவறிவிட்டாள்? ஏனோ அது அவளுக்கே தெரியாது. அவனும் தன் இன்பத்தில் இடி விழுந்ததை எண்ணிப் பட்டாளத்தில் சேர்ந்து விட்டான்.

ஆனால் இப்பொழுது அவனைப் பற்றிய, அவளுடைய சிந்தனை கடல் அலை போல முன்னும் பின்னும் தாவிச் சென்றது. அவளுடைய கணவன் முத்துசாமியைப் பற்றி நினைத்த போது அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. முத்துசாமி ரொம்பப் படிக்கா விட்டாலும் ஓரளவு கற்றவன். கிராமத்து வாலிபர்களிலே அவன் மிகவும் துணிவும், நேர்மையும் உடையவன். பார்வதியின் அழகுக்காகவே அவளை விரும்பிக் கலியாணம் செய்து கொண்டான். அவளுடைய அழகு சாமான்யமில்லை. சேற்றிலே பிறந்த செந்தாமரையைப் போல.

அவளுடைய உள்ளம் அப்போது திறவாமல் இருந்தது. கணவன் மனைவி என்ற முறையில் அவள் சாதாரணமாகவே நடந்து கொண்டாள். கணவனிடம் அன்பில்லாமல் இல்லை. ஆனால் முத்துசாமிக்கு அவளுடைய போக்குப் பிடிக்கவில்லை. அவள் சதா அடுக்களையில் ஒளிந்து கொண்டிருப்பதை அவன் விரும்பவில்லை. அவளுக்கு கல்வி அறிவு புகட்டி அவளைத் தன்னுடைய போக்கில் திருப்ப முயன்றான். அப்போதும் முடியவில்லை. அவளுடைய பிடிவாத குணம் அதற்கு இடங்கொடுக்கவில்லை. அவன் இன்பகரமான வாழ்வு வாழ விரும்பினான். அவள் உள்ளமாகிய கோவிலில் அவன் தன்னைப் பிரதிஷ்டை செய்து கொள்ள விரும்பினான். ஆனால் அவளுக்கு

அதொன்றும் எனே புரியவில்லை. அவன் படித்திருந்த புத்தகங்களி லிருந்து ரசமான பாகங்களை எடுத்து வாசித்துக் காட்டினன். இளநிலவின் வசிகரமும், கடல் அலைகளின் பரவசமும் அவள் உள்ளத்தில் எழில் தீயை மூட்டி னல்தானே? எங்கோ 'கடக்' என்று ஒலி கேட்டாலும் மான் போல் தலையைத் தூக்கிப் பார்க்க வேண்டுமே! இளந் தளிர்கள்,

வழக்கமாகக் கிராமத்துக்கு வரும் வளையல்க்காரி ஆலமரத் தடியில் உட்கார்ந்திருந்தாள். அவளுக்குப் பக்கத்திலே பலநிற வளையல்ச் சரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. அவளுடைய கணவன் குளிர் மணலில் கால் நீட்டிப் படுத்துக் கொண்டிருந் தான். அவனுடைய தலைக்குத் தலையணையாகத் தன் முந்தாணித் தலைப்பை விரித்திருந்தாள். காலை

'படபடக்'கும் போது, அவள் உள்ளமும் 'படபட'த்தால் தானே?

ஒருநாள் பார்வதி தாமரைத் தடாகத்திற்குப் போகும் வழி யிலே ஒரு ஆச்சரிய சம்பவத்தைக் கண்டாள். அந்த மாதிரி 'ஆச்ச ரியத்'தை அவள் அதற்கு முன் காணவே யில்லை. என்ன அது தெரியுமா?

வேளைச் சூரிய காந்தி போல்; தன் தலையைச் சாய்த்து என் னவோ ரகசியம் பேசிக் கொண் டிருந்தாள். கிளைகளில் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்த இரண்டு கிளிகள் இந்த வேடிக் கையைக் கண்டு விளையாட்டாகத் தங்கள் பேச்சில் என்னவோ பேசிக் கொண்டன! இந்தக் கிளியும் இந்த ஆச்சரியத்தைத் தான் பார்த்துக் கொண்டிருந்

தாள். பார்வதிக்கு இது ஆச்சரிய மாகத் தோன்றினாலும், மற்றவர் களுக்கு இதொன்றும் ஆச்சரிய மாகத் தோன்ற வில்லை. ஏனென் ருல் அவர்கள் எல்லாம் தங்கள் பாடு பரப்பைப் பார்த்துப் போய்க் கொண்டிருந்தார்கள். ஒரு பெரி யவர் மட்டும், "என்னய்யா வளையல்க் காரரே, வேவாரம் எப்படி?" என்ருர். "நீங்கள் தான் பாக்கிறீங்களே?" என்ருர் வளையல்க்காரர். பிறகு வளையல்க் காரி உட்பட மூவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

பார்வதி, தண்ணீர் எடுத்துக் கொண்டு வரும் போதும், அந்தக் குளிர் நிழலிலே அவர்கள் சுகமா கப் படுத்தபடி இந்த உலகத்தை மறந்திருந்தார்கள். அன்றைக்குப் பகல் பூராவும் வளையல்க்காரியின் சுகமான வாழ்க்கை பார்வதியின் மனத் திரையிலே பலவித இன்பக் கோடுகளை வரைந்து கொண்டே இருந்தது. வளையல்காரி வந்த வுடன் கை நிறையப் புது வளையல் கள் போட்டுக் கொள்ள வேண் டும் என்று நினைத்தாள். தானுகக் கூப்பிட்டு, கை நிறைய வளையல் அணிந்து கொண்டாள். இது விசித் திரமாகவே தான் இருந்தது கணவ னுக்கு. இருந்தாலும் அவன் முன் போலவே தான் நினைத்தான். அவள் கன்னங்களிலே களிநகை விளையாடுவதை இப்போது அவனல் புரிந்து கொள்ள முடிய வில்லை! அவள் புன்னகை அவ னுக்கு விளங்கா விட்டாலும், அவள் அவனுக்குத்தான் சொந்தம். ஆனல் அவன் இஷ்டப் படி நடந்து கொள்ள முடியவில்லை அவளுடைய யௌவனத்தை விரும்பி அவளை மணந்தான். ஆனல் அவளுடைய இதயம் திறக்க வில்லை! இதனல் அவனுக்கு சீக்கிரத்திலேயே இந்த வாழ்க் கையில் கசப்பு ஏற்படதுவங்கியது! தான் நினைத்த காரியத்தை சாதிக்க முடியவில்லை என்று எண்ணும் போது அவனுக்கே ஒரு பெரிய ஏமாற்றம்.

அந்த ஏமாற்றத்தில் தான் அவன் யாரோடும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பிவிட்டான். சிப்பாயாகப் பட்டாளத்தில் சேர்ந்து கொண்டான். சேர்ந்து இன்று ஆறுமாதங்களுக்கு மேலா கிறது.

அவன் போன பிறகுதான் பார் வதிக்கு ஞானேதயம் ஆகியிருக் கிறது. அவள் உள்ளக் கதவு திறந்திருக்கிறது. அவள் தன் நடத்தைக்காக கண்ணீர் விட்டுத் தான் அழுகிருள். என்ன செய் வது. அவன் சொன்னது, புத்த கங்களிலிருந்து படித்துக் காட்டி யது எல்லாம் இப்போதுதான் அவள் நினைவுக்கு வந்து அவளை வாட்டத் தொடங்கியது. அவன் பக்கத்திலிருக்கும் போது அந்தரங் கமான ஒரு அன்பு உண்டாக வில்லை. இப்போது அவன் தூர இருக்கிருன். அவனை நினைந்து நினைந்து ஏங்கி அழுகிருள். அவன் எப்போது திரும்புவானே? திரும்பவே மாட்டானே? இல்லை அவன் திரும்பி வந்து அவளை ஒரு தடவையாவது பார்த்துச் செல்ல வேண்டும் என் பது அவளுடைய ஆசை.

இதே சிந்தனையில் அவள் நேரம் போனது கூடத் தெரியா மல் உட்கார்ந்திருந்தாள். அப் போது பின்னலிருந்து யாரோ கூப்பிடவே திடீரென எழுந்திருந் தாள். யாருமில்லை அவளுடைய தம்பிதான். "அக்கா மாமா கிட்ட இருந்து கடிதாசு வந்தி ருச்சு. மாமா வாருங்களாம்" என்ருன்.

அவளுக்கு வந்த சந்தோஷத்தில் ஒரே தாவாகத்தாவிப் போய் அப்படியே தம்பியைத் தூக்கிக் கொண்டாள். அவன் கையிலிருந்த கடிதாசியை வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

முத்துசாமி ஒரு மாத ரஜாவில் ஊருக்கு வந்திருந்தான். அவன் எதிர் பார்த்த மாறுதல் இப்போது பார்வதியிடம் ஏற்பட்டிருப்பதைக் காண அளவு கடந்த ஆனந்தப்பட்டான்.

"நான் சீக்கிரம் வந்திருவேன்" என்றான்.

"போகாமலேயே இருக்க முடியாதா?" என்றாள்.

அவன் சிரித்துக் கொண்டே, "அதனாலே என்ன? இப்பத்தான் மனசு இங்கிருக்குதே!" என்றான். பார்வதியும் சிரித்துக் கொண்டே, "எம் மனசு அங்கல்லவா இருக்கும்" என்றாள்.

முத்துசாமியின் 'உச்சி' குளிர்ந்து விட்டது. இத்தனை நாளும் பட்ட துக்கத்திற்கு மாற்றுக் கிடைத்து விட்டதே? முதலிலே இந்த மகிழ்ச்சி ஏற்பட்டிருந்தாலும், அதில் இவ்வளவு தனி இன்பம் இருக்குமா என்று யோசித்தான். அப்போது தான் 'வெயில் அருமை நிழலிலே' என்ற மொழியும் ஞாபகத்துக்கு வந்தது. கஷ்டத்திலிருந்தே சுகம் பிறக்கிறது என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பிறகு, அவர்கள் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். எதைப்பற்றி என்று சொல்ல வேண்டியதில்லை. அந்தச் சமயம் வளையல்க்காரத்தம்பதிகள் அங்கு வந்து சேர்ந்தார்கள். பார்வதி காட்டிய உபசாரம் வளையல்க்காரத் தம்பதிகளுக்கு பெருத்த ஆனந்தத்தையும் அதிசயத்தையும் அளித்தது. அதற்குக் காரணம் பார்வதிக்கு மட்டும் தானே தெரியும்?

சாப்பாடு முடிந்து, திண்ணையில் பாய் கொண்டு வந்து விரித்தாள் பார்வதி. "இல்லே, நாங்க காற்றுட அந்த மரத்து நிழலுக்குப் போறோம்" என்று புறப்பட்டார்கள் அந்த தம்பதிகள்.

அப்போது பார்வதியின் வதனத்தில் தோன்றிய ஆனந்தத்தை எந்தக் கவியும் சித்திரக்காரனும் சித்திரிக்கவே முடியாது என்பதை நிச்சயமாகச் சொல்லலாம்!

கலைக்கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

கங்கைநதி புனிதமானதே. நல்ல கவியின் உள்ளம் போன்ற படிகத் தெளிவு; சலசலத்தோடும் நீர்ப் பெருக்கு; உண்மைக் கவியின் ரஸனை போன்ற ஆழமுடைமை எல்லாம் அதற்கமைந்துள்ளது.

கங்கை சிவன் முடியிலிருந்து இறங்கியதோ பகீரதன் தவத்தால் வந்ததோ — எல்லாம் புராணக் கதை; நமக்குக் கங்கை நல்ல நீர்நிலவளந் தருகிறது. கங்கையில் எத்தனையோ கோடிப் பேர் குளித்துக் களிக்கிறார்கள்; புண்ணிய நதி என்று அதற்குப் பெயரும் உண்டு. என்றாலும் ஆழ்ந்து பார்த்தால் கங்கையில் எத்தனையோ ஆபாசங்கள் கலந்தே வருகின்றன. கங்கை கரைகளில் குவிந்து கிடக்கும் நாற்றங்கள் சொல்லி முடியாது; ஹரித்வாரத்திற்கு இப்புறம் வந்தால் கங்கையில் ஒவ்வொரு ஊர்ச் சாக்கடையும் கலக்கிறது. கரைகளில் இருக்கும் ஆடு கோழி வெட்டு மிடங்களிற் குவிந்த ஆபாசங்களெல்லாம் அதில் வந்து விழுகின்றன; கணக்கற்ற பிணங்கள் கங்கையில் எறியப் படுகின்றன; அவை அழுகி அதிலேயே சேர்ந்து போகின்றன. இன்னும் எத்தனையோ ஆபாசங்களுடனே தான் இந்த வர நதியும் ஓடிக் கொண்டிருக்கிறது.

இதே மாதிரியே இந்து மதம் என்னும் நமது வேதாகம தருமமும் தெய்விக முனிவரால் அருளப் பெற்று மனிதனைப் புனிதனாக்க எழுந்தன. ஆனால் காலப் போக்கில் அதில் வந்து கலந்த ஆபாசங்களுக்கும் கணக்கில்லை.

சில சமயம் நாற்றம் நமது மூச்சைப் பிடித்து முன்னேற்றத்தைக் கெடுக்கிறது. காலம் எதனையும் மாற்றுவது போல் மனித எண்ணங்களையும் பழக்க வழக்கங்களையும் மாற்றுகிறது. எண்ணம் மாற மாற பழைய மதக் கோட்பாடுகளெல்லாம் மாறிப் போகின்றன.

நமது நாடு அத்யாத்ம ஜோதி வீசும் புண்ணிய பூமி. இந்நாட்டின் உயிர் நாடிகளா யிருப்பவை

வேதம் — ஆகமம் ஆகிய இரண்டு முனி வாக்குகளே. இவற்றில் மனிதன் தெய்வத் தன்மை பெற வேண்டிய தத்துவங்களெல்லாம் பொதிந்து கிடக்கின்றன. தன்னை யறிந்து தானாகப் பிறரை யறிந்து தனக்கும் உலகுக்கும் நல முற நடப்பது தான் வேத உண்மை; தான் என்பது தெய்வாம்சம் என்பது அதன் அனுபவம். தன்னை அறிபவன் கடவுளை அறிவான் என்பதே தத்துவம். ஆகமம் இந்த அறிவிற்குப் படிப் படியாக சாதனங்களைக் காட்டுகிறது. நான் என்பதை எளிதில் சொல்லி விடலாம். ஆண் பெண் பேதமும் கவர்ச்சியும் உள்ளது. சும்மா தன்னை யறிந்து மூலையில் உட்கார்ந்தால் போதாது. உலகம் இருக்கிறது. அது பெண் — ஆண் உறவால் நடக்கிறது. அந்த உறவைக் கூட்டி வைக்க உலகமாயம் உள்ளது — மாயா சக்தி; அதைப் பண்புற நடத்தி வெல்ல வேண்டும். மனித வியல்பில் காமம் வெகுளி கலக்கம் பல நைப்பாசைகள் எல்லாம் நிரம்பி யுள்ளன. அவற்றைத் தீர்க்க வழி தேட வேண்டும். எல்லா உணர்ச்சியினும் காமவுணர்ச்சியை வெல்வது மிகவும் கடினம். மண்ணாசை பொன்னாசையில்லாதவர்களும் பெண்ணாசையில் சிக்கி வருந்துகிறார்கள். அதை வென்றாலே இன்புறலாம். அதற்கு வழி பெண்ணை அஞ்சி ஓடுவதன்று. பெண்ணைப் பரா சக்தியாக வணங்குவதே வழி.

இது தான் காமத்தை வெல்லும் தந்திரம். இந்தத் தந்திரத்தைத் தான் நமது மகான்கள் ஒரு யோகமாக்கித் தாந்திரிக யோக சாத்திரம் எழுதினார்கள். இந்திய இலக்கியத்தில் பெரும் பகுதி தாந்திரிக நூல்களே. குலார்ணவம், மஹார்ணவம், தாந்திரத்துவம் முதலிய பல தாந்திர நூல்கள் வடமொழியில் உள்ளன. அவை யெல்லாம் ஆண் பெண் உறவை ஒரு புனித யோகமாக்கி மனித சக்தியை தெய்வ சக்தி யாக்கவே சாதனங்களைச் சொல்லுகின்றன. இச் சாதனங்கள் சிவன் பார்வதிக்கு உபதேசிப்பதாக வர்ணிக்கப்படும். ஆணைச் சிவமாகவும் பெண்ணைச் சக்தி யாகவும் கருதியே இந்த யோகத்தைத் தொட வேண்டும். பெண்ணைக் காமக் கிழத்தியாகக் கருதும் எவரும் இந்த நெருப்பண்டை போகக் கூடாது; போனால் சாம்பலாவது உறுதி. இந்த யோகம் முதன்மையாக இல்லறத்தாருக்கே ஏற்பட்டது.

நமது சித்தாந்த நூல்களெல்லாம் சிவ சக்தித் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தாந்திர நூல்களே. இந்நூல்களில் மிகச் சிறந்தது திருமூலரின் திருமந்திரமே. தாந்திர யோகத்தின் மாசற்ற தன்மையைக் காத்து வரும் புண்ணிய நூல் அஃதொன்றே. மற்ற நூல்களில் ஆபாசங்கள் புகுந்து விட்டன.

சதிபதிகள் தவ விரதம் மேற்கொண்டு உமையும் சிவனும் போல தியானிப்பது தான் முதன்மையான தாந்திர சாதனம். இத் தியானத்தால் ஆண் பெண்—மின்சாரம் கலந்து இருவருக்கும் புதிய சக்தி யுண்டாகிறது.

இச்சாதனமே திவ்ய தாந்திரம் அல்லது தக்ஷிணமார்க்கம், அல்லது தென்னாட்டுத் தமிழர் பயின்ற தாந்திரம் எனப்படுவதும். இது தான் வேதகாலந் தொட்டு நமது நாட்டில் வழங்கி வந்தது. இச் சாதனத்தில் சிலகாமிகளும் குடியர்களும் புகுந்தனர். பஞ்சமகாரத்தை இவர்களே புகுத்தினர்.

இவர்கள் சிற்றின்பத்தில் பேரின்பத்தைத் துளாவத் தொடங்கினர்.

மச்சம், மது, மாமிசம், மாது மைதுனம்—இவை பஞ்சமகாரங்கள் — இவற்றை அளவு கடந்து உபயோகித்து போக சுகம் அனுபவித்தால், இன்புறலாம். அனுபவத்தால் மனிதனின் ஆசைகள் அடங்கும் — என்பதே இவர்கள் கொள்கை. இப்பஞ்சமகாரிகளைப் பஞ்சமா பாதகர் என்றாலும் குற்றமில்லை. இவர்கள் தங்களை வாமாசாரிகள் என்றழைத்துக் கொண்டனர். ஆசை பிடித்துக் கொண்டால் ஆளே நாசந்தான். வாமாசாரிகள் தங்கள் பஞ்சமகார வேலைக்குத் தகுந்த கவிகளையும், மந்திரங்களையும் செய்து தாந்திர ஏடுகளினிடையே செருகி விட்டார்கள். நமது கம்பராமாயணத்திற்கூட எத்தனையோ இடைச் செருகல்களும் அபத்தங்களும் காண்கின்றன. அவற்றைப் புடைத்தெடுத்து இதுவே கம்பன் கவிதை என்று இன்று ரசிக சிகாமணி டி. கே. சி தருகிறார். அவர் மேல் சில அகராதிப் புலவர் பாய்வதும் விநோதமே. அதுபோல் தாந்திர நூல்களில் புகுந்த ஆபாசங்களை நீக்கி திவ்ய தந்திரத்தைத் தெளிவாகக் காட்ட முன் வந்தவர்கள் நமது தமிழ் யோகிகள். இவருள் திருமூலர் தலை சிறந்தவர். மற்றும் பலர் உண்டு. இவர்கள் வடநாட்டிலும் சென்று நல்லறிவைப் புகட்டினர். சிலர் கேட்டனர். பலர் கேளாமலே கெட்டனர். தந்திர சாத்திரங்களிற் புகுந்த ஆபாசக் குப்பைகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு குடியர் குடித்தனர்; காமிகள் கற்பழித்தனர். பஞ்சமாகார அட்டூழியங்கள் சொல்லி முடியாது.

நான் திருமூல மந்திரத்திலுள்ள ஆதாரவிளக்கத்திற்கும் பூரண சக்தி விளக்கத்திற்கும் அனுபவங் காணத் தாந்திரயோகிகளை ஒருகால் நாடினேன். சுமார் முப்பது பேர்களைக் கண்டேன். அவருள் இருபத்தெட்டுப் பேர் மொடாக் குடியர்; ஸ்திரீலோலர், இவர்கள் எனக்கும் அமரவாழ்வளிப்பதாகப் பஞ்சமாகார உபதேசம் செய்து பார்த்தனர். நான் இவர்களுடன் பலமாக வாதாடி கண்டன நூல்கள் எழுதினேன். எனது திருமந்திர விளக்கத்தில் இச்சம்பவம் விளங்கும். இரண்டுபேர் குடிமட்டுமின்றி மாதர் சக்தியைக் கொண்டு நித்திய தேகம் பெறுவதாகச் செருக்கினர். பாவம் இருவரும் சொல்ல முடியாத நோயால் வருந்தி, எழுந்து நடக்கக் கூடச் சீவனில்லாமல் அகால மரணமடைந்தனர்.

சைதன்யர், தயானந்தர் முதலிய துறவிகள் வாமாசாரிகளைப் பலமாகக் கண்டித்தனர். சங்கர பகவத் பாதாசாரியரும் திருமூலருமே சரியான திவ்யதாந்திர ரகசியங்களை விளக்கியிருக்கிறார்கள். சங்கரரின் ஆனந்தலஹரியும், மூலர்திருமந்திரமும் சுத்த தாந்திர சாத்திரங்களாம். இராமகிருஷ்ண பரமஹம்ஸர் பைரவிபிராமணியுடன் தாந்திரம் பயின்று காமஜயம் பெற்றார். அவர் பயின்றதும் திவ்ய தாந்திரமே இல்லறத்தாருக்கு சிறந்தது. துறவிகள் இந்த வழியில் செல்லக் கூடாது. காளிதாஸ் வீட்டில் நடப்பது இதற்கு மாறான பஞ்ச மகாரக் கூத்துத்தான்.

36. பைரவி வட்டம்

காளிதாஸ்பாபு உயர்ந்த படிப்பாளி, சமுஸ்கிரதத்தில் வித்துவான்; ஆங்கிலத்தில் எம். ஏ.

பி. எல். வங்காளத்தில் பண்டிதர். அவருக்கு ஏராளமான பிதுராஜி தம் உண்டு, என்றாலும் தொழிலிலும் வாரிக்கொட்டிப் பணமூட்டை கட்டினார். அவர் பரம்பரையாக சக்தி உபாசகர். தாந்திர நூல்களை ஆராய்ந்து, அவர் அமர வாழ்க்கைக்கு அடிப்போட்டார்.

அவருக்கு சக்தி பைரவர் என்ற தாந்திரர் கிடைத்தார். பலே பஞ்சமகாரப் பேர்வழி. இந்த பைரவர் கோபத்திலும் பைரவரே! ஹாம் ஹூம் ஓம் காளி என்று அவர் பயங்கரத் தொண்டையை எடுத்து விட்டால் "ஐயா சபிக்க வேண்டாம் இதோ காணிக்கை" என்று கிரகஸ்த்தர் தந்து நமஸ்கரிப்பர். அவர் காளிதாஸின் பணச் செழிப்பை மோப்பம் பிடித்து வந்து பஞ்சமகாரத்தை உபதேசித்தார். பைரவர் மொடாக்குடியர்; குடிவெறியில் அவர் மதிமயக்கம் சப்தலோக வர்ணனையில் பிடித்து விட்டால் விடாது சத்யலோகம் வரையில் போய்க் கொண்டிருக்கும். அவரைச்சுற்றி சிஷ்யர்கள் திரித்துவரும் அண்டப்புளுகுகளுக்குக் கணக்கில்லை; சைவர் வந்தால் இவரே சிவன்; வைணவர் வந்தால் சாக்ஷாத் கிருஷ்ணபரமாத்மாவே இவர். உலகில் உள்ள பெண்களெல்லாரும் அவருடைய கோபிகைகளே என்று வர்ணிப்பார்கள். வர்ணனை கலிகாவதாரத்தை எட்டுவதும் உண்டு. அவர் செய்த அற்புதப் புருடாக்கள் அனந்தம். இந்த சக்தி பைரவர் தாந்திர சாதனத்தின் பெயரால் கெடுத்த பெண்களின் தொகை எண்ண முடியாது. இவரே காளிதாஸின் குரு. இந்த மகாகுரு சிஷ்யனுக்குப் புட்டி மேல் புட்டி ஏற்றித் தலை கிறுக்கிடச் செய்து, தாமுங் குடித்துப் பிறகு மாதரைச் சக்தி என்று மதுமாமிசங்களால் வழிபட்டுப் பிறகு அநியாயம் செய்யத் தூண்டிவிட்டார். இதுவே போகம்! இந்தப் போகத்தால் வரும் இன்பமே சக்தி ஆனந்தம். அந்த ஆனந்தமே அமரத்தன்மை என்று சமுஸ்கிறத சுலோகங்களை அடுக்கிய அடுக்கில் ஆள் மிரண்டு போனான். பஞ்சமகாரசித்திக்காக சிஷ்யன் பணம் பணமாக அள்ளிவிட்டான். பைரவர் தமது சக்தியைக் காளிதாஸரிடமே தந்து கூட்டுடன் சக்தி ஜோதியில் மறைவதாகச் சொன்னார். ஆனால் நீரிழிவால் உடம்பை உதறித்தான் இறந்தார்.

காளிதாஸ் பழைய வாமாசாரத்துடன் தனது நவநாகரிக மூளையையும் செலவிட்டு, ஒரு தந்திரக் கூட்டம் சேர்த்தான். அதில் உயர்ந்த உத்தியோகஸ்தரும் உல்லாச வாலிபரும் சேர்ந்தனர். பல வாலிபப் பெண்களும் ஆவலாகக் கலந்து கொண்டனர். இரவு ஒன்பது மணிக்கு மேல் இவர்கள் காளிதாஸ் வீட்டு மூன்றும் மாடியில் கூடித் தமது காரியத்தை நடத்தி வந்தனர். இக்கூட்டத்தில் ஆடல் பாடல் அமளியாக நடக்கும். ஒருதரம் காளிதாஸ் கல்கத்தா கலை மன்றத்தில் பிஜிலியின் நடனத்தைப் பார்த்து மோகித்தார். மறுநாள் அவளைத்தமது வீட்டில் நடம்புரிய ஏற்பாடு செய்து ரூபாய் 5000 பரிசளித்தார். அன்று முதல் இருவருக்கும் நேசம்; பிஜிலி, காளிதாஸ் மாளிகையிலேதான் இறங்குவது வழக்கம்; காளிதாஸ் கூட்டும் பைரவி வட்டத்தில் அவள் நடம்புரிவது வழக்கம். அதில் ஏராளமான வரும்படிக்கும் வழியுண்டு. அவள் அன்பு பொன் மதிப்புப் பெற்றது.

* * *

இரவு 8—45. காளிதாஸ் மாளிகை கலகலத்தது. மாடிமேல் பெட்டிகளும் புட்டிகளும் சென்றன; ஆடவரும் பெண்டிரும் கூடினர்.

அவருள் நமது மதன் பாபுவும் அடக்கமாக அமர்ந்திருந்தார். அவர் அங்கிருப்பவருள் ரயிலில் சந்தித்த காதல் ஜோடிகளும் இருக்கக் கண்டு வியந்தார். மணி 9; பளிச்சென்று மின்விளக்கணிகள் பல வர்ணங்களுடன் பொலிந்தன. தபிலா சித்தர், எஸ்ராஜ் முதலிய பக்கவாத்தியங்களுடன் கீதங்கள் தொடங்கின. "துறவறத்தை வெறுப்போம். பெண்ணில் பேரின்பங் காண்போம்" என்பதே பாட்டின் சாரம். திரை உயர்ந்தது; பைரவியின் கோர ரூபம் தோன்றியது. அந்த மாதிரி ஒரு பெண்ணைக் கண்டால் "ஐயோ பிசாசு" என்று நாம் ஓட்டம் பிடிப்போம்—கோரப் பல், முட்டைக்கண்; கொலைகார முழி, துருத்திய நாக்கு, பல்லெல்லாம் இரத்தச் சிவப்பு—குடம் போன்ற மார்பு, கையில் நீட்டிய வாள். போதும் வர்ணனை. இந்த பயங்கர உருவிற்கு காளிதாஸ் பைரவி மந்திரஞ் சொல்லி ஆராதனை செய்து மலர்தூவி, மதுமாமிசங்களை நிவேதித்தார். தட்டுத் தட்டாக மீன், புலால், புட்டி புட்டியாகச் சாராயம் எல்லாம் ஹூம் பம்பொம் என்று மந்திரங்கள் சொல்லிச் சங்கு முழங்கி நிவேதனமாயின. உடனே இருபாலாரும் பைரவிக்கு மலர்தூவி மது மாமிசப் பிரசாதம் தட்டிலும் புட்டியிலும் வாங்கி யுண்டனர். அப்போது ஆவேசப் பாடல்கள் முழங்கின. ஆஹா பைரவி பிரஸன்னமாய் விட்டாள். துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்கிருள் "ஹா பைரவிகள் இங்கே இறங்கி விட்டது என்று காளிதாஸ் குடும்பங்கள் கூச்சலிட்டு ஆவேசம் பிடித்து புட்டிகளைக் காலி செய்தனர். திடீரென்று விளக்கணைந்தது. ஐந்து நிமிஷங் கழித்து மீண்டும் வெளிச்சம்; ஹாலின் நடுவே ரவிக்கைகள் குவிந்திருந்தன. ஆண்கள் ஆளுக்கொரு ரவிக்கையை பைரவி பாதத்தில் வைத்து எடுத்துக் கொண்டனர். அந்த ரவிக்கைக் குரிய பெண் வந்தமர்ந்தாள். அவளே அவனுக்குச் சக்தி; இதில் தன்னவள் பிறர் சாதி மத பேதங் கிடையாது. எல்லாரும் வட்டமாயமர்ந்ததும், அவரவர் இஷ்டம் போல வணங்கினர்; பெண்களும் ஆண்களை வணங்கினர்; ஒருவருக்கொருவர் மீன்—ஊன்—மது—பரிமாறிக் கொண்டனர். பலமாகப் புட்டி எறிய பின் மான மேது, வெட்க மேது; ஆடை போன இடங்கூடத் தெரியவில்லை. வீடெல்லாம் ஏகக் களியாட்டம். இதற்கெல்லாம் நடுநாயகி யானவள் பிஜிலி. அவள் காளிதாஸருடன் ஊழி நடனம் புரிந்தாள்.

குடியரெல்லாம் சபாஷ் பாஹ்வா என்று எக்களித்தனர். பிஜிலி மேல் பைரவி வந்து விட்டது. (குடி வெறிதான்) "ஹா இன்று என் பக்தன் வந்திருக்கிறுன். அவனுக்கு அமுதமளிப்போம்; ஆனந்த மளிப்போம்" என்று தங்கக் கிண்ணத்தில் ஷாம் பைன் ஊற்றித் தந்தாள்.

மதன் பாபு—சுத்த ஏமாளி—அதை வாங்கிக் குடித்து மூளை மயங்கி பரதேவதே நீயே என்னைக் காப்பாற்ற வேண்டும்; என் காணிக்கையை ஏற்க வேண்டும் என்று இலட்ச ரூபாய் நோட்டுகளை அவள் கையில் தந்து விட்டான்.

(தொடரும்)

இயற்கை இன்பம்:

கப்பல் அலைகள்

[வி. வாசுதேவன் எம். ஏ]

மூன்று வருஷத்துக்கு முன்பு என் சகோதரன் பம்பாயிலுள்ள கப்பல் டப்பரினில் "காடட்" டாகத் தொழில் பயிலச் சென்ற போது என் உள்ளத்தில் ஆனந்த அலைகள் எழுந்தன. வருங்காலத்தில் நமது இளைஞர்கள், கப்பல் தொழிலில் சிறந்த நிபுணர்களாக விளங்கி உலகெங்கும் நமது வெற்றிக் கொடி நாட்டிவரும் அற்புதக் காட்சியைக் கற்பனை பண்ணுவது ரொம்ப ஆனந்தம் தரத் தக்க விஷயந்தான். நிற்க

என் சகோதரன் விடுமுறை நாட்களில் வரும்போதெல்லாம், "எப்படி நாட்கள் கழிகின்றன" என்ற விவரத்தைக் கேட்பது வழக்கம். சென்ற மாதம் அவன் சொன்னதைக் கேட்கவும், நானே அந்த கப்பலின் தளத்திற்குச் சென்று விட்டது போலவும், நீலக் கடலின் அலைகள், என் நெஞ்சில் ஒலிப்பது போன்றும், "கப்பல் அலைகள்" என் மனதிலே உல்லாசமாக ஒலிக்க ஆரம்பித்தன.

அருணோதயத்தில் கப்பலிலிருந்து பம்பாய் நகரைப் பார்ப்பதே ஒரு பரவசக் காட்சியாம். அப்போது, காலை அமைதியிலே துளி அலைகூட மேலும் கீழும் அசையாது. கப்பல் தளத்திலிருந்து நகரைப் பார்த்தால், நகரம் ஒரு கனவு பூமி மாதிரி, மங்கலாகக் காட்சி தரும். காலைக் கதிர்கள் மெள்ள மெள்ள, கடற் கன்னியையும், நில மகளையும் முத்தமிட ஆரம்பித்தவுடன், வெள்ளிப் பொடி தூவியது போல் மின்னல் ஒளி எங்கும் பாய ஆரம்பிக்கும். அந்த அருமையான அருணோதயத்திலே சாந்தி தேவியை மகிழ்விக்க இசைக்கும் இசைச் சித்திரமாக, கட்டுமரங்களிலே மீன் பிடிக்கச் செல்லுவோர், கீதம் இசைத்துச் செல்வார்கள். நாமும், ஒரு படகுக் காரராக ஆகி விடக் கூடாதா? அலைகளோடு படகுகளோட்டிக் கொஞ்சி விளையாடலாமே என்று மனந் துள்ளிக் களிக்கும். காலைக் காட்சியிலே கற்பனையைச் செலுத்தி, மெய் மறந்து மோன மயக்கிலே மூழ்கி விட முடியுமா! பிறகு, தொழில் ஆராய்ச்சி, படிப்பு, சாப்பாடு, மற்ற முறையான காரியங்கள்; அப்புறம், மாலைக் காட்சி மனமோகனமாக உள்ளத்தைக் கொள்ளை கொள்ள ஆரம்பித்து விடுகிறது.

நிலவு வெளிச்சம் வீசும் நாட்களாக இருந்தால்! ஆகா! அந்த வர்ணனையை எப்படிச் சித்திரிப்பது? எத்தனையோ இரவுகளில் ஆகாயத்தைப் பார்த்தபடி கனவு உலகில் சஞ்சரிப்பதுண்டு. சுற்றிலும் நீலக்கடல். மேலே நட்சத்திரம் பதித்த வானம், எங்கும் வீசுவதோ இளந் தென்றல். பிறகு வேறு என்ன வேண்டும்?

கண் எதிரே நமது சுதந்திரக் கப்பல்க்ள் செல்லும் சுந்திரக் காட்சி. அடடா! நமது இளைஞர்களின் வீரத்தை என்ன வென்று மெச்சுவது!

இந்த மாதிரி தம்பி கதை சொல்லிக் கொண்டு வந்தால், உடனே, "கப்பல் அலைகள்" நம் மனதிலும் உதிக்குமா உதிக்காதா?

வர்ணவிசித்திரம்

[ஊ. பா. குமாரசாமி]

மங்கிய நிலவொளியிலே உன்னை முதல் முறையாகக் கண்டேன்.

ஆனல் உன்னை முன் ஜன்மங்களில் பார்த்த ஞாபகம் வந்ததாக நான் நினைக்க வில்லை.

உனது சகோதரனுடன் நீ வந்த போது நான் உன்னைப் பார்த்தேன்.

ஆனல் நீ அன்ன நடை நடந்து வந்ததாகவோ, மான் போல் துள்ளி வந்ததாகவோ, நான் சொல்ல வரவில்லை.

நீ சாதாரண பாலிகையாகவே வந்தாய்.

என் பார்வை உன் பக்கம் திரும்பியது.

ஆனல் 'பட்டுத் தெரிக்க வில்லை!' உனது நீண்ட கருவிழிகளோ, கார் இருங் கூந்தலோ, முல்லைப் பல்வரிசையோ, மோகன முறுவலோ, என்னை வசீகரிக்க வில்லை. நீ நடந்த தனி நடையே அதன் காரணம். ஆனல் அதன் பின்னரும் நான் உன்னை நினைத்துக் கொண்டிருந்ததன் காரணம்? அது என் மனதைத் தான் கேட்க வேண்டும்.

இந்த உயர்ந்த ஜீவியத்தின் ஒரு பகுதி தேய்ந்தது.

வழக்கம் போல் சிந்தனை தேவனுடன் மகிழ்ந் திருந்த என்னைத் திருப்பியது ஒரு சிரிப்பொலி.

தவறி விழுந்த தாம்பாளத்தின் ஓசை போன்ற அந்தக் 'கலகல' ஒலி தெரு முனையை எட்டிப் பிடித்தது.

அட! அது யார்?

நீ தானு?

நீ தான்; வந்து நான்கு நாட்களுக்குள், பள்ளியில் சேர்ந்து, ஊரில் சிநேகிதிகளையும் சேர்த்துக் கொண்டு, தெரு அதிர சிரிக்க ஆரம்பித்து விட்ட நீ,

வரும்போது மட்டும் ஏன் மேலாக்கு அணியவில்லை? இங்கே வந்ததும் "கு மா ரி" ஆகி விட்டாயோ: உன் அடைமொழியை "பாலி"கையிலிருந்து "குமாரி" ஆக்கியது யார்? பருவமா? காலமா?

இப்பொழுது தான் 'நீ யார்?' என்று என் மனம் கேட்கிறது.

ஆனல் நீ யார்?

அது எனக்குத் தெரியாதே!

அன்று உன்னைப் பார்த்ததால் நீ தான் என்று தெரிகிறது. ஆனல் உன் பெயர்? மற்றும் உன் விருத்தாந்தங்கள்?

அட! முட்டாள் மனமே, பெயரும் விருத்தாந் தமும் எதற்கு? அதற்குள் அவளைப் பற்றி உனக்கு ஆகவேண்டியது என்ன?

என்னவோ ஒரு உணர்ச்சி.

இதற்குள் நீ என்னைத் தாண்டிச் சென்று விட்டாயா? என்னைக் கவனித்தாயா?

இதற்குப் பதிலைக் காணோம்.

அதோ; தூரத்தில் உன் சிரிப்பு அலைமோது கிறது:

நீ வரும் நேரத்திற்கு அந்த இடத்திற்கு என் கால்கள் தம்மிச்சையாக வரும்படி அவைகளை எது கட்டுப்படுத்தியது? புகைப் படலமாகத் தோற்றும் தூரத்தில் கூட உன்னை மட்டும் பிரித்துக் கண்டு கொள்ள கண்களுக்கு எங்கிருந்து சக்தி வந்தது?

எழுதிக் கொண்டிருப்பதைத் தவிர வேறு அறியாத இந்தக் கைகளுக்கு கலைந்து கிடக்கும் 'சுருளை' ஒதுக்க அவகாசம் எப்படிக் கிடைத்தது?

"என்னை யாராவது கவனிக்கிறார்களா?"

'ஏன்: நான் என்ன தப்பிதம் செய்தேன்'

ஏன் இப்படி மனம் நடுங்குகிறது?

நீ வரும் போது என் செய்கைகள் ஏன் அவ் வளவு அசட்டுத் தனமாக இருக்கின்றன? இது இயற்கை தானு?

'எந்த மகானுபவன் எனது தமிழறிவைப் பற்றி உனக்குச் சொன்னனே'?

'முகமறியாத அவனுக்கு எனது நன்றி கலந்த வணக்கங்கள்.'

சிலப்பதிகாரம் பகுதிக்கு என்னை விளக்கம் கேட்க வந்தாயே; அன்று:

"கொஞ்சம் இதைச் சொல்லிக் கொடுங்கோ"

'அப்பா! உன்னுடன் பேச ஆரம்பிப்பதற்குள் நான் பட்ட பாடு!'

ஒரு விதமாக "கானல் வரியைச்" சொல்லி முடித்தேன். அன்று கழிந்தது.

பின்னும் நாட்கள் வந்தன. நீயும் வந்து போனய்.

"உங்கள் பேச்சு எவ்வளவு லளிதமாக இருக்கிறது."

இது நீ.

"ஆம். கலா (இது உனக்கு நான் இட்ட 'கலாவசனியின்' சுருக்கம். உன் மூலப் பெயர் என்ன? உன்னை இன்னும் கேட்கக்கூட வில்லையே!) உனக்குச் சொல்லித் தருவதில் எனக்கு பெரு மகிழ்ச்சி"

"நானும் உங்களைப்போல் பேச வேண்டும் அதற்குச் சொல்லிக் கொடுங்களேன்."

நான் சிரித்த அந்தக் குதூகலச் சிரிப்பு! என் வாழ் நாளில் அந்த மாதிரி மனம் நிறைந்த சிரிப்பு சிரித்ததுண்டா? என் 'குரல்' எப்படி அவ்வளவு ரம்யமாயிருந்தது?

உனது ஆச்சர்யப் பார்வை!

அதன் பின் நாம் இருவரும் சேர்ந்து எழுப்பிய அந்த ஓசையால்; பாவம், கூட்டிலிருந்த குருவிக் குஞ்சுகள் பயந்து தலையை வெளியே நீட்டி தம் மிரண்ட கண்களால் நம்மைப் பார்த்தபோது "நேரமாகிறது. நான் போகிறேன்" என்ருய் நீ.

ஒரு நாள் உன்னைக் காணவில்லை. துடிக்கும் மனத்துடன் சங்கோசத்தால் அடைத்துப் போன தொண்டையுடனும் உன் சினேகிதிகளைக் கேட்டேன். "எங்கே காணோம்?"

அவர்கள் சொன்ன பதில், 'புதுப் பூவைப் பார்ப்பது அரிது!'

அந்த ஓடையின் மணலில் இனி என் கால்கள் மட்டுந்தான் பதியுமா?

மாலையின் மயக்கத்திலே மறையும் சூரியனின் அந்தி நேரப் பிரிவின் போது வழியனுப்பும் வானப் பெண்ணின் சிவந்த கன்னங்களைக் காணுவது இனி நான் மட்டுந்தானா?

விளக்கடியிலே காவிய ரசிப்பின் போது இனி சுவரில் என் ஒருவனது நிழல் மட்டும் தான் படியுமா?

ஒளிக்கதிர்களை வாரி வீசிய கதிரவனை முகிற் கூட்டங்கள் மறைத்தன.

தலைகால் தெரியாமல் பறந்த சூறை அடங்கி நின்றது. அமைதியான தென்றல் வீசியது.

நீ இருக்கும் தெருவிலே முன்பு புரண்டோடிய அந்தக் குதூகல வெள்ளம் எங்கே?

காலைச் சூரியனின் இளங் கிரணங்கள் சிருஷ்டித்த அந்த வர்ண ஜாலங்கள் எங்கே?

"இந்த ஊர் போதாது; என் அட்டகாசத்தைத் தாங்க" என்று கொட்ட மடித்த உன்னை எப்படி ஒரு அறை தாங்கி யிருக்கிறது?

நான் விடும் ஏக்கப் பெரு மூச்சால் சூடேறிய காற்று என்றேனும் உன் அறைப் பக்கம் வந்ததுண்டா?

'வந்திருந்தால் தான் உன்னைக் கண்டிருக்கலாமே'

அங்கிருக்கச் சகியாமல் சிறிது நாள் வெளியூர் சென்று திரும்பிய போது வழியிலுள்ள அந்த ஓடையின் சலசலப்பு ஏன் என் காதுக்கு ரமிக்கவில்லை?

வெரிச் சோடிய தெருவிலே நடக்க என் கால்கள் சக்தி இழந்தனவா?

உன் வீட்டுக் கதவின் வெளிப் புறத்தில் அது என்ன!

அந்தப் பூட்டு இது வரை அங்கிருந்ததில்லையே!

ஆம். புரிந்தது: நீ அங்கில்லை.

தளர்ந்த என் நடைக்கு முட்டுக் கொடுத்தாள் உன் தோழி.

"விமலா ஊருக்குப் போயாச்சே தெரியுமா?"

மௌனமாகத் தலை யசைத்தேன்.

மொட்டைப் பனைமரம்! தனது தனிமையை அறியாது. ஆனால் பார்ப்பவர்களுக்குத் தெரிந்தது. ஒரு நாள்.

அந்த குதூகலமான மாலை நேரத்திலே மற்ற மரங்கள் எல்லாம் தம் ஓலைகளைச் சூட்டி சாய்ந் தாடிக் கொண்டிருக்க அது தன் மொட்டைத் தலையுடன் வருந்தி நின்றது.

எங்கிருந்தோ — கண்ணைப் பறிக்கும் அவ்வளவு பச்சையல்ல — மீண்டும் பார்க்க ஆவலூட்டும் நிறத்துடன் ஒரு கிளி வந்தது.

ஏதோ நினைப்பில் அந்த மொட்டைப் பனையின் மீது உட்கார்ந்தது. ஒரு கணம் தான்.

எனினும் அப்போது அந்த பனையைப் பார்த்தவர்கள் "ஏது! பனை துளிர் விடுகிறது போலிருக்கிறதே!" என்று வியந்தார்கள்.

கிளி தன் மூக்கை பனையில் தேய்த்தது. ஓரிரு முறை கொஞ்சும் தன் குரலை வெளியிட்டது.

பறந்தது: பனையை விட்டு அப்பால் பறந்தது.

சென்று மறைந்தது.

மீண்டும் தனிமை. அதே மொட்டைப் பனை மரம் தான்.

தேவி! ஏ பசுங்கிளியே! நீ எங்கிருக்கிறாய்? இந்த அன்புக் குரலின் எதிரொலி உன் உள்ளத்தில் எதிரொலிக்கின்றதா?

* * *

கதம்பம்

[சரசுவதிபாசு]

குடிசையின் திண்ணையில் உட்கார்ந்திருந்தாள் பாக்கியம். அவள் முகம் பசியின் கொடுமையாலும், தாளாத துக்கத்தாலும் வாடிவதங்கியிருந்தது. அவளுடைய கண்கள் சுற்றுப்புறமுள்ள பூந்தோட்டத்தை ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தன. அடுத்தாற்போல் ஒரு நீண்ட பெருமூச்சு இருளடைந்த அவள் உள்ளத்திலிருந்து கிளம்பியது.

சற்று தூரத்தில் அவளுடைய பெண்ணும், பிள்ளையும் மணலால் சிறுவீடுகட்டி விளையாடிக்கொண்டிருந்தார்கள். உமா அவள் கட்டிய மண் வீட்டில் விக்கிரகத்திற்கு பதிலாக ஒரு கல்லைக் கொண்டு வந்து வைத்தாள்.

"டே சாமி! பிள்ளையாருக்குப் பூசை செய்யணும். சீக்கிரமாகக் கடைக்குப் போய் வெற்றிலை பாக்கு, பூ, பழம், கற்பூரம் எல்லாம் வாங்கிவா" என்றாள்.

சிறிது நேரத்திற்குள் சாமி வெற்றிலைக்கு பதிலாக சில இலைகளும், பாக்குக்குப் பதிலாக கருப்புக் கற்களும், கற்பூரத்திற்குப் பதிலாக சுண்ணாம்புக் கட்டியுடனும் வந்துசேர்ந்தான். 'பூ எங்கேடா?' என்று கேட்டாள் உமா. உடனே சாமி தன் குடிசைக்குள் ஓடி, அழகாகக் கட்டியிருந்த கதம்ப செண்டுடன் ஓடி வந்தான். அக்காவும் தம்பியுமாக தங்கள் சுவாமிக்கு அந்தப் பூவை வெகு அழகாகச் சூட்டினார்கள்.

கொஞ்ச தூரத்தில் மௌனமாய் உட்கார்ந்திருந்த தாயின் பார்வை இங்கு விழுந்தது. அவள் மனதில் ஒரு சிறிய ஆறுதல். அந்த மட்டும் கதம்பம் வீணாக வாடிப்போய் விடாமல் குழந்தைகள் விளையாடவாவது உதவிற்றே என்று நினைத்தாள். தென்றல் காற்றில் லேசாகக் கலந்து வந்த மல்லிகையின் மணம் அவள் மனதைக் குளிரச் செய்தது.

துரதிர்ஷ்ட வசமாக நான்கு நாட்களாய் அவள் கட்டும் கதம்ப மாலை விற்பனையாகவில்லை. வீட்டிலிருந்த அரிசி குழந்தைகளுக்கே போதவில்லையென்றால் அவள் எங்கனம் சாப்பிட முடியும்?

அந்தக் கதம்பம்தான் அவளுக்குச் சர்வமும். வயிற்றுக்கும் துணிக்கும் அதுதான். அது மட்டுமா? ஆண் துணை, உறவினர்கள் யாவும் கணவனற்ற அவள் வாழ்க்கையை ஆதரிப்பதும் கதம்பம்தான். அவள் இந்த வெளி உலகத்தோடு கலந்து கொள்வதே கிடையாது. வெட்டிப் பேச்சும் வீண் சண்டையும் அவளிடம் இல்லை. பகல் பூராவும் பூச்செடிகளுக்குப் பாத்தி கட்டுவதும், தண்ணீர் வார்ப்பதும், பூப்பறிப்பதும், கட்டுவதும்தான் அவள் வேலை. இரவு நேரத்திலும் அந்தப் பூக்களின் வாசனைதான் அவளுக்குத்துணை. எந்த நேரமும் பூந்தோட்டத்தின் மணத்தை அவள் மனதார அனுபவித்து வந்தாள்.

தினம் மாலையில் பல ரகமான பூக்களைப் பறித்துக் கதம்ப மாலையாகக் கட்டுவாள். உமாவும், சாமியும் அதைக் கொண்டு போய் கிராமத்தில் விற்று பணம் வாங்கி

வருவார்கள். அதன் மூலம் தான் அவள் சீவனம்.

ஏன்? அவள் கணவன் அவனுடைய அந்திய காலத்தில் காட்டிய வழியும் இதுதான்.

அன்று படுக்கையில் படுத்து எவ்வளவு நேரம் புரண்டாலும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை "பாழும் சோற்றுக்குத்தான் என்னைக் கண்டால் பிடிக்கவில்லையென்றால், இந்த மூதேவித் தூக்கத்திற்கும் அப்படித்தானா?'' என்று ஏங்கியது அவள் மனம். இமைப் பின் மேலிட்டால் அவள் கண்கள் சுழன்றன.

அந்த அர்த்த ராத்திரியில் குடிசையை விட்டு வெளியே வந்தாள் அவள். பூரண சந்திரன் பால் போல பிரகாசித்துக் கொண்டிருந்தான்.

மா மரத்திலிருந்து ஒரு மாங்காயைப் பறித்து அங்கேயே தின்று பார்த்தாள். ஒரே புளிப்பு.

* * *

அவளுடைய பூர்வீகம் அவள் மனத்திரையில் தோன்றியது. அவளுக்கு ஏழு வயதிலிருந்தே பக்கத்து வீட்டு ராமனுதனோடு சிநேகம். இருவரும் ஒரே பள்ளிக்கூடத்தில் ஐந்தாவதுவரை ஒன்றாக வாசித்தார்கள். மாலை வேளைகளில் இருவரும் பாண்டி, கண்ணமூச்சி இன்னும் எத்தனையோ விளையாட்டுக்கள் விளையாடுவார்கள் பழக்கத்தினால் இருவருக்கும் அத்யந்தமான அன்பு. விளக்கேற்றியவுடன் ஒரே விளக்கெதிரில் வாசிப்பார்கள். எப்பொழுதும் ஒரே சிரிப்பும், கும்மாளமும் தான். அவளுக்கு பளிச்சென்று ஞாபகம் வந்தது. ஒரு நாள் பாக்கியம் ராமனின் கண்களைத் துணியால் மறைத்துக் கட்டிவிட்டு தன்னையும் தன் சிநேகிதிகளையும் பிடிக்கச் சொன்னாள். ராமன் இரண்டு கைகளையும் அகல விரித்துக்கொண்டே பாக்கியத்தை தேடிப் பிடிக்க முயன்றான். பாக்கியத்தின் தாய் அந்த வழியில் ஏதோ வேலையாகப் போனாள். அந்த அம்மாவை ராமன் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு 'இதோ பாக்கியம் கிடைத்து விட்டாள்' என்று சந்தோஷத்தோடு கத்தினான். எல்லோரும் அவனுடைய முட்டாள் தனமான ஏமாற்றத்தைக் கண்டு கொல்லென்று சிரித்து விட்டார்கள்.

கண்ணமூச்சி ஆட்டம் நினைவுக்கு வந்ததும் அவள் முகத்தில் லேசாக புன்னகை தோன்றியது. அந்த நாட்கள் ஓடி விடாமல் மாறாமலிருக்கக் கூடாதா என்று நினைத்தாள். மற்றொரு சம்பவம். ஒரு நாள் அவள் கையில் மிட்டாய்கள் வைத்திருந்தாள். ராமன் அதில் தனக்கொன்று கொடுக்கும்படி கெஞ்சினான். இவள் பிடிவாதமாக முடியாது என்றாள். அது இப்பொழுது அற்பமான செய்கையாக அவள் மனதிற்குத் தோன்றிற்று. இதைப் போன்ற விஷயங்கள் அவள் ஞாபகத்திற்கு வர அவள் கண்களினின்றும் கண்ணீர் கசிந்தது.

பாக்கியம் கொஞ்சம் பெரியவளானதும் அனுவயமாக விளையாட, பேசக் கூட அவள் கூச்சப் பட்டாள். ஆனால், என்ன காரணத்தினாலோ ராமனுதனோடேயே இருக்க மனதில் ஆவல் கொண்டாள். எப்போதாவது புதிய உடுப்பு உடுத்திக் கொண்டால், அதை ராமனுதனுக்குக் காட்டி அவன் அபிப்பிராயத்தை பெற துடியாய்த் துடிப்பாள். அவள் பள்ளிக்கூடத்தை

விட்டு நின்று விட்டாள். வீட்டை விட்டு வெளியே வருவதே கிடையாது. ராமநாதனில்லாத நேரம் அவளுக்கு சூனியமாகத் தோன்றியது.

பாக்கியத்திற்கு விவாகம் நிச்சயமாகி விட்டது. நடு சமுத்திரத்திலிருக்கும் படகோட்டி ஒருவன் திக்கு திசை தெரியாமல் துடிப்பது போல் மனம் துடித்தது. அவளுக்கு, பெற்ற தாயிடம் மனதை வெளிப் படுத்தக் கூடத் தைரியமில்லை. அவன் வேறு ஜாதியானுயிற்றே! அதெப்படி அவள் தாய் அவனை விரும்புவாள்?

கல்யாணத்திற்கு ஊர்வலமெல்லாம் முடிந்து மாப்பிள்ளை வந்தாகி விட்டது. பாக்கியம் மெள்ளப் புறப்பட்டு தனியாக தோட்டத்திற்குப் போனாள். என்றும் போல்தான் சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருந்தான்.

பக்கத்து வீட்டுத் தோட்டத்தில் ராமநாதன் உட்கார்ந்திருந்தான், அவனைப் பார்த்த பாக்கியம் நிலை தடுமாறிப் போனாள். அவள் மனம் படபட வென்று அடித்துக் கொண்டது. அந்த இடத்தை விட்டு நகரக் கூட முடியாமல் அப்படியே ஸ்தம்பித்துப் போய் விட்டாள். ராமன் அவளருகில் வந்து விட்டான். "பாக்கியம்" அவன் நாக்கு தழுதழுத்தது. குரலில் ஏமாற்றம். பாக்கியம் நிமிர்ந்து அவனைப்பார்த்தாள். ராமனின் கண்கள் பார்க்கப் பரிதாபமாயிருந்தன. அவள் கண்களிருலிருந்தது கண்ணீர் ஊற்றுச் சுரந்தது.

"பாக்கியம்! இப்பொழுதுகூட ஒன்றும் முழுகிப்போய் விடவில்லை நீ என்னுடன் வரத் தயாராயிருக்கிறுயா? என்றான் அவன். அவள் கண்கள் மூலம் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். அந்த நேரத்தில் அவளால் வாய் விட்டு ஒன்றும் பேச முடியவில்லை.

* * *

அவளுடைய தூய்மையான காதல் ஜயித்தது. ராமனுதனுக்காக தன் பெற்றோர்களைக்கூட பிரியத் துணிந்து விட்டாள் அவள். உலகில் உண்மையான — தெய்வீகமான காதலுடையவர்கள் அவரவர்கள் காதலனுக்காகவோ, காதலிக்காகவோ எவ்வளவோ மகத்தான தியாகங்களைச் செய்கின்றார்கள். அப்படியிருக்க பாக்கியம் அவள் பெற்றோர்களைத்துறப்பதில் என்ன ஆச்சரியம்! அவர்களுக்கு உமாவும் சாமியும் பிறந்த கொஞ்ச நாட்களுக்கெல்லாம் டைபாயிட் ஜுரத்தினல் ராமநாதன் இறந்துபோய் விட்டான்.

அவன் இறக்கும்போது கடைசி வார்த்தையாக "பாக்கியம் நான் பாவியாகி விட்டேன். உன்னை நிர்க்கதியாக விட்டு விட்டு போகிறேன். நான் சொல்லும் வார்த்தையை நீ தட்டமாட்டாயென்று நினைக்கிறேன். நீ இனிமேல் உன் பிறந்தகத்திற்குப் போகாதே. நீ முன் அவர்களை ஏமாற்றி விட்டாய். தவிரவும், இந்த நிலைமையில் உன் பெற்றோர்கள் உன்னைப் பார்த்தால், என்னைப் பழிப்பதோடல்லாமல், உன்னைக் கண்டு அதிக துக்கமடைவார்கள். உன் ஜீவனத்திற்கு சாமி பெரியவனுகும்வரை, இந்தத் தோட்டத்தைத் தவிர வேறு வழி கிடையாது."

அவ்வளவு கஷ்டத்திலும் அவளுக்கு ஒருதிருப்தி.

மலர் மணம்

முகப்புப் படம் :

நாம் தினசரி பார்க்கும் தெருக்காட்சி ஒன்றை அருமைக் கீதமாக இசைத்திருக்கிறார் நமது கவி "கதிரவன்" அவர்கள்.

இந்த இதழில் இன்னும் சில கவிகள் அலங்கரித்திருப்பதைக் காணலாம். படைப்பின் ரகசியத்தைக் காணமுயலும் சி. எஸ். ஆர். இயற்றிய சுவைச் சித்திரமும், 'அம்பலவாணன்' இசைத்த நகைச் சுவைத் 'துறவு'ம் மிக்க ரசமுள்ளவை. 'அம்பலவாணன்' புதிதாக மலர்ந்த ஒரு இளங்கவி, கதாசிரியர், சிந்தனையாளர். கவிஞன் உள்ளத்தை தென்றலும், மலர் மணமும், வானும், கடலும் இவை மட்டுமல்லாமல் அன்றாட நடைமுறையிலுள்ள இப்போதைய 'ரேஷனும்' தொடும் சக்தியுள்ளது என்பதைச் சித்திரிக்கிறது அவருடைய 'துறவு!'

இலக்கிய ஆராய்ச்சியில் புரபஸர் ஸ்ரீ சக்கரவர்த்தி அவர்கள் கலையுள்ளத்தை நாம் அனுபவிக்க முடிகிறது. ஸ்ரீ சக்கரவர்த்தி அவர்களுடைய தேர்ந்த வாழ்க்கை அனுபவத்தையும் இலக்கியப் பண்பையும் மேலும் தொடர்ந்து ரசிகர்கள் அனுபவிக்கலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். 'வசந்தத்தை' அவருடைய அரிய கட்டுரைகள் அடிக்கடி அலங்கரித்து வரும்.

இளம் எழுத்தாளர்களான ஸ்ரீ ஊ. பா. குமாரசாமி, 'சுவான்' சிவஞானம், முதலானவர்கள் சுவையுள்ள கதை, கட்டுரைகளை எழுதி இருக்கிறார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, பண்டைக்காட்சிகளை அடிக்கடி ஞாபகமூட்டி வருகிறவர். இந்த இதழில் கல் வெட்டுகளைப் பற்றி மின் வெட்டுப் போன்ற இயற்கையான தம் நடையில் சித்திரித்திருக்கிறார்.

'பாரத ஜோதி' ஆசிரியர் ஸ்ரீ எஸ். ஆர். வெங்கடேஸ்வரன் நகைச் சுவை மிக்க கதை ஒன்றை சொற் சுவையுடன் இசைத்திருக்கிறார். கணிதப் பேராசிரியர் ஸ்ரீ வாசுதேவன், இயற்கை ஓவியத்தை எழுத்தோவிய மாக்க முயன்றிருக்கிறார்.

வழக்கமான பகுதிகளுடன் மற்றும் பல களிப்பூட்டும் கலைப் பகுதிகளையும் காணலாம்.

—ஆசிரியர்.

இண்டோ-கமர்ஷியல் பாங்க் லிமிடெட்.,

1944-வரு ஜூன்-மீ 30உ-ய கணக்கு விவரம்

பொறுப்புகள்

மூலதனம் :	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
அதிகாரம் பெற்றது ...	25,00,000	0	0			
ரொக்கத்திற்குக் கோரப்பட்ட மூலதனம் ...	21,25,000	0	0			
கோரப்பட்டு செலுத்தப்பட்டது ...				18,75,000	0	0
ரிஸர்வ் நிதி ...				2,25,000	0	0
அவசர நிதி ...				25,000	0	0
வரிகளுக்காக ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளது ...				1,00,000	0	0
பொறுப்புகள் :						
பிக்ஸட், கரண்டு, சேவிங்ஸ் பாங்க், மாதவாரி டிபாஸிட், கியாஷ் ஸர்டிபிகேட், சிப்பந்திகள் ஜாமீன், பிராவிடெண்ட் கிராட்டியூட்டிநிதி மற்றும் இதர பொறுப்புகள் ...				2,04,98,403	2	5
பாங்குகளுக்குக் கொடுக்க வேண்டியவை ...				Nill		

ஆஸ்திகள்

	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
கடன்கள், காஷ் கிரெடிட், பில்கள், டிராப்டுகள், புரோ நோட்டுகள் இதர அட்வான்சுகள் முதலியன ...				1,12,35,294	8	4
1913 வருத்திய இந்திய கம்பெனிகளின் சட்டம் VII-ன் படி தேவையான விவரங்கள்:						
1. பாங்கிக்குப் பூர்ணமான செக்யூரடியுள்ள கடன்கள் ...	77,82,273	5	8			
2 நல்ல கடன்களென்று மதிக்கப்பட்டு ஆதரவுள்ள கடன்கள்						
(A) ஜாயிண்டு & தனி புரோ நோட்டுகள் ...	12,22,358	2	0			
(B) பலர் தனித்தனியாக எழுதிக் கொடுத்த புரோ நோட்டுகள் ...	4,75,058	0	9			
(C) பில்கள், டிராப்டுகள் ...	17,03,730	1	8			
(D) தற்காலிக ஓவர் டிராப்டுகள் ...	27,039	4	8			
3. சந்தேகபபடத்தக்க கடன்கள் ...	24,835	9	7			
4. டைரக்டர், ஆபீஸர்களது கடன்	Nil					
தற்சமயமாவது எப்பொழுதாவது டைரக்டர்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்கள், அட்வான்சுகள் ...	Nil					
பாங்கி கட்டிடம்:						
வாங்கின விலை ...	24,379	3	5			
31-12-43வரை தள்ளுபடி செய்யப்பட்டது ...	4,200	0	0	20,179	3	5
ஸேப்கள் மரதளவாடங்கள் :						
வாங்கின விலை ...	1,01,424	4	7			
இந்த அரை வருஷத்தில் வாங்கினது	1,007	1	1			
	1,02'431	5	8			

பெற்றுக் கொள்ளாத டிவிடெண்டுகள் ...				2,904	8	0
வசூல் பில்கள் ...				10,66,178	9	6
பிராஞ்சு அட்ஜெஸ்ட்மெண்டுகள்				3,76,566	6	8
வழங்கப்பட்ட டிராப்டுகள் தந்திகள் ...				2,52,597	0	10
சில்லரை இனங்கள் ...				25,031	2	0
லாப நஷ்டக் கணக்கு :						
முன் கணக்குப்படி பாக்கி ...	5,111	3	1			
நாளது அரை வருஷத்திய... நிகர லாபம்	2,21,292	8	1	2,26,403	11	2
ஆகமொத்தம் ரூ.				2,46,73,084	8	7

இந்த அரை வருஷத்தில் விற்றது...	418	3	11			
	1,02,013	1	9			
31—12—43 வரை தள்ளுபடி ...	35,411	2	5	66,601	15	4
கைவசமுள்ள புஸ்தகம் ஸ்டேஷனரி				45,020	5	4
வசூல் பில்கள் ...				10,66,178	9	6
சில்லறை இனங்கள் ...				3,48,823	4	11
முதலீடுகள் :						
* கவர்ன்மெண்ட் புரோநோட்டு, எழுதப்பட்ட மதிப்பு ரூ. 48,74,500 (மார்க்கெட் மதிப்பு ரூ. 48,90,382 3 0)						
வாங்கின விலை ...	48,54,297	11	4			
ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளது ஷேர்களின் மதிப்பு (மார்க்கெட் மதிப்பு ரூ. 47,880 0 0 வாங்கின விலைப்படி ...	37,265	10	0			
ஷெட்யூல்ட் பாங்கிகளிலுள்ள சிப்பந்திகள் செக்யூரடி ...	14,725	0	0	49,16,288	5	4
முதலீடுகளில் சேர்ந்துள்ள வட்டி				56,487	3	1
கைவசமுள்ள ரொக்கம் ...	30,85,064	7	11			
கரண்டு கணக்கில் பாங்கர்களிடம் ...	38,33,146	9	5	69,18,211	1	4
* ரூ. 65,000 மதிப்புள்ள கவர்ன்மெண்ட் பிராமசரி நோட்டுகள் சிப்பந்திகள் பிராவிடெண்ட் நிதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.						
ஆகமொத்தம் ரூ. ...				2,46,73,084	8	7

டைரக்டர்கள்.

R. S. A. சங்கர அய்யர் **T. R. வெங்கட்ராம சாஸ்திரி** **R. விஸ்வநாதன்** **S. N. N. சங்கரலிங்க அய்யர்**

K. சிவசாமி சேர்மன் **V. வெங்கட்ராமன்** மானேஜிங் டைரக்டர்

P. S. **சுப்பிரமணிய அய்யர்** B. A., G. D. A., R. A. ரிஜிஸ்டர்டு அகௌண்டெண்டு & ஆடிட்டர்.

★

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹ்மதாபாத்

[illegible] விற்பனையாளர்கள் உள்ளனர்

AVI

★

குதூகல ஆரம்ப விழா

லியோ பிலிம்ஸார் தயாரித்த

ராமசாமி - ஜீவரத்தினம் கிருஷ்ணன் - மதுரம்

இன்னும் பலர் நடித்த

பூம்பாவை

12—8—44 முதல் கீழ்க்கண்ட இடங்களில் ஆரம்பம்

கோயமுத்தூர்	—	கர்னுடிக் டாக்கீஸ்
பாண்டிச்சேரி	—	சாமி பிக்சர் பாலஸ்
காரைக்குடி	—	ராமவிலாஸ் தியேட்டர்
வேலூர்	—	நியூ அபோ

18—8—44 முதல்

பாரகன் டாக்கீஸ்	—	மதராஸ்
தேவி டாக்கீஸ்	—	மதுரை

வினியோகிப்பவர்கள் :— கந்தன் & கம்பெனி,
கோயமுத்தூர், மதுரை, கோட்டயம்.

மைசூர் சமஸ்தானத்திற்கும், பெங்களூர் கண்டோன்மென்டிற்கும், வடக்கு தெற்கு கன்னடத்திற்கும் மைசூர் கார்ப்பரேஷன் பிலிம்ஸ், 196, காந்திநகர், பெங்களூர்.

உயர்ந்த பித்தளை வெங்கலப் பாத்திரங்களுக்கு
நம்பிக்கையான இடம்,

V. K. வெள்ளையப்ப செட்டியார்

பித்தளை தாமிரம் வியாபாரம் கடை வீதி, கோயமுத்தூர்.

வசந்தம் சந்தா

வருஷத்திற்கு ரூ. 6—0—0 தனிப் பிரதி 0—8—0

வசந்தத்திற்கு அனுப்பும் செக்குகள், மணியார்டர், போஸ்டல் ஆர்டர் முதலியவைகளில் 'மானேஜர், வசந்தம்' என்று குறிப்பிட வேண்டும்.

மானேஜர் :

வசந்தம், 4/12A திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் மதராஸ்

OVERSEAS REPRESENTATIONS

FRASER SQUARE.

COIMBATORE.

DEALERS IN ALL KINDS OF

HARDWARE, MILL STORES ETC.

A TRIAL ORDER WILL

CONVINCE YOU.

A. N. Marudachalam Chettiar

AND

A. Krishnaswamy Chettiar

AGENTS

Messrs. Burmah Shell Oil Storage & Distributing Co., of India Ltd.

COIMBATORE

B O C

BOC

Grades

DEPENDABLE

FIRM

FOR

Shell

Grades

THE PRODUCTS OF BURMAH SHELL

MOTOR SPIRITS : MOTOR OILS

GREASES : INDUSTRIAL

LUBRICANTS OF EVERY

DESCRIPTION

★

Fuel Oils : Candles : Shelltox

Etc., Etc., Etc.



Manufactured at : **A. P. R. Oil Mills, Fort, Coimbatore.**

KUPPURAJ

JEWELLER, COIMBATORE.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', gents', Children's Underwear Sport Shirts etc.

S. Beemiah Chetty.

"WHITE SHOP" COIMBATORE

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

ஆர்யவைத்தியர்

★

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

118, Oppanakara Street

Coimbatore.

Phone No. 155. Estd., 1921.

Proprietor

C. M. Subramanya Chettiar

CONTRACTOR

To

THE VASANTHA MILLS, LIMITED.

SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

K. B. R. JWELLARY

BIG BAZZAR COIMBATORE.

புதிய கடை!! புதிய சரக்குகள்!!

★ கல்யாண காலங்களுக்கும் மற்ற விசேஷ காலங்களுக்கும் வேண்டிய நானுவிதமான

ஜவுளி தினுசுகள்

வாங்குவதற்கு ஏற்ற இடம்

R. பத்மனுப நாயுடு சன்ஸ்

ஜவுளி வியாபாரம் : பெரியகடைவீதி

ஜெமேஷா கோவில் சமீபம்,

கோயமுத்தூர்.

★ 6, 7, 8, 9 கெஜங்களில் எல்லாவிதமான சேலை ரகங்களும், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி, வாயில் முதலிய ரகங்களும் ஏராளமாக வந்திருக்கின்றன. தங்கள் தேவைக்கு விஜயம் செய்யுங்கள்-

199798

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sandaram at 4./12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam

போன் 218A தந்தி "ராஜா"

அபூர்வ ஆபரணங்கள்!

வனப்புள்ள வைரங்கள்!!

P. A. ராஜா செட்டியார் & பிரதர்

கடைத்தெரு : கோயமுத்தூர்

—: தபால்பெட்டி 139 :—

சென்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்

கோயமுத்தூர்

[stamp] -7 OCT 1944

நவீன யந்திர சாதனங்களைக் கொண்டு தென்
இந்தியாவிலேயே மிகப் பிரக்யாதி வாய்ந்த
அநேகம் தமிழ்ப் படங்களைத் தயாரித்த
இணையற்ற ஸ்டுடியோ!

★

இப்பொழுது தயாராகி வரும் படங்கள்.

★

ஹரிதாஸ்	— ராயல் டாக்கீஸ்
வால்மீகி	— சென்ட்ரல் ஸ்டுடியோஸ்
சாலிவாகனன்	— பாஸ்கர் பிக்சர்ஸ்

★

மற்றும் இரு அற்புதமான தமிழ்ப் படங்கள்

★